உ

# அகலிகை வெண்பா

## அதன் வசனத்துடன்

சென்னைப் பிரஸிடென்ஸி
ஸிவில் வெற்றெறிநெறி டிபார்ட்டுமெண்டு
டிப்டி ஸூப்பிரிண்டெண்டும்
இந்துதேசத்துக் கால்நடைக்காரர் புஸ்தகம்,
நெல்லைச் சிலேடை வெண்பா, கோம்பி விருத்தம்,
சுவர்க்க நீக்க முதற்காண்டம் முதலிய நூல்களின் ஆசிரியரும்

ஆகிய

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்

இயற்றியது.

மதராஸ் டைமண்டு அச்சுக்கூடத்திற் பதிப்பித்தது.

1915.

ரிஜிஸ்தர்செய்தது.

இதன் விலை அரை ரூபாய். தபாற்கூலி ஒரு அணா.

வேண்டியவர்கள்

சென்னை ரிப்பன் அச்சுக்கூடத்திலும்

மதுரைத் தமிழ்ச் சங்கம் ஆபீசிலும்

மதுரை ஜடாமுனிகோவில் தெரு, விவேகபாநு அச்சுக்கூடத்திலும்

திருநெல்வேலி ஜில்லா, சுரண்டைப்போஸ்டு, வெள்ளகால், ம-௱-௱-ஸ்ரீ வெ. ப. ராமலிங்க முதலியாரவர்களிடத்திலும்

பெற்றுக்கொள்ளலாம்.

நம்பர் 742

உ

சிவமயம்.

# தன வைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்,

# திருவள்ளுவர் நூல் நிலையம்,

# பாகனேரி.

இஃது

ஸ்ரீமான் வெ. பெரி. பழ. பழனியப்ப செட்டியார் அவர்களால் இனமளிக்கப்பெற்றது.

.................... ஆண்டு .................... திங்கள் .......... நாள்

தயவு செய்து பேணிப் படியுங்கள்.

# Akalikai Venba

OR

## THE STORY OF AKALIKAI

IN

## VENBA METRE

**WITH THE SAME IN TAMIL PROSE**

BY

3719

*V. P. Subramania Mudaliar,*

**G. B. V. C.,**

*Dy. Superintendent,*
*Civil Veterinary Department,*
*Madras.*

Author of Indian Stockowners' Manual in Tamil, Nellai Chiledai Venba, Kombi Viruttam, Book I of Paradise Lost in Viruttam metre, &c.

MADRAS DIAMOND PRESS.

**1915.**

*All rights reserved.*

L90. 346.
354

# AKALIKAI VENBA *

## WITH THE SAME IN TAMIL PROSE.

---

### A Review by

### M.R.Ry. Rao Bahadur P. I. Chinnaswami Pillai Avergal

*Reprinted from the Indian Patriot of 5th February* 1915.

It was with very great interest that I read "Akalikai Venba," a Tamil poem composed by Mr. V. P. Subramania Mudaliar, the well-known author of "Nellai Chilaiai Venba" and other excellent poems. The poem contains the story of Ahalya, which it is unnecessary for me to recount in detail, as it is so well known to our Hindu readers. According to Valmiki, Ahalya knew that it was Indra who had come to her assuming the form of her husband Gautama Rishi; but according to the Tamil poet Kamban, she did not know, at first, that it was Indra that had come to her in the assumed form of her husband. It would be interesting to ascertain why, in spite of the alleged incident connected with Indra, Ahalya is still worshipped as one of the five Kanyas and most virtuous women. The utterance of the names of the five virtuous and much eulogised women—Ahalya, Draupati, Sita, Tara and Mandodari—is supposed to have the power of expiating all sin. It must be remembered that all these great events, connected with Ahalya and others, are supposed to have taken place in *Satya Yuga*, when the rules of morals appear to have been quite different from what they are in the present age of *Kali*. As an instance, it must be mentioned that the great Vyasa Maharishi was born to Satyavati (also known as Gandhavati and Yojanagandha), who subsequently married the great Kaurava Emperor, Santanu. It is said that, after giving birth to Vyasa, she became a *Kanya* by the *Tapaswic* power of Rishi Parasara, as there was nothing difficult of attainment to the mighty Rishis of those ancient days in the three worlds. It must

---

* "AKALIKAI VENBA" by Mr. V. P. Subramania Mudaliar, Deputy Superintendent, Civil Veterinary Department, Madras.

also be remembered that Ahalya and four others were *Ayonijas*—not born of womb. They were in fact of divine origin—quite different from man, and were endowed with various qualities unattainable by man except by *Tapas*, and one of those qualities was *Nitya Youvanam*, or everlasting youthfulness. The general notion prevalent that Ahalya was converted into a stone by the curse of Gautama is not borne out by Valmiki, in his Ramayana, wherein it is stated—he (Gautama) cursed his wife also. "For a thousand years thou shalt live here feeding upon air, without food, tormented with repentance, and thou shalt remain in the hermitage unseen of any. And when the irrepressible son of Dasaratha, Rama, shall come to this deep wood, thou shalt be cleansed of thy sin."

It must also be remembered that Indra was afraid of those who practised the most severe austerities as he believed that, by such austerities, they sought the headship of the Gods. That his visit to the *Ashrama* of Gautama was more with the intent to deprive the Rishi of his ascetic austerities than to violate the chastity of Ahalya would be evident from Indra's lamentations, when he met the celestials, after he was cursed by Gautama. "I have accomplished" Indra said, "the work of the celestials by stirring the ire of the high souled Gautama, and thereby disturbing his austerities . . . . . I have deprived him of his ascetic energy by causing him to utter a mighty curse." A reference to Harivamsha would show that King Janamejaya was incensed, when he believed that his wife, Vapusthama, was ravished by Indra, but Viswavasu pacified his wrath by pointing out that Indra had only employed the illusion in order to deprive the king of the fruits of his three hundred sacrifices, by rousing his anger, and making him to curse the priests, who had officiated at his sacrifices, and Viswavasu further exclaimed, "How can that highly powerful Purandara who is desirous of achieving victories, ravish the wives of his sons and grandsons, which even the ordinary men do not," and this would lead us to believe that, in the case of Ahalya also, Indra must have employed an illusion, in order to stir up the ire of Gautama, and thereby deprive the Rishi of his ascetic merit. But we have the highest authority that the story of Ahalya, as known in Puranas, is only allegorical.

In Thythirya Aranyaka, the expression, "Ahalyai Jara", appears to have been used in reference to Indra, as explained by the great commentator, Batta Bhaskara Misra, who has commented upon the expression as follows: —*Ahalya* means *word*, and *Jara* means *one who exhausts*, and hence the expression, *Ahalyai Jara*, means *one who exhausts all words*, or *who is beyond description*. Another interpretation given by the same commentator is this: *one who deserves to be eulogised in words* is called *Ahalyai Jara*. The same commentator also explained the word *Gautama* (the name of the Rishi) to mean *Agni, fire*. A Sanskrit scholar has given another interpretation to the expression Ahalyai Jara. The word, "Ahalya", means "untilled land," or "Virgin soil." That land, which is fit to be tilled, is called "halya" the word "hala" meaning plough, and that which is not "halya," is called "Ahalya." "Ahalyai Jara" would therefore seem to mean "one who destroys the virgin character of the soil by bringing it under cultivation by means of showers of rain." It is scarcely necessary to mention that Indra is the God of Rain, and as such, he is, to a considerable extent, responsible for the means for the reclamation of all 'uncultivated' lands. There is therefore reason to believe that the story of Ahalya is, after all, an allegory.

Whether the story was an allegory or not, Ahalya was worthy of being worshipped—as is done even to this day—would be evident from the following extract from Valmiki Ramayana, from which it would seem that she was worshipped even by Sri Rama, and honoured by celestials.

"Raghava in company with Lakshmana, placing Viswamitra in their front, entered the asylum; and they beheld that magnificent dame flaming in ascetic energy, and incapable of being gazed at too near even by the celestials and the Asuras, as if created by the Deity to be the divinely charming Woman. . . . The two descendants of Raghu then took hold of her feet, but remembering Gautama's words, she on her part took hold of theirs. And, with a collected mind, she gave them water for their feet as well as *Arghya*, and extended unto them the rites of hospitality. And the Kakusthas accepted the homage thus rendered according to the ordinance. And blossoms began to shower copiously to the sounds of kettle-drums, and the

Gandharvas and the Apsaras began to rejoice greatly. And exclaiming 'Excellent-Excellent,' the celestials honoured Ahalya."

Turning to the poem, the story of Ahalya has been told, among others, by three giants in Tamil literature—the great Kamban, the famous Kachiappa Muniver, and Mahavidwan Minakshisundaram Pillai. Mr. Subramania Mudaliar has produced the admirable version of the same story in beautiful verse. His style is simple, lucid, and elegant. The poem reads, as if it were written by some ancient poet of great eminence. It is written in Venba Verse, a verse in which Pukalenti, contemporary of Kamban, became most famous by the composition of "Nala Venba," one of the most precious and fascinating poems in the Tamil language. To relate a story in Venba Verse, in singularly felicitous language, as Mr. Mudaliar has done, requires consummate knowledge of the higher elements of poetical composition. The story, as told by Mr. Mudaliar, is that Indra seized and ravished Ahalya, in spite of her supplications, and that subsequently Gautama appeared on the scene, and cursed both Indra and Ahalya. The struggle of a virtuous woman like Ahalya with a fiend, blinded with animal passion like Indra, her supplications to Indra to save her from dishonour; the depth of her affliction in her great calamity—all these are described by Mr. Mudaliar in passages of exquisite beauty. Mr. Mudaliar has wonderfully adapted some ideas from Shakespeare, which not only enhances the beauty of the poem, but also shows his ripe scholarship, both in English and Tamil. Mr. Mudaliar has also given a prose version of the poem, which the general reader will find very useful and interesting. It is superfluous to say anything more in appreciation of this interesting poem, inasmuch as it has won the merited approval of my esteemed friend, Brahma Sri Mahamahopadhyaya V. Swaminatha Aiyar Avl., the greatest Tamil scholar of the age. Mr. Subramania Mudaliar is to be congratulated on the composition of this very interesting poem, which is well worth reading, and I commend it most heartily to all who are interested in Tamil language and literature.

---

PRINTED AT THE ALBINION PRESS, MADRAS.

This Work

IS

Dedicated with kind Permission

TO

Sriman

3719

# Raja Rajeswara

# MUTHURAMALINGA SETHUPATHI AVERGAL

# RAJA of RAMNAD

**In Commemoration of his Assumption**

OF THE PRESIDENCY OF

**Madura Tamil (Academy) Sangam**

BY

THE AUTHOR.

உ சிவமயம்

வெ. பெரா. பழ.

இரங்கோன்.

V. PR. PL

Rangoon

3/6/20.

3719

3719



இராமநாதபுரம் ராஜா ஸ்ரீமான் ராஜராஜேசுவர சேதுபதியவர்கள்
மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனதிபதி.

# உரிமை யுரை.

பூமேவு பன்னாட்டும் போந்தவளம் யாவையுந்தன்
தேமேவு செம்பித் திருநாடன்—நாமேவு
மின்னும்பொன் னும்மிணங்கி மேவிப் பலநலமும்
மன்னு முகவைநகர் மன்.

ராசராசேசமுத்து ராமலிங்க சேதுபதி
போசனே போற்சங்கம் போந்தக்கி—ராசனுறு
மேவுறல்கா ணுமைகை விளக்க வகலிகைவெண்
பாவுரிமை செய்தேன் பரிந்து.

மதுரைத் தமிழ்ச்சங்க வான்றலைவன் சேது
பதிமுத்து ராமலிங்க பானு—அதிகப்
பரிவொ டகலிகைவெண் பாவையா னல்க
உரிமையெனக் கொண்டா னுவந்து.

# சிறப்புப் பாயிரம்.

3719

சென்னைப் பிரஸிடென்ஸி காலெஜ் தமிழ்ப்பண்டிதர்
பிரும்மஸ்ரீ
மஹா மஹோபாத்யாய
**சாமிநாதையரவர்கள்**
அளித்தது.

துன்னு பலநூற் சுவையுங் கனிந்திலங்கப்
பன்னு மகலிகைவெண் பாவளித்தான்—மன்னுகடல்
மண்செப்பும் பல்குணமும் வாய்ந்தோன் றமிழ்ச்சுவை
வண்சுப் பிர்மணிய மால். [தேர்

---

இராமநாதபுரத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின்
பதின்மூன்றும் வருஷபூர்த்தி மஹோத்ஸவம்
கொண்டாடக் கூடிய சங்கத்தில்
ஷை மஹா மஹோபாத்யாயரவர்கள்
அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்தபோது
இந்நூல் அரங்கேறிய சமயத்தில்
சேதுபதி சமஸ்தானவித்வான்
பிரும்மஸ்ரீ
**ரா. இராகவையங்காரவர்கள்**
பாடியது.

தேசமுத்து ராமலிங்கச் சேதுபதி நல்லவைக்கண்
மாசில் புலவர் மகிழ்பூத்து—நேசமிகப்
பண்சுற் றகலிகைவெண் பாவையரங் கேற்றினன்
வண்சுப் பிரமணிய மன்.

---

இதனடியில் வரும் பாட்டுக்களை இப்புஸ்தகத்தின் 27-ம் பக்கம்
௧௦௪-வது பாட்டுக்குப்பின் வாசித்துக் கொள்க.

நெஞ்சமொரு சற்றே நெகிழ்ந்தேன். நெகிழ்தலுமே
வஞ்சனருங் கற்பையற மாற்றினான்—நஞ்சம்
அருந்தினவர் போன்றேன். அவர்க்குமருந் துண்டு
வருந்துமெனக் கில்லை மருந்து. (௧௦௪ - அ)

நிறைநீர் நிலைகாத்து நின்ற நிலையிற்
சிறிதே திறம்பினேன் தீயேன்.—நிறைநீர்
அறவே அகன்றோடிற் றந்தோ! அனைத்தும்
அறைபோய தாலென் னறிவு. (௧௦௪ - ஆ)

நிறையாங்குன் றேறி நிமிர்வுற்று நின்றேன்;
இறைசாய்ந்தேன்; சாயவே என்னை—அறியாமே
வீழ்ந்தேன்; அதோகதியே மேவினேன்; தாழ்ந்தாரிற்
றாழ்ந்தார் தமிற்றாழ்ந்தேன் தான். (௧௦௪ - இ)

போற்று பொருளதனிற் போதச் சிறந்ததுடல்;
ஆற்ற அதினுயர்ந்த தாவி; அதின்—ஏற்றமுறும்
நாண்; அதனின் மேலாகும் நன்னிறையே: அந்நிறையைப்
பேணல்செயாள் பெண்ணல்லள், பேய். (௧௦௪ - ஈ)

பதிக்கன்பாம் பத்தியினோர் பாலனே போலப்
பதிக்கன்பாம் கற்பினோர் பாலை—விதிப்பலத்தை
வென்றாளால். அத்துணைச்சீர் மேயகற்பைக் காவாதா
ளன்றோமெய் யாகியகூற் றம் (௧௦௪ - உ)

முன்னமநசூயைதிரி மூர்த்திகளை மும்மகவாத் [ள்.
தன்னிறையின் மாண்பாற் சமைத்துயர்சீர்—மன்னவுற்றா
அன்னநிறை காவா தகலவிடு பேதையைப்போல்
இன்னலினுக் கேதுவின்றின் றின்று. (௧௦௪ - ஊ)

ஒருவருக்குத் தெவ்வரெவ ருஞ்செயஉன் னற்கும்
அருவருக்கும் தீச்செயலெல் லாமோர்—உருவெடுத்த
வானாலும் ஒவ்வா அறக்கொடுந்தீங் காற்றினேன்
யானேயென் நாயகனுக் கே. (க0ச - எ)

ஆண்டார் திறத்தில் அபராதம் செய்துபழி
பூண்டாருள் யாவரென்போற் பொல்லாரே?—யாண்டே
பொறுத பெரிய புரைபுரிந் தாரை
ஒறுத பெரியர் உளர்? (க0ச - ஏ)

சேய்தன் பிணியதனைத் தீர்த்தற் குரியமருந் [ன்
தாய்தந்து தாய்கொடுத்த வாறெனத்தான்—ஆய்தந்தே
தன்பாவம் தீர்த்தற்காம் சாபம் கொடுத்தனனால்
அன்பேயிங் கோருருவா னான். (க0ச - ஐ)

---

இப்புஸ்தகத்தின் 31-வது பக்கத்தில் 122-வது பாட்டுக்குப் பின் இதனடியில் வரும் முதற்பாட்டையும் 123-வது பாட்டுக்குப் பின் அடுத்த இரண்டு பாட்டுக்களையும் வாசித்துக் கொள்க.

முந்தவிவள் உற்றவுரு முண்டகத்தோன் கைசமைத்த
திந்தவுரு நின்றிருத்தாள் ஈந்ததால்—அந்தவுரு
மாசடைந்து மாய்வுற்ற வாறிவ் வுருவென்றும்
ஆசுறலும் வீவுமில தாம். (கஉஉ - அ)

காலேறு முன்னமே காலிற் படிந்ததூள்
மேலேறத் திண்ணியகல் மெல்லியபெண்—பாலாக
ஆயிற் றெனினின் னடிமாண்பை யாவரே
வாயிற் புகழார் மகிழ்ந்து. கஉங - அ)

ஓரறிவே யில்லாம னுற்றவொரு கல்லாறு
பேரறிவார் பெண்ணாப் பிறங்கியதன்—சீரடியா
லென்றாலவ் வாறறிவும் எய்ந்தமக்கள் நின்றாளால்
ஒன்றாத பேறுமுள வோ ? (கஉ௫ - ஆ)

இந்தப் புஸ்தகத்தின் 17 - ம் பக்கத்தில் ௫௫ - ம் பாட்டுக் குப்பின் இதன் அடியில்வரும் முதற் பாட்டையும் ௫௬-ம்பாட்டுக் குப்பின் அடுத்த பாட்டையும் வாசித்துக்கொள்க.

தென்றல் உலவுதலும் திங்கள் நிலவுதலும்
மன்றல் மலர்கள் மலருதலும்—துன்றெழில்கூர்
வான்மயில்கள் ஆடுதலும் மாங்குயில்கள் பாடுதலும்
யான்மகிழச் செய்யா இனி. (௫௫-அ)

முடியாத துன்பம் முடிய முடிவேன்.
விடியா தெனக்கிரவு. விண்ணிற்—படியோர்கள்
எல்லாரும் காணவெழும்எல்லோன்யான் காணவெழான்.
எல்லாம் இலவாம் எனக்கு. (௫௬-அ)

# சிறப்புப்பாயிரம்.

சேற்றூர்ச் சமஸ்தான வித்வான்

ம-ா-ா-ஸ்ரீ

## மு. ரா. அருணாசலக் கவிராயரவர்கள்

இயற்றியது.

பீடு பெறுசுப் பிரமணிய பேரறிஞன்
பாடு மகலிகைவெண் பாவொன்றே—தேடி
எடுத்துக்கீழ் வைக்கமன மெண்ணுமலாசை
கொடுப்பதுவா சிப்பவருக் கு.

---

எட்டயபுரம்

ம-ா-ா-ஸ்ரீ

## காசிவிசுவநாத பிள்ளையவர்கள்

இயற்றியது.

தகவுயர்பன் னூற்சுவையுந் தந்துமாண் போங்க
வகலிகைவெண் பாவருளி னாற்—புகழுறச்செங்
கேழ்முளரிப் பொன்குலவு கின்றவெள்ளக் காலமர்ந்து
வாழ்சுப் பிரமணிய மால்.

# திருத்தப் பத்திரம்.

## அகலிகை வெண்பா.

| பக்கம். | வரி. | இப்படி யிருப்பதை | இப்படித் திருத்திக்கொள்க. |
|---|---|---|---|
| 2 | 7 | 61, 66, 67, 71, 89, 90 | 60, 65, 66, 70, 88, 89 |
| 3 | 4 | பன்னு | பன்னா |
| 5 | 22 | 4 தடாய்-தடவிக் | 1 தடாய்-தடவி |
| 6 | 8 | மருந்து | மருத்து |
| ,, | 10 | தருநிதி | தருநிதிகள் |
| 7 | 21 | மேயதிது வுந்தெரியு | மேய திதுவுமறி |
| 8 | 6 | மதிஓ | மதிஒ |
| ,, | 10 | அவிர் ஆலம்தோன்றல் நேராகும் | அவிருற் றிடுவிடத் தோற் றம்போன்ம |
| ,, | 24 | இமையா 1 ரென்மர் | இமையா2ரென்மர் |
| 11 | 2 | ஒன்ணைத | ஒண்ணைத |
| ,, | 16 | போர்புரிவ, போன்று | போர்புரிவ போன்று |
| ,, | 20 | மிருச | மிருக |
| 12 | 23 | அநதியே | அந்தியே |
| 13 | 6 | ஓர்நதால் | ஓர்ந்தால் |
| ,, | 23 | தெலவர் | தெவ்வர் |
| 14 | 5 | காலம்அனு | காலம்அணு |
| ,, | 16 | நின்றஅம் | நின்றஅந்த |
| 15 | 9 | யென் றுலைந்தாள். | யென்றுலைந்தாள் |
| ,, | 22 | மாயத்து | மாய்த்து |
| 16 | 1 | பேகாதோ | போகாதோ |
| ,, | 2 | மாய்ககாதோ | மாய்க்காதோ |
| ,, | 26 | 'இவன், | 'இவன்' |
| 19 | 13 | விட்டுவிடு விட்டுவிடு | விட்டுவிடு விட்டே விடு |
| 20 | 5 | இன்ன னே,! | இன்னனே!, |
| ,, | 9 | நீதுயிர் | நீயதுயிர் |
| 22 | 4 | தோற்றலினும் | தோற்றல்போல் |
| 23 | 4 | தின்நிறை | தின்நிறையைக் |
| 24 | 12 | யான்தடுத் | யான் தடுத்தால் |
| 25 | 10 | ஏதம் அனைத்தையு | ஏதமியா வற்றினையு |
| 27 | 9 | அண்ணி மறைந்து | அண்ணிமறை வாயு |
| ,, | 16 | துன்புறுக் | துன்புணராக் |
| ,, | 18 | பொல்லாப்பிழையைப் | பொல்லாத குற்றம் |
| ,, | 21 | துனனும் | துன்னும் |
| 30 | 27 | அரும்பேறு பெற்ற | அரும்பெரும்பே றுற்ற |
| 31 | 2 | 2 புல்லலள் | புல்லலள் |

குறிப்பு.—"காட்டுவழி" என்னும் வெண்பாவில் 'கள்ளர்

| பக்கம். | வரி. | இப்படி யிருப்பதை | இப்படித் திருத்திக்கொள்க. |
|---|---|---|---|
| 31 | 33 | நோக்குக. | நோக்குக. எல்லாமதத்தினரும் பெரியோரை அடிகள் என்பதனையும் கவனிக்க. |
| 32 | 13 | எயந்த | எய்ந்த |

## அகலிகை வெண்பா வசனம்.

| பக்கம். | வரி. | இப்படி யிருப்பதை | இப்படித் திருத்திக்கொள்க. |
|---|---|---|---|
| 1 | 4 | ஸர்வஸமயங்களும் | ஒவ்வொரு ஸமயமும் |
| 2 | 6 | ஒப்பிடு | கூறு |
| 3 | 19 | மற்றப்படி | மற்றைப்படி |
| 5 | 18 | தேணுண்ண | தேனுண்ண |
| 6 | 11 | வீரூப | விரூப |
| 9 | 4 | குடியானவர் | குடி |
| ,, | 25 | தேவரரஜன் | தேவராஜன் |
| 14 | 22 | அகபட்டு | அகப்பட்டு |
| 15 | 22 | நாயகன் | நாயகர் |
| 16 | 14 | சாக்கும் | காக்கும் |
| ,, | 28 | மோசஞ் | மோசத் |
| 18 | 24 | அறுப்புண்டு | தலை அறுப்புண்டு |
| 19 | 6 | பெருஞ் | பெரும் |
| 20 | 19 | நீடுழி | நீடூழி |
| 21 | 19 | மனைவி யான் | மனைவி, யான் |
| 23 | 19 | தெரியாததன்றே | தெரியாததன்றே; |
| 24 | 2 | இந்திான் | இந்திரன் |
| 36 | 4 | ஜென்ம | ஜன்ம |
| 38 | 11 | வியாள | வியாழ. |
| ,, | 27 | யடியே | படியே |
| 39 | 28 | பாம்யி | பாம்பி |
| 40 | 6 | நினைககவே | நினைக்கவே |
| 41 | 18 | ஸ்பரிஸ | ஸ்பரிச |
| 44 | 1 | வரழ்த்து | வாழ்த்து |
| ,, | 3 | ஈஸ்வர | ஈசுவர |

பயம்' என்பது உருவத்தால் 'தேமாங்கனி' ஆயினும் அதனை ஓசையால் 'கூவிளங்காய்' ஆகக்கொள்ளல்போலவும், "அருளல்லதியாதெனில்" என்னும் குறளில் இரண்டாம்சீர் தோற்றத்தில் கருவிளமாயினும் அதனை இசைபற்றிக் கூவிளமாகக்கொள்ளல்போலவும், இந்நூலில், காப்புச் செய்யுளில் 'என்னும்? எதை' 'நாத்திகம் ஓர்' என்பனபோல வருபவைகளைப் பொருள் விளங்க இருக்கிறபடியேயாகவும் செய்யுள் ஓசைக்கிணங்க 'என்னுமெதை' 'நாத்திகமோர்' என்றவாறும் வாசித்துக்கொள்ளல்வேண்டும்.

# அகலிகை வெண்பா.

## முகவுரை.

"ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி."

என்ற திருக்குறளில், தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார், ஸர்வநீதிஸாரமாக, மனத்தை அடக்கி நன்னெறியில் நின்றார் அடையும் பெருமையையும் அடக்காமல் தீநெறியிற் சென்றார் அடையும் சிறுமையையும் விளக்குதற்குச் சிறந்த உதாரணமாகத் தெரிந்தெடுத்துக்குறிப்பித்ததாக ஆன்றோர் கூறும்கதையை இந்நூல் கூறுகின்றது. இக்கதை, கௌதமர் இந்திரன் அகலிகையென்னும் மூவரையும் பற்றியதாயினும், முதலிருவர் பெருமை சிறுமை விளங்குதற்கு அகலிகை காரணமாக விருந்ததனால், இக்கதையை அகலிகை கதையெனல் பொருந்தும். இவ்வகலிகை கதையை வெண்பாவினால் கூறுவதனால், இந்நூல் அகலிகை வெண்பா எனப்பெயர்பெற்றது. இக்கதை, இராமாயணத்திலும் வேறு பலநூல்களிலும் கூறப்பட்டுள்ளது. ஆயினும் இக்கதையை அந்நூல்கள் ஒரே மாதிரியாகக் கூறவில்லை. வால்மீகமும் கம்ப ராமாயணமும் ஒன்றுக்கொன்று பேதமாக இக்கதையைக்கூறுவதாக இரண்டு நூல்களையும் ஆராய்ந்தோர் கூறுவர்.

2. இவ்வாறு பலவாறாகக் கூறப்பட்டுள்ள அகலிகை கதையில் பெரும்பாலும் ஒற்றுமையான பாகங்களை ஆதாரமாகக் கொண்டு இந்நூலை இயற்றியிருக்கின்றேன். இதில் கூறப்படுவோர், அவ்வவ் அமயங்களில் நடந்துகொள்ளும் தன்மையையும், பேசும் இயல்பையும், நினைக்கும் நினைவுகளையும், ஆங்கில திராவிட நூன்முறைகள் இரண்டுக்கும் இயைய, என் மனோதர்

மத்துக் கியன்றவாறு கூறியிருக்கின்றேன். பழைய நூல்களில் கூறியபடியுள்ள கதையின் போக்குக்கு இன்றியமையாத,- அக லிகை கல்லாக மாறுதல் போன்ற- சுபாவாதீத சம்பவங்கள் தவிர மற்றைய இயற்கைக்கு மாறான நிகழ்ச்சிகளைக் கூடியமட் டும் முன்னோர் கூறியவற்றோடு முரணுமலும் இயல்பாகவும் கூறி யிருக்கின்றேன். அகலிகைக்கும் இந்திரனுக்கும் நிகழும் ஸம் வாதத்தில், சில பகுதிகளில் (61,66,67, 71,89,90 - ம் பாட்டுக் களில்) ஷேக்ஸ்பீயமஹாகவியின் சாதுரியமான கருத்துக்களைக் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் எற்றபெற்றி உபயோகப் படுத்தி யிருக்கிறேன்.

3. அகலிகை கதை யாவரும் அறிந்த கதைகளுள் ஒன்று. கல்யாணகாலத்தில் மணமகளை அம்மி மிதித்து அருந்ததி பார்க் கச்செய்யும்கிரியை, இன்றும் தவறுமல் அனுஷ்டிக்கப்பட்டு வரு கிறது. அக்கிரியையில் அம்மி, அகலிகை கற்பிழந்ததற்குப் பிரா யச்சித்தமாக அவள் கணவனைப்பிரிந்து கல்லாக இருந்த இழிந்த நிலைமையினையும், அருந்ததி சிறந்த கற்புடைமையினுல் கணவ னைப் பிரியாமல் நக்ஷத்திர மண்டலத்தில் இருக்கும் உயர்ந்த நிலைமையினையும் விளக்குவதாகப் பெரியோர் கூறுவர்.

4. இந்நூலில், பாட்டுக்களைச் செய்யுள் இலக்கணத்துக் கிணங்கத் தளைசிதையாமல், பொருள் நன்கு புலப்படும்படி சந்தி பிரித்தும், நிறுத்தி வாசிக்கவேண்டிய இடங்களைக்காட்டக் குறி யிட்டும் இருக்கின்றேன். அன்றியும் சிலமுக்கியமான அரும்பதங் களுக்கும் தொடர்களுக்கும் எழுதிய குறிப்புரையை அடிக்குறிப் பாகவும், செய்யுட் பயிற்சி யுடையாரேயன்றி இல்லாதோரும் எளிதாகத் தெரிந்துகொள்ளும்படி குறிப்புப் பொருள்களை விளக்கி விரிவாக எழுதிய அகலிகை வெண்பா வசனத்தை அநு பந்தமாகவும் சேர்த்திருக்கின்றேன். இவ்வசனம் தற்காலத்தில் ஆங்கிலநூல் முறையை அநுசரித்து எழுதப்படும் நவீன கதை கள்போல, வாசித்தற்கு இனியதாக விருக்குமென்று நம்புகின் றேன்.

5. இந்நூலை யான் வாசித்துக் காட்டியபோது, சில திருத்தங்கள் குறிப்பித்து உதவிய பல வித்துவ நண்பர்களுக்கும் எனது நன்றியறிமொழிகள் உரியன. அரிய பெரிய பழைய பன்னூலாராய்ச்சியின் இடையே எளிய சிறிய புதிய இந்நூலையும் கேட்டுச் செம்மையுறச் செய்த பிரம்மஸ்ரீ, மஹா மஹோபாத்தியாயர், வே. சாமிநாதைய ரவர்களுக்கு யான் மிகக் கடமைப்பட்டுள்ளேன்.

சென்னபட்டினம்.
5-1-1914.

*V. P. Subramania Mudaliar.*

# சிறப்புப்பாயிரம்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான்களுள்

ஒருவராகிய

ஸ்ரீவில்லிபுத்தூர்த் தாலுகா,

குன்னூர், ம-ா-ா-ஸ்ரீ, பெரியவீடு,

## குமாரசுவாமி முதலியாரவர்கள் இயற்றியது.

ககனம்அளாம் சோலைவெள்ளக் காலூரன் மேலோர்
புகழ்சுப் பிரமணிய பூபன்—அகலிகை
வெண்பா அமுதை விருந்தாப் புலவர்குழாம்
உண்பான் அளித்தான் உவந்து.

# அகலிகை வெண்பா.

## கடவுள் வழிபாடு.

ஏத்தி மதங்கள் எதையறிந்தேம் என்னும்? எதைச்
சாத்திரங்கள் நாடிச் சலிக்கும்? எதை—நாத்திகம் ஓர்
சற்றும்அறி யேனென்று சாதித் திடும்? அதையே
பற்றுக நெஞ்சே! பரிந்து.

### அவையடக்கம்.

உன்னிஎழு வோர்பவம்போம் ஒண்சீர் அகலிகைப்பேர்க்
கன்னிகதை, கற்றோரைக் கண்ணியே,—பன்னும் இந்நூல்
ஆசொரீஇத் தேசுடைய தாகும். அவையடக்கம்
பேசிடுதல் வேண்டா பிறிது.

# நூல்.

### இந்திரன் கோலுவிருந்தல்.

எந்நாடும் எந்நகரும் ஏத்தி வருணிப்போர்
பொன்னாடும் பொன்னகரும் போலுமென்பர்-அந்நாடும்
அந்நகரும் காக்கும் அமரர்க் கிறைகொலுவில்
நன்னர் இருந்தான் ஓர் நாள். (க)

மிக்கசசி பக்கம்உற வெண்குடைமேல் மின்னஇரு
பக்கம் கவரி பரந்தசைய—நற்கின்
னரர்யாழ் [4] தடாய்ப்பாட நாகமின்னார் ஆட
அரியா தனத்திருந்தான் ஆங்கு. (உ)

---

[4] தடாய் - தடவிக்

மேனகை[1]சிற் றாலவட்டம் வீசத், திலோத்தமைஓர்
பால்நின் று [2] வெள்ளடையும் [3] பாகும்நல்க,—ஏனை
உருப்பசி[4]முன் மின்னார்சூழ்ந் துற் றுநின்றார், ஏவும்
திருப்பணிகள் செய்வான் தெரிந்து. (௩)

கின்னரர்கள் கந்தருவர் கிம்புருடர் விஞ்சையர்கள்
பன்னகர்இ யக்கர்தவர் பண்ணவர்பூ—மன்னர்
உருத்திரர்கள் கோள்கள் உடுக்கள் வசுக்கள்
மருந்துவர் [4] மூன் னோர்மொய்த்தார் வந்து. (௪)

கொலுவிருக்கும் மத்தியில் இந்திரன் அகலிகையை நினைதல்.

தருநிதி தேனுமணி தாழ்ந்துபணி ஆற்ற,
விருதுகளை மாகதர்கள் விள்ளச்,—சுரர்முதலோர்
அஞ்சலித்து நின்றிரப்ப, அன்னர்குறை தீர்த்தமர்ந்தான்
நெஞ்சகத்தெய் திற்றோர் நினைவு. (௫)

பேரழகெல் லாம்திரண்டோர் பெண்ணுருக்கொண் டென் [னுள்ளம்]
[5] ஆர்அமுத மான அகலிகையைச்—சாரப்
பெறும்பாக் கியம்இல் பெரும்பாக் கியம்தான்
வெறும்பாக் கிய [6] மென்றான் வேந்து. (௬)

ஒருமுறைஅன் னாள்இனிய ஒண்கடைக்கண் நோக்கை
மருவிடுவே னேல்அதற்கு மாறாத்—தருநிதிகள்
ஆதியஎன் செல்வம் அனைத்தும் அளிப்பென்உயிர்
ஈதலுமே செய்வேன் இனிது. (௭)

---

[1] சிற்றாலவட்டம் - சிறு ஆலவட்டம் - சிறுவிசிறி. [2] வெள் அடை - வெற்றிலை. [3] பாகு - பாக்கு.

[4] மூன் - முதலான. முன்னோர் - முதலோர்.

[5] ஆர் அமுது - உண்ணும்அமுதம். [6] என்றான் என்று கருதினன். 282-ம்குறளில் எனல் என்பது கருதுதல் என்னும்பொருள் படல்காண்க.

ஆரமுதோ டன்னுள்தோன் றந்நாளே, யான்காதல்
கூர, மயல் கோதமனும் கொள்ள, அயன்,—"நீர்முழுகி
முன்னெழுந்தார்க் கில்லை"யென,மூழ்க,இருவேமுள் அவன்
பின்னெழுந்து பெற்றான் அப் பெண். (அ)

அகலிகையின் வடிவ வருணனை.

சுடரும்அப்பெண் சோதிகடற் றோன் றுதலும், முன்னை
1 உடைஇதய வானத் தொளிர்ந்த—2 உடுவான [ன்
மானரெல் லாரும் மறைந்தொழிந்திட் டார்கள் 3 சசி
ஆனாள் பகற்சசியா னாள். (கூ)

பற்பல் பொருளுட் பகர்ந்திடுசெங் காந்தம் ஒன்றே
4 வற்பின் இரும்பை 5 வலித்திடல்போல்—பற்பலராம்
அன்னநடை யாருள் அகலிகையே என்னுடைய
வன்னெஞ் சினைக்கவரும் மான். (க0)

6 சூழ்பு தனைமறைத்த சூல்முகிலைப் பிற்புறத்தே
தாழ்குழல தாஒதுக்கித், 7 தாக்கணங்கும் - 8வீழ்கவின்கூர்
பெண்ணுருவம் கொண்டு, பிறங்குமின்னே, என்கருத்தும்
கண்ணும்அக லாஅகலி கை. (கக)

ஒளிநீழல் உள்ளதன்றென் போலோ ! அந் நீழல்
தெளிநீல வானமே தேர்வீர்.—ஒளிஅன்னாள்
ஆய ததனை அறிந்தந் நிழல்குழலா
மேயதிது வுந்தெரியு மின். (கஉ)

---

1 உடை - உடைய. 2 உடு - நக்ஷத்திரங்கள் 3 சசி - இந்தி ராணி; சந்திரன்.

4 வற்பின் - வன்மையுடைய. 5 வலித்திடல் - இழுத்தல்; தோணி வலித்தல் என்பதில் உள்ள செலுத்தல் என்ற பொருள் தொனிக்கிறது.

6 சூழ்பு - சூழ்ந்து. 7 தாக்கணங்கு - இலக்குமி. 8வீழ்கவின் கூர் - விரும்பும் அழகு மிகுந்த.

பெடையோடு வண்டு பிறங்குமலர் ஒண்கண்
ணொடுமே வவள்முகம்.பூ உற்ற - வடிதேன்சொல்.
பூவின் விகசிதப் பொற்புமணம் மென்மைதண்மை
யாவும் முகத்தும்உள வே. (கங)

மதி உறழும் அன்னாள் வதனம். மதியுள்
வதியுமான் மானும் மணிக்கண்.—மதிஒழுக்கு
தெள்ளமுதம் நேரும் திருவாய் மொழி.மதியின்
உள்ளுறைமுத் தொக்கும்எயி று. (கச)

பவளக் கொடி படர்ந்த பால்வேலை நாப்பண்
அவிர்ஆலம் தோன்றல்நே ராகும்,—அவள்செவ்
வரிசிதறி இன்னழகு வாய்வெள் விழியுள்
கருவிழிஆர் காட்சிக் கவின். (கரு)

காதல் அலைபுரள்அக் கட்கடல்,நோய் நோக்கும்அந்
நோய்தனைநீக் கும்மருந்து நோக்குமென—ஓதுகின்ற
நீலவிட மும்வெண் ணிறத்த அமுதமும்
சால உதவிடுவ தாம். (கசு)

விருபம்இலாள் என்றுபொருள் மே[1]வகலி கைப்பேர்
மரீஇயதுரு வத்தோர் மறுவும்—இராதபெண்வே
றில்லை யெனஉணர்த்தற் கென்னின், அவள் அழகு
சொல்லும் தரமுடைய தோ? (கஎ)

அவள்அழகு நோக்கஇமை யான்ஆனேன். வேந்தன்
எவணம்?அவ ணம்முடிக ளென்று,—நுவலுமா
றுணர்வா னோர்இமையார். அஃதறியா தார்இயல்பால்
வானோர் இமையா [2]ரென் மர். (கஅ)

1 ஹலம் - விருபம். அஹலம்-விருபமல்லாதது. அஹல்யை-விருபமில்லாதவள்.

2 என்மர் - என்று சொல்வார்.

## இந்திரனது காமநோய்.

கண்டதினம் தொட்டுக் கதுவியவெங் காமத்தீ,
மண்டிஇது காறும் வளர்ந்தெரிந்து—கொண்டிருப்ப
தன்றி, அணுவும் அடங்கித் தணியாதெற்
கொன்றிடல்போல் தாக்கும் கொதித்து. (கசு)

1 அகமதனிற் பற்றுமய லங்கிபற்றும் போழ்தே
2 உகஅவித்தல் சாலஎளி தோங்கி—மிகவளர்ந்த
பின்னர்அவிக் கொண்ணாத பெற்றியது: மற்றிதனை
முன்னிஅவித் தேனில்லை முன். (உ0)

அயலவன்றன் இல்லன்னாள் ஆதுமுன்யான் கொண்ட
மயல்பிழைய தன்றெனினும், மற்றம்—மயலே,
அவள்எதி லான்மனையாள் ஆன உடனே,
தவிராத தென்றன் தவறு. (உக)

நல்லார்கள் உள்ளத்தும், நல்லாரல் லார்உளத்தும்,
பொல்லா நினைவு புகல்இயல்பே.—நல்லார்கள்
புக்கஉடன் அந்நினைவைப் போக்கிடுவர். பொல்லார்கள்
மிக்குறைய விட்டிடுவர் வேட்டு. (உஉ)

அவ்வா யிழைபிறன்இல் ஆனபின்னர் என்னுளத்துள்
ஒவ்வாத காதல்புகுந் துற்றதனைச்—செவ்வே
வெளியகல ஒட்டி விடாமையினால், போக்கற்
கெளியதல தாயதது இன்று. (உங)

---

1 அகமதனிற்பற்றுமயலங்கி - (1) அகம் அதனில்பற்றும் மயல்அங்கி - மனத்திலே மன்மத (ன்செய்கையி) னால் பற்றுகின்ற காமத்தீ; (2) அகம் அதனில் பற்றும் அயல் அங்கி - வீட்டிலே பிடிக்கின்ற (வழக்கத்துக்கு) அன்னியமானதீ. 2உக-அழிய கெட.

3719

1 காதல்செய்தென் காலனே, காமர்அமு துண்டியான்
சாதல் தவிர்ந்த தகைநோக்கிக்,—2 காதல் செயும் [என்
தென்கால ணுகி,வெம்போர் செய்கின்றான்: கொல்வேன்
முன்காணில், கண்ணிமைக்கும் முன். (உச)

விண்ணமுதாற் சாதல்நோய் வீந்த தகலிகைப்பேர்ப்
பெண்ணமுதா லன்றிப் பெயராதால்—துண்ணென்னும்
சாதல்நோய் தன்னினும்யான் தாங்கற் கருங்கொடிய
நோதல் புரிகாதல் நோய். (உரு)

[3]ஐதென் னரசியான் ஆள்குடியுள் ஓர்எளிய
வைதிகன்அம் [4] மாதர் மணிதன்னை—நொய்துவெளவிச்
செம்மாந்து வாழச் சிறிய வறியனைப்போல்,
விம்மாந் துழல்வேன் மெலிந்து. (உசு)

சாற்றருவெங் காமத் தனிப்பெரிய தீயினொடு
தோற்றமா னத்தீ சுடுவெப்பம்—ஆற்றரிதத்
தேம்தாழ் மலர்க்குழலாள் சீத [5] வனமேனி
தோய்ந்தாலல் லாற்றணியா து. (உஎ)

---

1 காதல் செய் தென்காலன் — கொல்லுதலைச் செய்கின்ற தென்திசைக்குரிய இயமன். 2 காதல் செயும் தென்காலன் — மோகத்தை உண்டாக்கும் தென்றற்காற்றை(த்தேராக) உடைய மன்மதன்.

3 ஐது - அழகிது, இகழ்ச்சிப்பொருள்குறித்தது, 4 மாதர் மணி- (1) அழகிய இரத்தினம்; (2) ஸ்த்ரீரத்நம்.

5 வனமேனி -(1) அழகியதேகம்; (2) ஜலம்போன்ற மென்மையுள்ள தேகம்.

இந்திரன் சபையிலுள்ளவர்க்கு விடைகொடுத்தனுப்பிவிடுதல்.

[1]ஒப்புநெறி யால்அடைய ஒன்ஞத அன்ஞளைத் [யும்
[2]தப்புநெறி யால்இன்னே சார்வல்; அன்றேல்,—எப்படி
உய்வரிதென் றெண்ணிஅனை வோர்க்கும் விடைஅளித்துத்
[3]தைவசபை நீங்கினன்வேந் தன். (உஅ)

அவன் கௌதமாது ஆச்சிரமம் உள்ள வனத்தைச் சேர்தல்.

தானைபரி வாரம் தவிர்த்துத் தனியேஅம்
[4] மானை அடைவான் வழிச்சென்று—வானை
அளவுற்றுக் கோதமன தாச்சிரமத் தைச்சூழ்
வளவனமுற் றுன்மாலை வாய். (உகூ)

அவ் வனத்தின் காட்சியாலும் அந்தி சந்திரன் முதலியவைகளாலும்
அவன் காமநோய் மிகுதல்.

காமன் புரிபோர் கடந்திடுவான் போந்தயான்
[5] காமன் படைவீட்டின் கண்ணுற்றேன்.—[6] காமன்
படை,மயில்மா ஞதி பலவடிவு கொண்டென்
புடையுறுவ, போர்புரிவ, போன்று. (௩௦)

---

1 ஒப்புநெறி - கல்யாணமாகிய எல்லாரும் ஒப்பியவழி.
2 தப்பு நெறி -அஃதல்லாதவழி.
3 தைவ சபை - தெய்வசபை.

4 மானை அடைவான் வனமுற்றுன் என்பதில் மிருகமாகிய மானைஅடைய அதுஉள்ளவனத்தை அடைந்தான் என்றபொருள் தொனிக்கின்றது.

5 காமன்படைவீடு - சோலை - வனம். 6 காமன்படை (கள்)- பெண்களின் கூட்டங்கள்.

3719

[1] ஏக வெளியினிலும் யான்மயங்கித் துன்புறஅத்
தோகை யெழிலுருவம் தோன்றுமெனில்,— மோகமுறப்
பூங்கொடியும் கொம்பும்அவள்போல்நிறைந்த இவ்வனத்தே
யாங்கண்உயிர் தப்பிஉய்வேன் யான். (௩க)

நீருறுகா ரைச்செந் நிறத்தீயாச் செய்துமறு
பேருறச்செவ் வானென்று பேர்மாற்றிச்—சூருறுமா
றத்தீயால் என்னை அழற்றுகின்றாய், [2]அந்தீ! சொல்,
எத்தீங்கு நிற்கிழைத்தேன் யான். (௩உ)

விடந்திரண்டா லன்னகரு மெய்க்குயிலே! நீகூ
விடுந்தொனியும் அவ்விடம்நே ரேனும்,—அடுந்தகைய
அவ்விடத்துக் கஞ்சேன், அமுதுணலால். நின்தொனியாம்
வெவ்விடத்துக் கஞ்சுவேன் மிக்கு. (௩௩)

எங்கள்பிரான் முக்கணுளொன்றேகுளிர்ந்ததென்றும்அது
திங்களென்றும் செப்புவோர், தீக்[3]கணினும்-வெங்கதிராம்
[4]கண்ணினும்இவ்வெண்திங்கட்[5]கண்மிகுந்தவெம்மையுறும்
வண்ணம்அறி யார்கொலோ? மற்று. (௩௪)

கரிய இருள்வண்ணன் காலனென ஓதும்
பொருளை அறிந்தேன்இப் போழ்து—வெருவுறத்துக்
கொல்லும்தொழில்இருட்கும்கூற்றினுக்கும் ஒன்றுபோல்
ஒல்லும் தகையை உணர்ந்து. (௩௫)

---

1 ஏகவெளி - தனியான (ஒருபொருளுமில்லாத) வெளிப் பரப்பு.

2 அந்தீ - அந்தியே. இதில் தீ (நெருப்பு) என்ற பொருள் தொனிக்கின்றது.

3, 4, 5 கண் - (1) கண்; (2) இடம்.

புதியமலர் தோறும் புகுந்துபசுந் தாதும்
மதுவும் குளிரும் மணமும்—கதுவும்
வசந்தஇளங் காலும் வருத்தும்எனை. வெல்லம்
கசந்திடுதல் வாய்க்குற்றம் காண். (௩௬)

[1]சேர்ந்தாருக் கின்புசெய்து [2]சேரார்க்குத் துன்புசெய்தல்
ஓர்ந்தால், இயல்பே.அவ் ஒண்டொடியைச்-சார்ந்தால், இவ்-
அந்திமுத லாயவைஇன் பாற்றும். இவற்றையான்
நொந்ததனால் போமோஎன் நோய்? (௩௭)

தீருநோ யாவுஞ்சஞ் சீவியினால் தீர்தலுறும்
யாருமுறும் பாவநோ யாவையும்மா—மேருவில்லி
தாள்அடைய நீங்கும்எனச் சாடுபல நோவும்அவள்
தோள்அடைய நீங்கும் தொலைந்து. (௩௮)

[3]என்றவன்செவ் வந்திவெள்ளை இந்துகருங் கங்குல்பசுந்
தென்றல்குயி லோடுவேள் செய்துன்பால்—கன்றிக்
[4]கமையினொடு கொண்ட கருத்து முடிக்கும்
[5]அமயம்எதிர் பார்த்திருந்தான் [6]ஆங்கு. (௩௯)

அவ்வமயம் ஆந்தை அலறொலியல் லால்ஒலிஇல்
வெவ்வமயம் மிக்கஇருள் மேவமயம்—[7]தெவ்வர்பொருட்
சோரர் பிறன்கடைசெல் சோரர்கொலை [8]மாக்கள்அன்றி
ஆரும்விழி யாதஅம யம். (௪0)

---

1 சேர்ந்தாருக்கு-(1) [யாவரும் தம்மை] அடைந்தா [ராகிய சிநேக]ருக்கு; (2) சேர்ந்த காதலருக்கு. 2 சேரார்க்கு - [யாவரும்தம்மை] அடையா[ராகிய பகைவ]ருக்கு; (2) சேராத காதலருக்கு.

3 இந்த அடியில் செம்மை வெண்மை கருமை பசுமை என்ற நிறங்கள் தொடுத்து வந்தன. 4 கமை - க்ஷமை - பொறுமை. 5 அமயம் - சமயம். 6 ஆங்கு - அந்த வனத்தில்.

7 தெவவர் - (பகை முடிக்க இராப்பொழுது காத்திருந்து வெளிவரும்) பகைவர். 8மாக்கள்-(1)மனிதர்கள்; (2)மிருகங்கள்.

### இந்திரன் கௌதமரை அவருடைய ஆச்சிரமத்தினின்றும் வெளியேபோக உபாயஞ்செய்தல்.

பாதி இரவிடைவிண் பார்த்திபன்ஓர் கோழிபோற்
கோதமன்இற் பக்கம்போய்க் கூவினன் அம்-மாதவன் தான்
சாலைக் கடன்கழிக்கும் காலம்அனு கிற்றென்றவ்
[1]வேலைக்கண் நீங்கினன்தன் வீடு. (சக)

அஞ்ஞான அல்லகற்றி அம்மா தவன்அகத்துள்
மெய்ஞ்ஞான தீபம் மிளிர்தல்போல்—இஞ்ஞாலம்
யாவும் விழுங்கும்இருள் எய்தாமே அவ்வீட்டுள்
மேவிவிளங் கிற்றோர் விளக்கு. (சஉ)

கோதமனே போலஉருக் கொண்டு மகவான்அம்
மாதவன்சென் றிட்டபின்னம் மாமனையுள்—போத,அங்கு
நின்ற அகலிகைஇல் நீங்குமுனி மீண்டுவந்தா
னென்றுவர வேற்றாள் எதிர்ந்து. (சங)

### இந்திரன் அகலியைக் கட்டல்.

தன்னை மகிழ்நனென்று தாழ்ந்தெதிரே நின்றஅம்
மின்னை [2]அண்மிவேந்துகட்ட வேற்றுமைகண்-டன்னவள்சீ!
விட்டிடென்று பின்னிடைய மிக்கிறுகக் கட்டவலைப்
பட்டமயில் ஒத்தாள் பதைத்து. (சச)

மன்னன் வலக்கையால் மாதிடக்கை பற்றிஅவள்
[3]வெந்நைஇடக் கையால் மிகஅணைக்கப்—பல்நகத்தால்
[4]வன்புலிகௌ விப்பற்றும் மான்படுவெம் பாடுபட்டுத்
துன்புழந்தாள் நெஞ்சம் துடித்து. (சரு)

---

1 வேலை - வேளை - சமயம்.

2 அண்மி - சமீபித்து-நெருங்கி. உருமாறிவந்த இந்திரனைத் தாரத்திலே கௌதமரென்று மயங்கின அகலிகை, அவன் கிட்ட வந்து கட்டவே, வேற்றுமை தெரிந்துகொண்டாள்.

3 வெந்நை - முதுகை. 4 வன்புலி பல்நகத்தால் கௌவிப் பற்றும் மான் - வலியபுலி பற்களினால் கௌவி நகங்களினால் பற்றிய மான்.

[1]அலக்கணீர் வாளா அவள்நெஞ்சு போழக்
[2]கலக்கணீர் வாளா கவிழ்த்தாள்—[3]மலக்கம் எய்தி
விம்மினாள் வெய்துயிர்த்தாள் வேர்த்தாள் விதிர்விதிர்த்தாள்
அம்மினாள் செய்வதறி யாள். (சசு)

இந்திரன் கைக்குள் அகப்பட்ட அகலிகை தன்னுள்ளே

வருந்தித் தவித்தல்.

என்செய்கேன் ! என்செய்கேன் ! எவ்வா றினிஉய்கேன் !
முன்செய் வினையின் முடிவிதுவோ ! [4] துஞ்சுகேன்
இக்கணம்என் றால், அஃ தியலாதே யென் றலைந்தாள்.
துக்க [5]மே லீட்டால் துடித்து. (சஎ)

மேகம்இன் றி மின்னின் றி வெள்ளிடிவீழ்ந் தாற்போல
மாகொடிய ஆபத்து வந்ததே ! —ஆ! கெடுவேன் !
முன்னறிந்து தப்ப முடியவில்லை: சாகவில்லை:
என்னபுகல் என்றாள் இனி. (சஅ)

தப்பும் வழியில்லைச் சாகும் வழியுமில்லை
இப்படியோ என்னூழ் இருந்ததந்தோ!—[6]சொப்பனத்தும்
எண்ணாத இக்கதிஎற் கெய்தியதே ! என் றுமனம்
புண்ணாகி நொந்தாள் புலர்ந்து. (சகூ)

---

1 அலக்கண் (-துன்பம்) ஈர் (-பிளக்கின்ற) வாளா (க). 2 கலக்க(ண்)ணீர் வாளா (-பிரயோஜனமில்லாமல்). 3 மலக்கம்-கலக்கம்.

4 துஞ்சுகேன் - சாவேன் - உயிரைமாயத்துக்கொள்வேன். 5 மேலீடு - மேலிடல் - அதிகப்படல்.

6 வேறு எவளுக்கும் நேருமென்று நான் சொற்பனத்திலும் எண்ணாத இந்தத் தூர்க்கதி எனக்கே சாக்கிரத்திலேயே நேர்ந்ததே.

3719

புலிஎடுத்துப் போகாதோ ! போழ்இடிவீ ழாதோ !
மலைகவிழ்ந்து மாய்க்காதோ ! வல்லே—அலையுவரி
பொங்கிவந்தாழ்த் தாதோ ! புலிதான்வாய் அங்காந்து
1 நுங்கியிடா தோ ! என்றாள் நொந்து. (ருo)

துஞ்சுழிக்கல் லைத்தலைமேற் றாக்கிப்போ கட்டும் வெய்ய
நஞ்சருந்தி யும்கோறல் நாடுங்கால்,—வஞ்சகத்தின்
இப்பாவி என்னைஇப்போ திவ்வாறு செய்ததனுக்
கொப்பாமோ என்றாள் உளைந்து. (ருக)

2 போகியின்வாய் நஞ்சம்,அரன் பூங்கழுத்தில் மேவி, வெம்
3 போகி, அமர்ந்து,பின்பு 4போகியே—ஆகும்இவன் [மை
நெஞ்சகத்து வஞ்சகமாய், 5 நீங்கலுற்ற வெம்மைமுற் றும்
எஞ்சலின்றி மீட்டும்உற்ற தே. (ருஉ)

நிறைகே டுறுமாறு நேரின்,உயிர் நீத்தந்
நிறைகாத் திடுதல் நெறியால்.—நிறைகாத்தற்
கென்னுயிர்நீக் கும்தவமும் இல்லேன்இப் போதுசெய்தற்
கென்னுரிய தென்றாள் இனைந்து. (ருங)

இந்திரன்தன்னைக் கற்பழியாமல் விடானென்று
அகலிகை துணிதல்.

பைஅரவம் வாயுள்அகப் பட்ட தவளை யினை,
வெய்யயமன் கையகத்து மேவுயிரை—உய்ய
விடினும், இவன் என்னை விடான், கற் பழித்தே
விடுவனென்று தேர்ந்தாள்அம் மின். (ருச)

---

1 நுங்கியிடாதோ - விழுங்கிவிடாதோ

2 போகி - (வாசுகிஎன்னும்) பாம்பு. 2 போகி - போய் - நீங்கி. 3 போகி - பாம்புபோன்ற கொடியோன். 4'போகி' என்பதில் இந்திரன்என்ற பொருள் தொனிக்கின்றது. 'இவன்,இந்திரன் என்பது அகலிகைக்கு இப்போது தெரியாது. 5 நீங்கலுற்ற- சிவபிரான் கழுத்திலுற்றதனுல் நீங்கியிருந்த.

வையகத்துக் கற்புடைய மாதர்காள்! யான்இந்த
வெய்யவனாற் கெட்ட விதம்கெடா—துய்யுமின்கள்:
யான் அழிந்தே னென்றாலும், என்கதைநும் மைக்காத்தற்
கான பயனுடைத்தென் றாள். (௫௫)

அவள்சாக வேண்டுமென்று முடிவுசெய்தல்.

தீண்டார்கள் தொட்டிட்ட செம்மண் கலத்தினைமுன்
ஆண்டார்பின் தீண்டாத ஆறென்னை—வேண்டான்என்
கேள்வன்.அவற் காகாது கெட்ட உடலைவிட்டு
மாள்வன்.இது வேநல் வழி. (௫௬)

கற்பழியா வாறு கழிக்கஉத வாஉயிரைப்
பிற்பழிமே வாமுன் பிரிந்திடுவேன்.—இற்பிரிந்தென்
நாதன் தனைப்பிரிந்து நான்உயிர்வா ழேன்! வாழேன்!
சாதல் நனிநிச் சயம். (௫எ)

1 என்னி னினியான் எனக்கிறைவன், எற் றுறப்பன்,
2 என்னி னினியார் எனைப்புரப்பர்?— 3 என்னினினிச்
சாவத் தடை?தடைஇச் சண்டாள னென்றாள்விஞ்
4 சாவத் தடைந்த அணங்கு. (௫அ)

---

1என்னின் இனியான் எனக்கு இறைவன்—எனக்கு என்னினும் இனியவரும் தலைவருமாகிய கௌதமர். 2 என்னின் இனியார்—என்றால் வேறுயார். 3 என்னினினிச் சாவத் தடை - என்? இன்னினி (இப்போது) சாவத்தடை (சாகத்தடை). 4 விஞ்சாவத்து - விஞ்சு ஆவத்து - மிகுந்த ஆபத்து.

### அகலிகை, இன்னனென்று தான் அறியாத இந்திரனை நோக்கிக் கூறுதல்.

சடைதாடி [1] சீரை தரித்தெங்கோன் போலும்
வடிவோடு வஞ்சிப்பான் வந்தாய்!—மடிவாய்,
[2] புலியதன்தோல் போர்த்துப் புடையுண் டிறந்த
[3] புலிய எருதினையே போல். (ருகூ)

இறைமுடியைச் சற்றேசூ டிச்சையொடு தொட்டவ்
இறைசக் கரத்தால் இறந்த—அறிவிலா
ஏழை யெனத்தகா எண்ணமொடெற் பற்றினாய்,
ஏழைஉன்போல் எங்கும் இலை. (கூ0)

எங்கோன் அறியின்என்னும்! என்றறியாய். இந்திரனும்
வெங்கோபத் தீயினின்றும் மீளானே!— பொங் [4] கோத
ஞாலமெலாம் தீந்திடுமே! [5] நன்குணரா தீதுசெய்தாய்
சாலவும்நீ பேதையென்றாள் தான். (கூக)

### இந்திரன் மறுமொழி கூறல்.

உன்காமத் தீயினின்றும் உய்யினன்றோ, என்னைஉன்கோ
தன்கோபத் தீசுடும். நீ சாற்றமரர்—நன்கோவே [ன்
இப்பொழுதிங் குன்னோ டிருக்கின்றான், செந்திருவும்
ஒப்பிலாய்! என்றான் உவந்து. (கூஉ)

---

[1] சீரை - மரவுரி. [2] ஒருவன் தன் எருதைப் புலித்தோல் போர்த்து அயலான் வயலில் இரவில் மேயவிட, அவ்வயலான் உண்மை தெரிந்து அவ்வெருதை நையப் புடைத்துக் கொன்றானென்ற கதையுளது. அந்த ஒருவன் இந்திரனுக்கும், எருது இந்திரன் தேகத்துக்கும், புலித்தோல் போர்த்தல் கௌதமர் போல உருத்தரித்தலுக்கும் உவமானம். [3] புலிய - புல்லிய - அற்பமான.

[4] ஓதஞாலம் - கடல் சூழ்ந்த பூமி. பூமி, பெரிய சமுத்திர ஜலம் சூழ்ந்திருந்தாலும் கௌதமருடைய கோபத்தீக்கு உட்படுமானால் தப்பாது தகிக்கப்பட்டு விடுமென்று அகலிகை கூறினாள். [5] நன்குணராது ஈதுசெய்தாய் - நன்றாக ஆலோசியாது (என்னைப் பற்றுதலாகிய) இந்த அகிருத்தியத்தைச் செய்தாய்.

## இந்திரனை இந்திரனென்று தெரிந்தபின் அகலிகை கூறுதல்.

தேவர்கோ வே!நீ, இத் தீச்செயலை வேறொருவன்
எவனே னும்செய் திடின்அவனைக்—கோவித்
தொறுத்தல்செயும் ஆணை உளையால், இதனை
வெறுத்திடென விட்டு விடு. (௬௩)

விருதுகள் மாசுபடும். வீரம் பழுதாம்.
பொருவயிர வாள்மழுங்கிப் போகும்.—செருவல்ல
சூரனலன் சோரனெனச் சொல்வர்தெவ்வர். ஆதலினால்
வீரனளை விட்டு விடு. (௬௪)

அற்பர்பழி அங்ஙனே அப்பொழுதே மாயும்.நின்போல்
முற்படுவார் தம்பழிபோய் மூவுலகும்—நிற்புறும். எம்
மட்டுயர்வுள் ளாயோ ? அம் மட்டிழிவுள் ளாய் ஆவாய்.
விட்டுவிடு விட்டு விடு. (௬௫)

தருவினைச்சார் வுற்றுத் தழைக்கும் கொடியை
ஒருகனிக்கே கொய்திட் டொழித்தல்—பொருவ, நீ
வேட்ட ஒரு போழ்தின்பே மேவிடுதற் கென்நிறையை
வீட்டியிட லாமோ ? விடு. (௬௬)

நடுயாமக் கோழிஒரு நாள்போற்பல் நாள்கூ
விடுமோ?கூ விட்டாலும் எங்கோன்—தடுமாறிப்
போவனோ ? கற்பிழந்தால் பொன்றேனோ? இன்பினிமேல்
மேவுவதெவ் வாறு விடு. (௬௭)

என்நிலையில் நீஉளையா எண்ணவல்லை அல்லையேல்,
உன்நிலையில் வேறொருவன் உற்றிடலும்—[1]நின்னில்லென்
தன்னிலையை எய்திடநீ தான்படுபா டேனுமெண்ணி,
மின்னிலைவேற் கையாய் ! விடு. (௬௮)

---

1 நின்னில் - நின்இல் - உன்மனைவி.

இழிகரவின் அச்சத் திடைக்கொள்பொய் யின்பம்,
கழியும், கணமுநிலைக் காது;—பழிவிளைக்கும்;
ஆவிக் கழிவுசெய்யும்; ஆழ்தீ நிரயத்துள்
வீழ்விக்கும்; விட்டு விடு. (சுசு)

இன்னவனே! என்கணவன்,எந்தை இன்ன னே,!இவனே!
எந்நண்பன்,எங்கேள் இவனே!, எம்—மன்னிவனே!,
என்னஇந்திராணி [1]முன்னோர் எண்ணிவெள்கிநோவாமே,
மின்னுமுடி வேந்தே!விடு. (எ0)

தெவ்வு பொருள்திருடல் தீததனிற் றீதுயிர்
வௌவல்,அதனிற் றீது மாதரார்— செவ்வுயிரின்
மிக்கநிறை வீட்டல், இவ் வெவ்வினைசெய் வான்நினைதல்
தக்கதன்று விட்டிடென்றாள் தான். (எக)

அகலிகைக்கு இந்திரன் கூறுதல்.

நின்னழகே, உண்ணமல், நித்திரையும் கொள்ளாமல்,
இன்னுயிரை யும்பொருளா எண்ணமல்,—என்னைவந்திங்
குன்னை உறச் செய்ததால்; உன்னழகை நோவாமல்
என்னை நீ நோவ தெவன் ? (எஉ)

களவாளி யானே? கருதுங்கால், நீயே,
தளவாம் மணிமுறுவற் றையால் !— எளியேனுக்
குள்ள உள்ளம் அத்தனையும் உள்ளஉள்ள நோமாறு
கொள்ளைகொண்டுள் ளாயன்றே ? கூறு. (எங)

வீவுறுவோன் கையகத்து மேவியசா வாமருந்தை
ஒவிடுதி என்னின்உண்ணு தோவுவனே?—தூவெள்ளை
இன்நகையாய்! யான்கொண்ட எண்ணம்நிறை வேற்றமல்
உன்னை விடுதல்ஒண்ணு தோர். (எச)

---

1 முன்னோர் - முதலோர்.

[1]ஆள்வழக்கே இல்லா அடவி நடுவேஇவ்
வேள்விவளர் ஆச்சிரமம் மேயது. நின்—கேள்வனோ
[2]தூரியனா னான், வலிந்தென் சூழ்ச்சிமுடித் தாற்றுப்பார்
ஆர்உளர்? என் ஆவியின்மிக் காய் ! (எரு)

ஆருயிரை விட்டிடினும், அவ்வுயிரி னும்மினிய
நேரிழாய் ! நின்னைவிடேன், நெஞ்சுவந்து—நேருதலே
இந்நிலையில் நீசெய் திடத்தக்க தென்பதனை
மின்னிடையாய் ! தேர்தியென்றான் வேந்து. (எசு)

அகலிகை கூறுதல்.

மிறைசெய் விருத்திரனோ? வெய்ய வலனோ?
சிறைகொள் மலையோ? யான், தெவ்வர்—திறமதனில்
வன்பாற் செலுத்தலுறும் மாவலியைப் பெண்பாலாம்
என்பாற் செலுத்தஎண்ணல் என்? (எஎ)

பெண்ணெனில்வெம்பேயும்பெரிதிரங்கும்வேண்டுவையேல்
கண்ணெனினும் நல்குவேன், கைக்கொள்வாய்.- திண்ணம்
இன் னுயிரேவேண்டுகினும்,ஈவேன்,மறுத்திடேன்.[இதென்
என்நிறையை நீக்கேல். இரங்கு. (எஅ)

மாதேவன் மேலாணை,மற்றையபல் தெய்வதங்கள்
மீதாணை, நின்செங்கோல் மேலாணை,—கோதார்ந்த
ஒட்டாரை வென் றுதிகழ் உன்வீர மீதாணை
இட்டேன்என் கற்பையழி யேல். (எகூ)

---

1 ஆள்வழக்கு - ஆள்கள் வழங்குதல் - ஜனசஞ்சாரம்.
2 தூரியன் - தூரத்தில் உள்ளவன்.

பொன்னால் மணியாலாம் பூண்களுக்கு மேலாம்பூண்,
மின்னுடை யாவைக்கும் மேலாடை,—இன்னுவிக்
கேற்றமாம் ஆவிநிறை. ஏழையருக் கந்நிறையைத்
[1] தோற்றலினும் உண்டோ துயர்?. (அ௦)

எஃதுண்டேல், யாவும் எனக்குள் ளனவாகும்?
எஃதின்றேல், யாவும் இருந்தும்இல்லாம்?—அஃதென்
நிறை.அதனை நீக்கலினும் நீஎனக்குச் செய்வெம்
மிறையுளது கொல்லோ? விளம்பு. (அக)

என்நிறையை யான்இழந்தால், யாவும்இழந் தேனுவேன்.
என்நிறையை நீநீக்கில், என்பெறுவாய்?—மன்ன!
நிலையாத இன்பும்,நிலையாம் வசையும்,
தொலையா நரகுமலாற் சொல். (அஉ)

"என்னுயிரி னும்மினியாய்" என்றெனைச்சொன் னுய்;அவ்
இன்னுயிரினும்மினியஎன்நிறையைக்—கொன்னே [வென்
அழிப்பன்எனற் குன்நாஎவ் வாறெழுந்ததேயோ!
ஒழித்திடுதி அவ்வெண்ண மும். (அ௩)

கூறுகூ று [2] எற் குறைத்தென் உயிருமெய்யும்
வேறுவே றுக்க விழைந்திடினும்,—மாறுகொண்டு
நின்னை விலக்கும் நினைவுமுறேன், வேந்தே! நீ
என்நிறையை நீக்கா யெனில். (அச)

அஞ்சலிப்பேன், நன்றி அறிமொழிகள் கூறுவேன்,
எஞ்சலில்பல் ஊழிவாழ் கென்றிசைப்பேன்,—மிஞ்சி
நிறையையழி யாமலுயிர் நீக்கப் புகுந்தால்.
அறிக, இது சத்தியம் என் றுள். (அரு)

---

1 தோற்றல் - இழத்தல்.

2 எற்குறைத்து - என்னை வெட்டி.

### இந்திரன் கூறுதல்.

அயலவன தாடைஅவ் ஆடையின்நீர்த் தூவல்
1 மெயினிழல்கா லுக்கும் விலகிச்,—செயிர்மருவா
தின்நிறை காக்க,என்ப. என்னின்,உனை யான்தொட்ட
பின்னினது கற்புளதோ? பேசு. (அசு)

கிட்டிஉனை யான்தொடவே கெட்டதுநின் கற்புக்கெட்
டிட்டகற்போ மீளா தினியென்றும்.—2 சிட்ட
விரதம்கெட் டும்சுகத்தை மேவத் தடைஎன்?
தெருள்தி விரைவின்இசை தி. (அஎ)

இன்னே இணங்குதியேல், யாரும் அறிந்திடார்.
உன்நா யகன்ஐ யுறான்உன்னைப்.—பொன்னே!
தெரியாத குற்றங்கள், செய்யா தனபோல்,
உரையா தனவாம் உணர். (அஅ)

உன்நேயன் யான், எவருக் கும்முரையேன்; நீ உரையாய்.
பின்னேஎவ் வாறு பிறர்அறிவர்?—மின்னே! நம்
எண்ணமதைச் சொல்லேமேல், யாரஃ தறிவார்? அவ்
வண்ணம்உறும் நின்சம் மதம். (அகூ)

இந்தா மணிமுத்தம் என்றருள்வை யேல்,உனக்குச்
சிந்தா மணியாதி செல்வமெலாம்—தந்தமுதும்
ஈவன்.அதை நீஉண் டிமையோர்போல் எஞ்ஞான்றும்
வீவதின்றி வாழ்வையென்றான் வேந்து. (கூ0)

---

1 மெய்யினிழல் காலுக்கும் - தேகத்தி னிழலுக்கும் காற்றுக்கும்.

2 சிட்ட - நல்ல. "விரதம்கெட்டும் சுகத்தைவிடுவானேன்?" என்பது பழமொழி.

## அகலிகை கற்புநிலை கலங்கல்.

[1] கவடா அவன்மொழிந்த காமமொழிக் காற்றுச்
[2] செவிவாய்தன் மார்க்கமாச் செல்லா—அவள் [3] அகத்தே
ஆடாது கோடா தவிர்ந்த [4] நிறைவிளக்கைச்
[5] சாடாச் சலிப்பித் தது. (கூக)

[6] தீயான்ஒள் மேனிபுல்கை [7] தீராது, [8] சொல்வாதம்
வாயா னனிவழங்க, மாருதத்தோ—டேயாக்
குவவுதழல் சூழ்பொற் குடத்துநறு நெய்போல்,
அவள்நெஞ் சிளகிடலுற் றாள். (கூஉ)

அகப்படச்செய் தாய்.தப்பும் ஆறில்லை. என்றால்
[9] தகைப்புறுவா யல்லை. [10] தமியேன்.—திகைப்புற்றுப்
பாவமதற் குள்ளாக்கப் பட்டுவிட்டேன். யான்தடுத்
தாவதினி யாவதென்று ளால். (கூங)

---

[1] கவடா - கபடமாக. [2] செவி வாய் தன் மார்க்கமா - (1) செவி (காது) ஆகிய வாயின் வழியாக; (2) அழகிய வாய்தல் (வாசல்) வழியாக. [3] அகத்தே - (1) நெஞ்சிலே; (2) வீட்டிலே. [4] நிறைவிளக்கு-(1) கற்பாகிய தீபம்; (2) பூரணமான (அல்லது நெய்நிறைந்த) விளக்கு. [5] சாடா - சாடி.

[6] தீயான்- (1) கொடியவன்; (2) தீயினால் (தொனிப்பொருள்). [7] தீராது - நீங்காமல். [8] சொல்வாதம்வாயானனி வழங்க- (1) போதித்துச் சொல்லும் வாதமொழிகளை வாயினால் மிகுதியாகச்சொல்ல ; (2) சொல்லப்பட்ட காற்று வாய்ந்து மிகுதியாக உலாவ (தொனிப் பொருள்)

[9] தகைப்பு - தடுப்பு - தடை. [10] தமியேன்-யான் இப்போது துணையாக ஒருவருமில்லாத தனியளா யிருக்கின்றேன்.

### கௌதமர் தம் ஆச்சிரமத்துக்குத் திரும்புதல்.

இல்லகன்று சென்றமுனி, இன்கங்கை ஆடிடப்போம்
[1]எல்லைவிடி யாமையைக்கண் டேதுஎன்னென்-றெல்லையில்
[2]தற்றம்ஒன் றுநேர்ந்ததென்றோர்ந்தாங்குநீராடாமே[ஆய்ந்
இற்றிரும்ப லுற்றான்வல் லே. (கூச)

### அவர் இருவர்களவையும் கண்டுகொள்ளல்.

தூய அவிதிருடித் துய்த்த திருட்டுநாய்
[3] ஏய,மக வான்பிரியும் எல்லையினில்,— [4]சீயமெனக்
கோதமன்இல் வந்துகண்டு கொண்டான், இருவர்செய்த
ஏதம் அனைத்தையு மே. (கூரு)

காலாந்தத் துண்டாம் கனல்நேர் சினமேவிக்,
காலாந்த கன்போன்று, கண்சிவந்து,—மேலாந்தன்
இல்வாழ்வின் மாண்பைஅழித் திட்ட இருவரையும்
கொல்வான்போற் பார்த்தான் குறித்து. (கூசா)

உட்கி, அடங்கி, ஒடுங்கி, நடுநடுங்கி,
வெட்கி, மெலிந்து,வெளிறி, ஒளி—[5] மட்கி,
[6] உலைந்தார்; [7] குலைந்தார்; [8] உடைந்தார்; [9] இடைந்தார்;
[10] அலைந்தார்; இருவரும்நின் றார். (கூஎ)

---

[1] எல்லை - கால எல்லை. ஆடிடப்போம் எல்லை - ஆடிடப் போகும்போது. ஸ்நானஞ் செய்ய ஆரம்பிக்கும் சமயத்தில்.

[2] அற்றம் - சோர்வு. [3] ஏய - போல. [4] சீயம் - சிங்கம்.

[5] மட்கி - மழுங்கி. [6] உலைந்தார் - மனங்கலங்கினர். [7] குலைந்தார் - ஒழுங்கு கலைந்தார். [8] உடைந்தார் - தளர்ந்தார். [9] இடைந்தார் - பின்னிட்டார். [10] அலைந்தார்; இருவரும் நின்றார் - தள்ளாடினராகி இருவரும் நின்றார்கள்.

### கௌதமர் இந்திரனைச் சபித்தல்.

செவ்வழியிற் றீர்ந்தஅவர் தீவினைசிந் தித்து,முனி,
இவ்வழிவு செய்தவர்கட் கேற்றதண்டம்—செய்வனெனு,
"வேற்றுருவங் கொண்டாய்!நீ வேட்டஉரு மெய்முழுதும்
ஏற்றிடுவாய்" என்றான் இடித்து. (கூஅ)

### அகலிகையைச் சபித்தல்.

1 தன்னைத்தான்காக்குந்தனிப்பொருளாஉற்றமைபோய்த்,
தன்னைக்கா வாத சடப்பொருள்போல்,—துன்னிக்கைப்
பற்றினன்பால் உற்றனை.நீ பாவையென்ப தன்பொருளைத்
தெற்றெனயான் இன்றுதெரிந் தேன். (கூகூ)

2 வஞ்சனைக்குள் ளானலும் வஞ்சனொடும் வஞ்சி! நீ
அஞ்சுபுல இன்பம் அனுபவித்தாய்.—விஞ்சு
புலம்ஒன்றையும் உணராப் புன்கல்லாய்க் கானத்
தலம்ஒன்றி வைகுகென்றான் தான். (க00)

### இந்திரன் தன்சாபம் சாவினும் கொடிதென்று வருந்தல்.

சாவதனுக் கஞ்சிலேன்; சாவதனி னும் கொடிய
3 சாவம்எய்தி னேன், என் சபைநிற்க;—யாவரைத்தான்
காணுவேன் ! என்னையான் காணவே சாலவும்
நாணுவேன் ! என்றான்மன் னைந்து. (க0க)

---

1 மனைவி, பொருள் என்று "பிறன் பொருளாள்" என்ற குறளிலும் அவள் தன்னைக்காத்தல் "தற்காத்து" என்ற குறளிலும் கூறப்படுதல் காண்க. இல்வாழ்வானுடைய பல பொருள்களுள் தன்னைத்தான் காக்கும் ஒரே பொருள் மனைவியென்பது புலப்படத் "தன்னைத் தான்காக்கும் தனிப்பொருள்" என்று கௌதமர் கூறினர்.

2 இந்திரன் தன் சுபாவரூபத்தோடில்லாமல் கௌதமரூபம் கொண்டிருத்தலால், "வஞ்சனைக்குள்ளானலும்" என்று கௌதமர் கூறினர். ஞான திருஷ்டியினல் அவன் "வஞ்சனைக்குள்ளானலும்" என்றார் எனலும் ஆம்.

3 சாவம் - சாபம்.

ஈண்டெவரும் எள்ளும்உரு எய்துடலை நீத்திடுவான்
மாண்டிடுவென் என்னில்யான் மாள்வுறேன்:-வேண்டிடினும்
சாவாவின் ஞோர்வாழ்க்கை சாகுமண்ஞோர் வாழ்க்கையி
ஆ! ஆ! அறக்கொடிதென் றூன். [னும்

இந்திரன் மறைவிடம் தேடி உறைதல்.

சுளித்துமுனி சொன்னஉருத் துன்னுகுறி தோன்ற,
ஒளித்திடுதற் குன்னி ஒதுங்கி,—வெளிப்பட்டு,
விண்ணவரும் வேறெவரும் மேவா மறைவிடத்தை
அண்ணி மறைந்துறைந்தான் ஆங்கு. (க0௩)

அகலிகை தன் சாபத்தைப்பற்றி நினைதல்.

ஆகம்அய லான்கை அகப்படினும் நெஞ்சினைக்கல்
ஆகநிறுத் தாஎனெஞ்சே டாகமும்கல்—ஆகும்
இதுபழிசேர் வாழ்வின்இனி தெங்கோனை நீங்கும்
அதுகொடிதென் றூள்அகலி யை. (க0௪)

எம்பெருமாள் பேரருள்[1]என் என்கேன்! என் தீவினையின்
வெம்பயன்ஆற் றேன்உணர்வுமேவின்என் று—துன்புறுக்
கல்லாக என் று கருணைவெள்ளத் தாழ்த்தினன் என்
பொல்லாப் பிழையைப் பொறுத்து. (க0ரு)

அகலிகை கௌதமர் காலில் வீழ்தல்.

இன்னும் இரங்கிடுவான். இன்னருளுக் கெல்லைஇல்லை.
தினனும்என் றன் [2]தோடம்துடைத்துமுன்போல்-தன்னடி
டாற்ற அருளுவனென் றன்ஞன் அடிப்போதில்[த்தொண்
போற்றிஎன் று வீழ்ந்தாள்அப் பொன். (க0சு)

---

[1] என் என்கேன் - என்னென்று சொல்வேன். [2] தோஷம்.

தக்கோன்தா ளில்,[1] மெய் தடித்தெனஒல் கக்,கூந்தல்
மைக்கா ரெனக்குலைய, வாய்விட்டு—மிக்கேங்கி
வெய்துயிர்ப்பு நீள்காற்று வீசக்,கண் ணீர்மாரி
பெய்து கிடந்தாள்அப் பெண். (கoஎ)

அவர் அவளை எழச்செய்து தேற்றல்.

தன்னுயிரே தன்தாளில் தாழ்ந்து விழுந்திட்டால்,
என்னவிழுந் தாளை எழச்செய்து,—மின்னனையாய்!
ஊழ்வலியால் ஏதிலன்கை உற்றுமயங் கிப்பிழைத்துத்
தாழ்வடைந்தாய்: [2] மாழ்கலென்றான் தான். (கoஅ)

அவள் கூறுதல்.

உறப்பெரும் பாக்கியஞ்செய் துற்றனைநீங் கற்கும்
அறப்பெரும்பா வஞ்செய் தமையால்,—[3] மறக்கடையேன்
இவ்வா றழிந்திழிந்தேன் ஈசன்ஒப்பாய்! நின்திருமுன்
எவ்வாறு நின்றிடுவேன் யான்? (கoகூ)

அந்நியள்ஆ னேன்நின் அருட்குன் அதிசுத்த
சந்நிதியில் நின்றிடவும் தக்கேனோ!—உந்நதமாம்
செய்யசுவர்க் கத்துமுன்ஆழ் நிரகும் ஒண்கதிர்முன்
மையிருளும் நின்றிடலா மா? (ககo)

மயிரிழந்த மானும் மதியிழந்த வானும்
உயிரிழந்த மெய்யும் உறழச்—செயிர்இல்
நிறையிழந்த நான்பொறையே நீர்ப்புவிக் கென்ப
தறிதரக்கல் ஆதல்அமை வால். (ககக)

---

[1] மெய் (உடம்பு) தடித்தென (மின்போல) ஒல்க (துவள).

[2] மாழ்கல் - மயங்கல் - மயங்காதே. [3] மறக்கடை - பாவத்தின் அந்தம் - மிகப்பெரும்பாவம்.

கல்லாவ தற்குக் கவல்கிலேன். நின்னில்லாள்
அல்லாள்ஆ தற்கும் அழுங்குகிலேன்.—நல்லாய் !
திருவடிக்குற் றேவல்கள்என் சென்னியிற்செய் செல்வம்
ஒருவுதற்கே நைவனென்றாள் ஓர்ந்து. (கக௨)

கௌதமர் அவள் சாபம் நீங்க அருள் செய்து அது நீங்கும்

காலத்தைக் கூறுதல்.

கல்லா உறலே 1 கழுவாயா, மீண்டும்எனக்
கில்லாவாய். மாயோன், இராகவனாய்—வில்லேந்தித் [ருவம்
தோன்றுவன். அத்தோன்றல்தாள்தோய்ந்திடலும்தொல்லு
2 ஏன்றிடுவை என்றான் இனிது. (ககந)

அவள் சாபம் நிவிர்த்தி செய்ததற்கு நன்றிஅறிவு கூறுதல்.

என்ற அருள்மொழிகேட் டென்புருக நெக்குருகி
நன்றி அறிவு நனிஎய்திக்—3 கொன்றனதீங் [உன்
கென்போல் இழைத்தாரும் இல்லை. பொறுத் தார்களுள்
தன்போல்வா ரும் 4 மில்என்றாள் தாழ்ந்து. (ககச)

அவள் மன அமைதி பெற்றுக் கல்லாதல்.

இறைவற் குலகுகைம்மா றென்செய்யும்? யான்என்
இறைவற்குச் 5 செய்வதுவும் இல்லென்—றையா,
அகத்திருத்தி ஆர்ந்தேன்என் றாள். பின்கல் லாய்க்கான்
அகத்தில் அமர்ந்தாள் அவள். (ககரு)

---

1 கழுவாய் - பிராயச் சித்தம் - பரிகாரம். 2 ஏன்றிடுவை- பொருந்துவாய்.

3 கொன்றன தீங்கு - கொன்றால் அன்ன தீங்கு - கொன்றதை ஒத்த தீமை. 4 இல்-இல்லை.

5 செய்வதுவும் - செய்வதாகிய கைம்மாறும்.

3719

### தேவர்கள் இந்திரனுக்குச் சாபவிமோசனம் செய்யும்படி கௌதமரைப் பிரார்த்தித்தல்.

வானாடு கோன்இன்றி [1] மாழ்க,வா னோர்குருவால்
கோன்ஆர் நிலைதெரிந்து, கோதமன்பால்—போனார்;தாள்
வீழ்ந்துவெஃ [2] சாபவிடை வேண்டினார்; வேண்ட அவன்
சூழ்ந்திதனைச் சொன்னான் துணிந்து. (கக௬)

### அவர் சாபத்தை நீக்காது அதனை ஒருவாறு மாற்றுதல்.

இந்திரனுக் கெய்தும்உரு என்றும்அவற் கவ்வுருவா
நொந்திடத்தோன் றிப்பிறர்தம் நோக்கினுக்குச்-சந்ததம்ஏர்
துன்றும் உருவாகத் தோன்றும் இனி நாளுமே
அன்றுபோல் ஆள்க அரசு. (ககஎ)

கண்களிப்ப ஏனையவர் காணும்உரு வாசவற்குப்
புண்கடுப்பத் துன்பு புரிதல்போல்,—விண்களிப்ப
ஓங்கரசும், தன்நெஞ் சுணர்குற்றம் உண்மையால்,
ஆங்கவற்குத் துன்புசெய்த தால். (ககஅ)

### அகலிகை சாபம் நீங்குதல்.

கானிடைச்செல் காகுத்தன் கால்படலும் ஆங்கொருகல்
மானிகர்கண் மாதாக மாற,உடன்—போனதவக்
கோசிகன்அக் கோதைஉயர் கோதமன்இல் லென்றுமுன்பு
பேசுவர லாறுரைத்தான் பின். (ககசு)

[3] தீய வினைஅரவம் தீண்டிநுங்கத் தேசொருவி
[4] மாயலுற்று வைகிஅவ் வாளரவம்—வாயினின்று
நீங்க உமிழ நிலவும் மதிபோல
ஈங்கொளிரு கின்றாள் இவள். (க௨0)

வன்கொலைஞ ராதிவெய்ய மாபா தகர்களும்நின்
மென்கழலை உன்னவே மிக்கமுத்தி—நன்குறுவார்.
அன்னகழல் தீண்டும் அரும்பேறு பெற்றஇவள்
தொன்னிலையை எய்தலரி தோ. (க௨க)

---

[1] மாழ்க - மயங்க. [2] சாபம் விடுதலை.

[3] தீயவினை அரவம் - அகலிகையின் தீவினையாகிய பாம்பு; (2)கொல்லும் கொடுஞ்செய்கையுடையபாம்பு. [4] மாயல்-மறைதல்.

கல்லுருவம் நீங்கினள், கற்பிழந்த மெய்யுற்ற [அத்
ளல்லள், கற்பு நீங்குமுன்னர் ஆர்ந்தமெய்யும்-[2] புல்லலள்,
தொன்மெய்போன்றம்மெயினும்தூயகெடாமெய்யுற்றாள்,
[1]இந்நின்றாள் இன்நின்றாள் ஏய்ந்து. (கஉஉ)

[2] கற்கனியா நின்றதுநின் காலால் அடியருளக்
கற்கனியா நின்றசெயல் காட்டுமால்.—[3] முற்கான்
இடைக்கொடியாள் மாய்ந்தனள், நீ எய்தலால், இக்கான்
இடைக்கொடியாள் தோன்றினள்இன் னே. (கஉங)

[4] தோளால் முந் நீரிலொரு தோகையுதித் தாள். இன் றுன்
தாளாலோர் கல்லிலொரு தையல்வந்தாள்.—தோளை
அவள்அடைந்தாள். [5]தாள்தானே ஆம்கோ தமனை
இவள்அடைதல் ஏற்புடைய தே. (கஉச)

---

1 இந்நின்றாள் இன்நின்தாள் ஏய்ந்து - இங்குநின்ற இவள் இனிய நினது தாளை (பாதத்தை)ப் பொருந்தி.

2. நின் காலால் கற்கன்னியா நின்றது - நின்கால் தோய்தலால் கல்லானது அகலிகையாகிய கன்னிகையாகி நின்றது. நின் காலால் அடியருளக்கல் கனியா நின்றசெயல் காட்டும் - உனது திருப்பாதங்களைத்தியானித்தலால் அடியராவார்களுடையநெஞ்சக்கல்லானது கனிந்துருகாநின்ற செயலைக்காட்டும். 3. நீ எய்தலால் (அம்பெய்தலால்) முன்கான் இடை (நீ இதற்குமுன்பு உற்ற அந்தக்காட்டினிடத்து)க்கொடியாள்(கொடுமையை உடையாளாகியதாடகை) மாய்ந்தாள் (மறைந்தாள், செத்தாள்). நீ இக்கான் எய்தலால் - நீ இந்தக்காட்டில் வந்ததனால். இடைக்கொடியாள்(இடையாகிய கொடியை உடையாள்-கொடிபோன்றஇடையாள் ஆகிய அகலிகை) இன்னே (இப்போது) தோன்றினாள்.

[4]முன்பும் இன்றும், தோளும்தாளும், முந்நீரும் ஒருகல்லும் (சிரமப்பட்டு நெடுங்காலம் கடைதலும் சிரமமில்லாமற் கணநேரம் மிதித்தலும்) எதிரிடைப்பொருள்களாகவும் இருசமயங்களிலும் ஒருகன்னிகை உற்பவித்தல் ஒற்றுமைப் பொருளாகவும் இருக்கின்றன. முந்நீரில் - (1) கடலில் (2) முன்பு நீரில் (தொனிப் பொருள்). 5 அடியாரைத் திருவடிகளென்பது வைணவ சம்பிரதாயம். பெரிய திருவடி, சிறிய திருவடி, சடகோபம் சாத்தல் என்பவைகளை நோக்குக.

நிறையிழந்து மேம்பாடு நீங்கிக்கல் லாம்தாழ்
வறிய, மணக் கன்னியர்கால் அம்மி— உறமிதிப்பர்.
நின்னடிதோய் மாண்புணர, நெஞ்சில் நிதம்இவளை
உன்னிஎழு வார்கள்பெரி யோர். (கஉரு)

தீயநெஞ்ச வாசவன்கை தீண்டுபெண் கல்லாகத்
தூயநெஞ்சராகவன்சால்தோய்கல்பெண்ணு—மேயதனுல்,
நல்லாரைச் சேர்ந்தாகும் நன்மையுந்தீ யார்ச்சேர்ந்தாம்
பொல்லாங்கும் தேர்வர்சிந்திப் போர். (கஉசா)

வழூவு பிழைக்கிரங்கி மாழ்குநர்த்தண் டித்துப்
பழையநிலை உய்த்தாள் பரன்போல்,—நழூவிஇவள்
செய்ததவ றுக்கிரங்கத் தெண்டித்தாட் கொண்டருள்செய்
கௌதமனுக் கில்லைநிகர் காண். (கஉஎ)

இடையில்உற்ற மாசுதனை ஏயந்தவெஞ் சாபப்
புடம்அகற்ற, முன்னின்ஒளிர் பொன்னுய்,—அடுதலுற்ற
இன்பால்போல் முன்னின் இனியளாய்க், கோதமனுக்
கன்பா குவள்இவளென் ருன். (கஉஅ)

கௌதமர் அகலிகையை அங்கீகரித்தல்.

மாதவ இராமர்கள்அம் மாதினெடு சென்றவளைக் [றன்
கோதமன்பாற் சேர்த்துவிடை கொண்டகன்ருர்.-காதலிற்
பன்னிதனை நன்கேற்றுப் பண்டுபோல் இல்வாழ்வை
அன்னவன்மேற் கொண்டொழுகி ஞன். (கஉகூ)

வாழ்த்து.

இல்வாழ்வு [1] வாழிய ஈசன் அருள்வாழி
செல்வாழி ஆன்வாழி சீரியோர்—சொல்வாழி
ஐந்தாம்ஜார் ஜாம்எம் அரசர்பிரான் வாழிஅவன்
சந்தானம் வாழி தழைத்து.

அகலிகை வெண்பா

முற்றுப் பெற்றது.

---

1 வாழிய - (1) வாழ்க, (2) வாழும் பொருட்டு.

# அகலிகை வெண்பா

## வசனம்.

---

### கடவுள் வழிபாடு.

எந்தப் பொருளை ஸர்வ ஸமயங்களும் "நான் கண்டு கொண்டேன்" "நானே அறிந்துகொண்டேன்" என்று சொல்லா நிற்குமோ? எந்தப் பொருளைச் சாஸ்திரங்களெல்லாம் தத்தமக்குரிய முறைப்படி ஆராய்ந்து உன்னி எட்ட மாட்டாமல் இளைப்படையா நிற்குமோ? எந்தப் பொருளை நாஸ்திகமதம், நான் ஒரு சிறிதும் தெரியேனென்று பிடிவாதமாகக் கூறுநிற்குமோ? அந்தப் பரம் பொருளையே, எனது நெஞ்சே! நீ பற்றுக்கோடாகப் பற்றி உய்வாயாக.

### அவையடக்கம்.

தினந்தோறும் காலையில் துயிலுணர்ந்தெழும்போது தம்மைத் தியானிப்போர் பாவங்களெல்லாம் நீங்கும்படியான மகத்துவமுடைய பஞ்சகன்னியருள் ஒருத்தியாகிய அகலிகையின்கதையை, யான் கற்ற பெரியோரைத் தியானித்துக்கொண்டு, கூறுகின்ற இந்நூலானது, அவ்வாறு தியானித்தல் காரணமாக, குற்றங்கள் நீங்கப்பெற்றுச் சிறப்புடையதாகும். [அகலிகையைத் தியானித்தல் காரணமாக, தியானிப்போர் செய்யும் பாவங்கள் நீங்குதல் போல, கற்றோரைத் தியானித்தல் காரணமாக, தியானிப்போன் கூறும் நூற்குற்றங்கள் நீங்கும்.] இந்நூலுக்கு, இப்போது கூறியதல்லாமல், வேறு அவையடக்கம் கூற வேண்டியதில்லை.

# நூல்.

---

## இந்திரன் கொலுவிருத்தல்.

* க. கற்றோரும் மற்றோரும் தாங்கள் தாங்கள் புகழ்ந்து அலங்கரித்துக்கூறும் நாடு நகரங்களை முறையே பொன்னாட்டையும் பொன்னகரத்தையும் ஒக்குமென்று ஒப்பிடுவது பெருவழக்கு. அப்படி மற்ற நாடுநகரங்களுக் கெல்லாம் சிறந்த உவமானமாகவுள்ள பெருமைபடைத்த நாட்டையும் நகரத்தையும் ஆளும் தேவராஜன் ஒரு நாள் தனது ஸபாமண்டபத்திலே கொலுவிருந்தான்.

உ. அவன் சிரசுக்குமேல் வெண்கொற்றக்குடை பிரகாசிக்க, இருபுறத்தும் தேவமாதர்கள் நின்று வெண் சாமரம் வீச, கின்னரர்கள் யாழ் இசைத்துப் பாட, எதிரே தேவ நடனமாதர் நிர்த்தனஞ் செய்ய, சிங்காத னத்திலே இந்திராணி ஸமேதனாக வீற்றிருந்தான்.

ங. ஒருபுறத்திலே மேனகை நின்று விசிறிகொண்டு வீச, மற்றொரு புறத்திலே திலோத்தமை நின்று தாம் பூலம் மடித்துக் கொடுக்க, இவ்விருவர்போலவே சிறந்த அழகுள்ள ஊர்வசி, அரம்பை முதலிய மற்றைத் தேவ மாதர்கள் அவனுடைய ஏவல்களைச் செய்தற்குச் சித்த மாகச் சூழ்ந்து நின்றார்கள்.

ச. கின்னரர்கள், கந்தருவர்கள், கிம்புருடர்கள், வித்தியாதரர்கள், நாகலோகவாசிகள், இயக்கர்கள், முனி வர்கள், தேவர்கள், பூலோகத்து அரசர்கள், பதினொரு ருத்திரர்கள், நவக்கிரகதேவதைகள், இருபத்தேழு நக்ஷத் திர தேவதைகள், எட்டு வசுக்கள், இரண்டு அசுவினி

---

* இது முதலிய எண்கள் மூலநூலின் பாட்டுக்களின் எண்கள்.

தேவர்கள் முதலியோர்கள் அந்தச் சபைக்கு வந்து நெருங்கினார்கள்.

ரு. தேவ தருக்கள் ஐந்தும், சங்கநிதி பதுமநிதி இரண்டும், காமதேனுவும், சிந்தாமணியும் ஆகியவைகள் அவன் யார் யாருக்கு யாது யாது கொடுக்கும்படி கட்டளையிடுகின்றானென்று குறிப்பறிந்து கொடுத்துக் குற்றேவல் செய்துகொண்டு நிற்க, கட்டியகாரர் அவனது விஜயப்பிரதாபங்களை எடுத்துக்கூறிப் புகழாநிற்க, தேவர் முதலியோர் தத்தம் குறைகளைக் கூறி இரந்துகொண்டு தாழ்ந்து நிற்க, அந்தக் குறைகளைத் தீர்த்துக் குதூகலமாக இருக்கும்போது, அவன் மனத்திலே தன் குறையாகிய பின்வரும் நினைவு தோற்றியது.

கோலுவிருக்கும் மத்தியில் இந்திரன் அகலிகையை நினைதல்.

சு. உலகெங்கும் உள்ள பல பொருள்களிடத்தும் காணப்பட்ட சகல பேரழகுகளும் ஒருங்கே கூடித் திரண்டு ஒரு பெண்ணுரு வெடுத்தாற்போன்றவளும் எனது நெஞ்சம் உண்ணும் அமுதமானவளும் ஆகிய அகலிகையை யான் அடையச்செய்யும் பலன் இல்லாத எனது பாக்கியம், மற்றப்படி எவ்வளவு பெருமையுள்ளதாயிருந்தாலும், அவ்வொரு பலன் இல்லாததால், பயனற்றதே.

எ. அவள் என்னைக் கடைக்கண்ணால் ஒரு முறை நோக்கும் பாக்கியத்தைப் பெறுவேனானால், அதற்குப் பிரதியாக, கற்பகதரு சங்கநிதி பதுமநிதி முதலான எனக்குள்ள சகல செல்வத்தையும் கொடுப்பேன். இம்மட்டோ, அப்பார்வையைப் பெறுதற்கு எனது உயிரையும் கூடச் சந்தோஷமாகக் கொடுப்பேன்.

அ. தேவர்கள் அமிர்தம் பெறுதற்காகக் கடலைக் கடைந்த காலத்திலே உண்டாகிய உண்ணமுதோடு அப்

பெண்ணமுதும் தோன்றினாள். அவள் தோன்றிய அப்பொழுதே நான் அவளைக் காதலித்தேன். கௌதமனும் காதலித்தான். ஆகவே எங்களில் யார் அவளைப்பெறு தற்குரியனென்று முடிவு செய்தற்காக, பிரமதேவன் எங்களை நோக்கி "நீங்கள் இருவீருமே இந்தக் கடல்நீர்க்குள் முழுகுங்கள். உங்களில் எவன் பின்னெழுவானோ, அவனே இவளுக்கு நாயகன்" என்றான். அவ்வாறு நாங்கள் முழுக, நான் முன்னெழுந்துவிட்டேன். அவன் பின்னெழுந்து அந்தப் பெண்ணைப் பெற்றான்.

### அகலிகையின் வடிவ வருணனை.

௯. கடலிலே (உதய காலத்திலே தோன்றும் பால சூரியன்போல) அந்த ஸ்த்ரீஜோதி உதயமான உடனே எனது இருதயமாகிய வானத்திலே அவ் உதயகாலத்துக்கு முன்னே (சென்ற எனது ஆயுட் காலமாகிய இரவிலே) பிரகாசித்துக்கொண்டிருந்த மேனகை அரம்பை ஊர்வசி திலோத்தமை முதலிய மாதராகிய நக்ஷத்திரங்கள் இருந்த இடமும் தெரியாமல் மறைந்தொழிந்து போயின. (அந்த இரவில்) அந்த நக்ஷத்திரங்களின் மத்தியிலே மிகச் சிறந்துவிளங்கிய இந்திராணியாகிய பெரும் பிரகாசச் சந்திரன், ஒளிமழுங்கிய பகற் சந்திரனாய் விட்டது.

௧௦. பலவானபொருள்களுள்ளே, காந்தம் ஒன்றே வன்மையுடைய இரும்பைக் கவர்வதுபோல, பலராகிய மாதர்களுள்ளே, அகலிகை ஒருத்தியே, எனது வன்மையான நெஞ்சைக் கவர்பவளா யிருக்கின்றாள்.

௧௧. மின்னானது, தன்னைச் சூழ்ந்து பொதிந்து மறைத்துக்கொண்டிருந்த கரிய மேகத்தை, அவ்வாறு

மறையாது, தனக்குப் பின் புறத்திலே தொங்கும் கருங் கூந்தலாக ஒதுக்கிக்கொண்டு, மகாலக்ஷ்மியும் விரும் பும்படியான அழகு மிகுந்தபெண் உருவம் கொண்டது. அவ்வாறு பெண்ணுருவங்கொண்ட மின்தான், என் கண் ணேயும் கருத்தையும் விட்டகலாமலிருக்கிற அகலிகை யாம்.

கஉ. "பிரபஞ்சத்தில் உள்ள கட்புலனுகக் கூடிய சகல பொருள்களுக்கும் நிழல் உண்டு. ஆயினும் அப் பொருள்களெல்லாவற்றையும் விளங்கச் செய்கின்ற ஒளி க்கு மட்டும் நிழல் இல்லை" என்று சொல்லுவோர்களே! கேளுங்கள். சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் அக்கினி ஆகிய ஒளிப் பொருள்களெல்லாவற்றின் நிழல்தான், அவைகள் சகலத்துக்கும் பின் புறத்தே தோன்றும், நீல வானமென்று தெளியுங்கள். ஒளியே அகலிகையாகியது. இதை அந்த நிழல் தெரிந்து அவளுடைய கூந்தலாகி யிருக்கின்றது. இவ்விஷயத்தையும் தெரிந்துகொள்ளுங் கள்.

கந. தேனுண்ண வந்த ஆண்வண்டு பெண்வண்டு இவையாக இருந்து விளங்கப்பெற்ற பூவானது அவளு டைய கண்களோடு கூடிய முகமாம். அந்தப் பூவின் தேன் அவளுடைய சொல்லாம். அப்பூவின் மலர்ச்சியழ கும் வாசனையும் மிருதுத்தன்மையும் குளிர்ச்சியும் ஆகிய வையெல்லாம் அவள் முகத்திலும் உண்டு.

கச. சந்திரன் அவள் முகம்போலும். அதன்களங்க மாகிய மானின் கண்கள் அவள் கண்கள் நேரும். அது கொடுக்கும் அமிர்தம் அவள் வார்த்தை நிகரும். அதன் உள்ளே உள்ள முத்து அவள் பல்லொக்கும்.

கரு. சிவந்தவரிகள் சிதறப்பெற்று அதனால் இனிய அழகுவாய்ந்த அவளுடைய வெண்கண் மத்தியில் கருங் கண்விளங்கும்காட்சிப்பொலிவானது,செம்பவளக்கொடி படர்ந்த வெண்பாற்கடல் மத்தியில் நீலவிஷம் தோன்று தல்போன் றிருக்கின்றது.

கசு. காதலாகிய அலைகள் புரளாநின்ற அந்தக் கண்களாகிய சமுத்திரங்கள், வருத்தம் செய்யும் பார்வை யாகிய விடத்தையும் அவ்வருத்தத்தை நீக்கும் பார்வை யாகிய அமுதத்தையும் மிகவும் கொடுப்பனவாம்.

கஎ. ஹலம் என்பது விரூபம். ஹல்யம், விரூப முடைமை. ஹல்யை, விரூபமுடைமையை உடையாள். அஹல்யை, விரூபமுடைமையை உடையாள் அல்லாள். எனவே, தேகத்தில் எந்தப் பாகத்திலும் சற்றும் அவல க்ஷணமில்லாமல் முற்றும் சுலக்ஷணமே உள்ளவளென் பது அஹல்யை என்பதன்பொருளாம்அப்பொருள்கொள் ளும் அஹல்யை என்று அவளுக்குப்பெயரிட்டது, அழகி னால் பிரபலமான மற்ற ஸ்திரீகளுள் இவ்வாறு வடிவத் தில் ஒரு சிறிதும் குற்றமில்லாதவள் ஒருத்தியும் இல்லை என்னும் உண்மையை யாவரும் தெரிந்துகொள்ளும் பொருட்டென்றால், அவள் அழகு வருணிக்கும் தர முடையதாமோ.

கஅ. யான் அவளுடைய அழகை இமை மூடாமல் இடைவிடாது நோக்கலுற்றேன். அதனால் இமையாத வன் ஆயினேன். "அரசன் எப்படி, குடிகள் அப்படி" என்றபடி என் குடிகளாகிய தேவர்களெல்லாரும் என் னைப்போல இமையார் ஆனார்கள். இவ்வாறு செயற்கை யாக என்னை யுள்ளிட்ட தேவரெல்லாம் இமையாரான உண்மையை அறியாதவர்கள், தேவர்கள் இயற்கையாக இமையாரென்று சொல்வாரானார்கள்.

## இந்திரனது காமநோய்.

கக. அவளைப் பார்த்த தினத்திலேயே என் நெஞ்சிலே பற்றிக்கொண்ட காமாக்கினியானது, சில காலஞ் சென்றால், தணிந்து அவிந்துவிடுமென்றெண்ணி யிருந்தேன். அவ்வாறு அவிவதற்கெதிராக, அது இதுவரையும் மேலும் மேலும் வளர்ந்தெரியாநின்றதே யன்றிச் சிறிதும் தணியாமல் என்னைக் கொல்லுதல்போலக் கொதித்து வருத்தாநின்றது.

உ0. வீட்டிலே தீப்பிடித்த உடனே அவித்து விடுதல் அதி சுலபமானது. அதுபோலவே நெஞ்சிலே பற்றும் காமாக்கினியையும் அது பற்றும்போதே பற்றாமல் அவித்துவிடுவது மிகவும் எளியது. இருவகைத்தீயும் மிகுதியாகப்பெருகிமிதமிஞ்சியபின் அவித்தல் முடியாது. இவ்வுண்மையை நினைத்துப் பார்த்து என்னெஞ்சிற் பற்றிய காமத்தீயை அது மிஞ்சிவிடு முன்னே அவியாமல் விட்டுவிட்டேன்.

உக. ஆயினும் நான் ஆரம்பத்திலேயே குற்றமுடையேனல்லேன். அவள் கல்யாணமாகாத கன்னிகையாக விருந்தபோது, நான் அவள்பால் மோகங்கொண்டேன். அந்த மோகம் குற்றமானதன்று. அவள் பிறன் மனைவியானவுடனே, நான் அந்தமோகத்தை நீக்கியிருக்க வேண்டும். அப்படி நீக்காததுதான் என்குற்றம்.

உஉ. அவள் பிறன்மனையானபின், முதலில், அவள் காதல் என்மனத்தில் கேவலம் தோன்றினதனால் மட்டும் நான் குற்றமுடையே னாகவில்லை; அக்காதல் தோன்றினவுடனே அதனை நீக்காமல் என்னெஞ்சில் நிலைக்க விட்டதனாலேயே குற்றமுடையேனானேன். (தோன்றின கணமே மறைந்துவிடும் மின்போலத்) தீயநினைவு, ஏகதேசமாகவே

னும்,தோன்றுத நெஞ்சுள்ள நல்லோரும் அவ்வாறே நல்ல நினைவுஎக்காலத்தேனும்தோன்றுதநெஞ்சுள்ள தீயோரும் இலரென்றே கூறலாம். ஆயினும் நெஞ்சில் தீய எண்ணம் தோன்றினுல், நல்லார் (பாம்புகௌவப்பட்டவன் அதனை உடனே உதறியெறிந்துவிடுதல்போல) அத் தீய எண்ணத் தைத் தோன்றின உடனே நீக்கிவிடுவார்கள். தீயாரோ (அப்பாம்பின்மணி கிடைக்கப் பெற்றுர்போல) அவ் எண்ணத்தை விருப்பத்தோடு ஆதரித்துத் தந்நெஞ்சில் நிலைத்து நிற்கவிடுவார்கள்.

உ௩. அந்தமாது மற்றொருவனுடைய மனைவியான பின்பு, என்னெஞ்சினுள்ளே பிரவேசித்த பொருந்தாக் காமத்தை உடனே வெளியே ஓட்டிவிடாததனுல், அதை இப்போது வெளியேபோகச்செய்தல்கஷ்டமாகிவிட்டது.

உச. காதல்செய் தென் காலனே (கொல்லுதலைச் செய்கின்ற தென்திசைக்குரிய இயமனே), நான் அமுத முண்டு சாவினின்றும் நீங்கிய தன்மையைத் தெரிந்து, இனிக் கொலையால்துன்பஞ்செய்தல் பயன்படாதென்று, காதல்செய் தென் காலனுகி (மோகத்தை யுண்டாக்கு கின்றவனும், தென்றற்காற்றைத் தேராக உடையவனு மான மன்மதனுக மாறுவடிவங்கொண்டு) அவ்வடிவத் தோடு என் எதிரே தோன்றிச் சண்டைசெய்தால், நான் கொன்றுவிடுவேனென்று பயந்து உருவை ஒளித்துக் கொண்டு அரூபியாக என்மேற் கொடிய போர்செய்கின் றுன். அவன் என்முன் தோன்றினுல், அவனைக் கண் இமைக்குமுன்னே கொன்றுவிடுவேன்.

உரு. விண் அமுதத்தால் சாகும் துன்பம் நீங்கியது. அந்தப் பயங்கரமான சாதற்றுன்பத்தைக் காட்டிலும் சகிக்க முடியாத கொடுந்துன்பத்தைச் செய்கின்ற காதற்

றுன்பமோ, அகலிகையென்னும் பெண்ணமுதால் நீங்குமேயன்றி வேறெதனாலும் நீங்காததாயிருக்கின்றது.

உசு. என் அரசாட்சி அழகாயிருக்கின்றது! என் ஆளுகைக்குள்ளடங்கிய குடியானவர்களுள்ளேயே, ஓர் ஏழை வைதிகப் பார்ப்பான் நான் காதலித்த அந்தப் பெண்மணியை எளிதாகக் கவர்ந்து இறுமாப்போடு சுகமாக வாழ்ந்துகொண்டிருக்க, யான் அவனைக்காட்டிலும் அற்பமான ஏழைபோல அந்தப் பெண்மணியைக் கைப்பற்றுதற்குரிய செயல் யாதொன்றுமில்லாமல் ஏங்கிப் பொருமியிருந்து வருந்துகின்றேன்.

உஎ. சொல்ல முடியாத மிகுந்த கொடுமையை உடைய ஒப்பற்ற பெரிய காமத்தீயும், கௌதமனுக்குத் தோற்றதனால் உண்டாகிய அவமானத்தீயும் சேர்ந்து என்னை வெதுப்புதல் சகித்தற்கரிதா யிருக்கின்றது அவ் வெப்பம் அவளுடைய குளிர்ந்த மேனியாகிய ஜலத்திலே படிந்தாலல்லாமல் தணியமாட்டாது.

உஅ கல்யாணமாகிய உலகத்தார் ஒப்பும் வழியால் யான் அடைய முடியாமற்போன அவளை உலகத்தார் ஒப்பாத தப்புவழியால் இப்பொழுதே அடைய முயல்வேன். அவ்வாறு அடையாவிட்டால் எவ்விதத்திலும் நான் பிழைப்பது அரிதாயிருக்கிறது, என்று நினைத்துத் தன் சபையிலே கூடியிருந்தவர்களெல்லாருக்கும் விடை கொடுத்துவிட்டு அந்தச் சபையை நீங்கினான்.

## அவன் கௌதமரது ஆச்சிரம முள்ள வனத்தைச் சேர்தல்.

உகூ. சபையினின்று நீங்கின தேவராஜன், தான் வெளியே விஜயமாகும்போதெல்லாம் வழக்கமாகக்கூடச் செல்லும் சேனையையும் பரிசனங்களையும் கூடவராமல்

நிறுத்திவிட்டுத் தனியனாகி, தான் குறித்த பெண்ணை அடையும்படி அவள் இருக்கும் இடத்தைநோக்கி வழி நடந்து, ஆகாயத்தை அளாவியதும் கௌதம முனிவரது ஆச்சிரமத்தைச் சூழ்ந்ததுமான வனத்தை அடைந்தான்.

**அவ் வனத்தின் காட்சியாலும் அந்தி சந்திரன் முதலியவைகளாலும் அவன் காமநோய் மிகுதல்.**

௩௦. மன்மதன் செய்யும் போரைக் கடக்கும்படி கருதிப் புறப்பட்ட யான் (சோலையாகிய) அவனுடைய படை வீட்டிலேயே வந்து சேர்ந்தேன். இங்கே (பெண்கள் கூட்டமாகிய): அவனுடைய படைகள், மயில்கள் மான்கள் முதலிய பலவடிவங்கொண்டு, என்மேற் போர் செய்பவை போல என்னருகே வருகின்றன.

௩௧. அவளுடைய அழகிய உருவமானது, ஒரு பொருளும் இல்லாத வெறுவெளிப்பரப்பினும் நான் கண்டு மயங்கித் துன்பமடையும்படி தோன்றும். அப்படியிருக்க, அவள் வடிவம்போன்ற பூங்கொடிகளும் பூங்கொம்புகளும் யான் மோகமுறும்படி நிறைந்திருக்கிற இந்தவனத்திலே எந்த இடத்திலே யான் அக்கொடி கொம்புகள் அவளைப் போலத்தோன்றிச் செய்யும் துன்பத்திற்கு உயிர்தப்பப் பெற்றுப் பிழைத்திருப்பேன்.

௩௨. மாலைக்காலமே! கரிய நீர்மேகத்தைச் சிவந்த தீயாகச்செய்து அதற்கு மறுபேராகச் செவ்வானமென்று பேர்மாற்றி, அந்தச் செவ்வானத் தீயினால் என்னை அஞ்சும்படியாக வெதுப்புகின்றாயே. அவ்வாறு நீ என்னை வெதுப்புதற்கு யான் உனக்குச்செய்த தீங்கு யாது? சொல்வாயாக.

௩௩. பரந்த விஷமே திரண்டு பறவையுருக்கொண்டாற்போலும் கரிய உருவமுடைய குயிலே! நீ கூவும்

கூறலும் அவ்விஷத்துக்குச் சமானமே என்றாலும், அமுதுண்டிருக்கின்றேனாதலால், கொல்லும் தன்மையுள்ள அந்த விஷத்துக்குப் பயப்படாத யான் இந்த உனது தொனியாகிய விஷத்துக்குப் பயப்படுகின்றேன்.

௩௪. சிவபிரானுடைய, சூரியன் சந்திரன் அக்கினி ஆகிய, திரிநேத்திரங்களுள்ளே ஒரு நேத்திரமே குளிர்ச்சியான தென்றும் அந்த நேத்திரம் சந்திரனென்றும் அநேகர் சொல்லுகிறார்கள். அவர்கள், அக்கினிக் கண்ணிலும் ஞாயிற்றுக் கண்ணிலும் இதோ விளங்குகின்ற திங்கட்கண் மிகுந்த வெப்பமுடைய தென்பதை அறியார்கள் போலும்.

௩௫. இயமன், கரிய இருள்போலும் நிறமுடையான் என்று சொல்வதன் பொருளை இதுவரை யான் தெரியவில்லை, இப்போது தான் தெரிந்தேன். எப்படித் தெரிந்தேனென்றால், இருளும் இயமனும் ஒரேமாதிரியாகப் பயம் அடையச் செய்து கொல்லும் தொழிலைப் பொருந்தியிருப்பதை அநுபவித்துணர்ந்து தெரிந்தேன்.

௩௬. புதிதாக மலர்ந்த புஷ்பங்கள் தோறும் நுழைந்து அவைகளில் உள்ள மகரந்தப்பொடி, தேன். குளிர்ச்சி, மணம், ஆகிய இவைகளைக் கிரகித்து மெதுவாக உலாவுகின்ற தென்றற்காற்றுங்கூட எனக்கு வருத்தத்தை உண்டாக்குகின்றது. இது அதன் குற்றமன்று; என் குற்றமே; வெல்லம் கசப்பது, வாயின் குற்றமேயன்றி, வெல்லத்தின் குற்றமாமோ?

௩௭. யாவரும் தம்மைச் சேர்ந்தவருக்கு இன்பத்தையும் சேராதவருக்குத் துன்பத்தையும் செய்தல் சுபாவமே. யான் அகலிகையை அடைந்தால், இப்போது

3719

துன்பம்செய்கிற இந்த அந்தி சந்திரன் முதலியவை யாவும் எனக்கு இன்பத்தைச் செய்வனவாம். ஆதலால் இவைகளை நொந்ததனால் என் துன்பம் நீங்காது.

௩அ. தீர்தற்கரிய சகல வியாதிகளும் சஞ்சீவியாகிய ஒரு மருந்தினால் தீர்ந்துபோம். யாவனாயினும் ஒருவனுடைய பாவநோயெல்லாம் சிவபிரானுடைய தாளை அடையவே நீங்கிவிடும். அவ்வாறே, என்னை வருத்துகின்ற பலவகைப்பட்ட காமநோயும் அவளுடையதோளை அடையப்பெற்றால் தொலைந் தொழிந்துபோம்.

௩௯. என்று இவ்வாறு அவன் நினைத்து, செவ்வந்தி வானத்தையும், வெண் சந்திரனையும், காரிருளையும், பசுந்தென்றற் காற்றையும் துணையாகக் கொண்டு மன்மதன் செய்யும் துன்பத்தினால் வருந்தினான். ஆயினும் அகலிகையை அடையும்படி தான் கொண்ட கருத்து நிறைவேறுதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்து அவசரப்படாமல் பொறுமையோடு காத்திருந்தான்.

௪௦. அந்தச்சமயமானது எப்படிப்பட்டதென்றால், அது, ஊடே ஊடே ஆந்தைகள் அலறும் ஒலியே யன்றி வேறு யாதோர் அரவமு மில்லாமல் எங்கும் நிச்சப்தமுள்ள சமயமாகவும், மிகுந்த இருள்உள்ளசமயமாகவும், (இராப்போது காத்திருந்து வெளிவரும்) பகைவரும் பொருளைத் திருடும் சாதாரண திருடரும் அயலான் மனைவியின் இன்பத்தைத் திருட்டுத்தனமாக அடையும்படி அவன் கடைவாயிலிற்போய்க் காத்துநிற்கும் சோரபுருடரும் கொலைசெய்யும் மனிதரும் துஷ்டமிருகங்களும் அல்லாமல் வேறுயாரும் விழித்திராத நடு இராத்திரியாகிய சமயமாகவும், உள்ளது.

## இந்திரன் கௌதமரை அவர் கிருகத்தினின்றும் வெளியேபோக உபாயஞ் செய்தல்.

சக. அப்படிப்பட்ட அந்த அர்த்தராத்திரியிலே அவன் கௌதம முனிவருடைய கிருகத்தின் அருகே போய் நின்று, ஒரு கோழிபோலக் கூவினான். கூவவே அவர், தாம் காலைக்கடன் கழித்தற்குரிய விடியற்காலம் சமீபித்ததென்று நினைத்து, வெளியே புறப்பட்டுப்போனார்.

சஉ. அந்தச் சமயத்தில் இருள், உலக முழுதையும் விழுங்கினாற்போல மூடி, ஒன்றும் கண்ணுக்குத் தெரியாமற் செய்துகொண்டிருந்தது. அப்படிப்பட்ட இருள் அணுகாமல் ஒருவிளக்கு அவர்கிருகத்தினுள்ளே எரிந்துகொண்டிருந்தது. அது, அவர்மனத்தின் உள்ளே, அஞ்ஞான இருளை ஓட்டி விளங்கும் மெய்ஞ்ஞான தீபம்போலப் பிரகாசித்துக்கொண்டிருந்தது.

சங. பார்த்தோர் யாரும் கௌதமமுனிவரேயென்று கூறும்படி அவர்போல உருவுகொண்டு இந்திரன் அம்முனிவர் வெளியே போனபின் அந்த வீட்டினுள்ளே போக, அவரை வழியனுப்பிவிட்டு அங்கேநின்றுகொண்டிருந்த அகலிகை, அவ்வீட்டைவிட்டுப் போனவர் யாது காரணத்தாலோ திரும்பிவந்தாரென்று எண்ணி, வழக்கம்போல எதிர்சென்று வரவேற்றாள்.

## இந்திரன் அகலிகையைக் கட்டல்.

சச. இந்திரன் தன்னைக் கணவனென்று எண்ணி வரவேற்று வணங்கி எதிரே நின்ற அகலிகையருகே சென்று கட்டினான். கிட்ட வந்து கட்டவே, முன் தூரத்தில் கௌதமரென்று தான் மயங்கும்படி செய்தவன் அவரல்லனென்று அவள் தெரிந்தாள். தெரிந்தவுடனே,

சீ! விட்டிடென்று சொல்லிப் பின்னிடைந்தாள். அவன் அவளை விலகவிடாமல் அதிக இறுக்கமாகக் கட்டினன். அப்படிக் கட்டவே, அவள் வலையில் அகப்பட்ட மயில் போலப் பதைபதைத்தாள்.

௬௫. அவன், தன் வலக்கையினுல் அவள் இடக்கையைப்பற்றி, இடக்கையினுல் அவள்முதுகை அணைக்க, அவள், வலிய புலியானது பற்களினுல் கௌவி நகங்களாற் பற்றிய மான்போல, நெஞ்சு துடிக்கத் துன்பமடைந்தாள்.

௬௬. அவள், துன்பமானது வாள்போல நெஞ்சைப் பிளக்க, வீணே மிகுந்த கண்ணீர் விட்டழுது கலங்கிப் பொருமிப் பெருமூச்செறிந்து வேர்த்து நடுநடுங்கி இன்னது செய்வதென்று தெரியாளாய்ப் பின்வருமாறு தனக்குள்ளே சிந்திக்கலானுள்.

இந்திரன் கைக்குள் அகப்பட்ட அகலிகை தனக்குள்ளே வருந்தித் தவித்தல்.

௬௭. "நான் யாது செய்வேன்! யாது செய்வேன்! இப்போது எப்படித் தப்புவேன்! இவ்வாறு நேர்ந்தது யான் முன்செய்த வினைப்பயனே! என் கற்புக்கெடாமல் தப்பும்படி இந்த நிமிஷமே என் உயிரை மாய்த்துக் கொள்வேனென்றுலோ, அதுவும், யான் தப்பமுடியாமல் அகபட்டுக்கொண்டிருக்கும் இந்த நிலைமையில், செய்ய முடியாததாயிருக்கிறதே" என்று துக்கம் அதிகப்படத் துடித்து வருந்தினுள்.

௬௮. "மேகம் இல்லாமல்மின்னும்இல்லாமல்வெள்ளிடி விழுந்தாற்போல, இந்தமிகக்கொடிய ஆபத்து நேர்ந்துவிட்டதே! ஐயோ! கெடக்கடவேனுகிய யான் இந்த

விபத்து வருவதன் முன்னாக அறிந்து தப்பிக்கொள்ள இடமில்லாமற்போயிற்று. யான் செத்திருந்தால் நன்மையாயிருக்கும்; அதுவும் நிகழாமற் போயிற்று. தப்பவாவது சாவவாவதுமுடியாமற்போன எனக்கு இனி என்ன புகல் இருக்கிறது.'' என்றெண்ணினாள்.

சகூ. "என் கற்புக் கெடாதபடி தப்புதற்கோ மார்க்கமில்லை. சாவோமென்றாலும் அதற்கும் வழியில்லை. அந்தோ! என்விதி நான் இப்படிப்பட்ட துர்த்தசை அடையும்படியாகவோ இருந்தது! எனக்கு நேர்ந்த இக்கதி வேறு எவளுக்காவது நேருமென்று நான் கனவிலும் எண்ணவில்லையே! அப்படிப்பட்ட கதி எனக்கே நனவிலேயே நேர்ந்ததே'' என்று வாடி நெஞ்சு புண்ணாகி நொந்தாள்.

ருo. "யான் தப்பவாவதுசாவவாவதுவேறுமார்க்கமில்லையாதலால், என்னை (அல்லது இவனை அல்லது இருவரையும்)புலி தூக்கிக்கொண்டுபோனாலும், இடிவிழுந்து கொன்றாலும், மலை கவிழ்ந்து மேல்விழுந்து மாய்த்தாலும், சமுத்திரம் பொங்கிவந்து ஆழ்த்தினாலும், (இப்பொருள்கள்போலத் தூரத்தில் இல்லாமல்) இங்கேயே உள்ள பூமி வாய்பிளந்து விழுங்கினாலும் நன்மையாயிருக்குமே'' என்று வருத்தமுற்று எண்ணினாள்.

ருக. "என் நாயகன்உதவியாவதுவேறுயாருடைய உதவியாவது இல்லாமலிருக்கிற என்னை இந்த நடு இராத்திரிவேளையில் இந்தக்கொடும்பாவி, வஞ்சனையால் தன்னை என் கணவனென்று நம்பச்செய்து, என்னைத் தன் கைக்குள் சிக்கச்செய்திருக்கிற இந்தமோசத்தின் தன்மையை ஆராய்ந்துபார்த்தால், இதற்குத் தூங்குவோன் தலையில் கல்லைத் தூக்கிப்போட்டுக் கொலைசெய்தலும், சந்தேகப்

படாம லிருக்கிறவனை நல்லுணவென்று நம்பச்செய்து நஞ்சுகலந்த உணவை உண்பித்து மாய்த்தலும் ஒப்பாகுமோ?'' என்று துன்புற்று நினைத்தாள்.

ரு௨. "இவன் வஞ்சகத்தை என்னென்பேன்! சிவபிரானுடைய திருக்கழுத்திலே சேரப் பெற்றதனால் தனக்கு இயல்பாக உள்ள தீக்குணம் நீங்கியிருந்த விஷமானது, இவனுடைய நெஞ்சிலே புகுந்து வஞ்சகமாகி, சிவபிரானிடத்தி லிருந்தபோது நீங்கியிருந்த தீக்குணம் முழுவதையும் திரும்பப் பெற்றுவிட்டது'' என்று நினைந்தாள்.

ருங. "மாதர்கள் கற்பை இழக்கும்படி நேர்ந்தால், உயிரைவிட்டு அக் கற்பைக் காக்கக்கூடுமானால் அவ்வாறு செய்து காத்தல் முறையாம். அவ்வாறு உயிரைவிட்டுக் கற்பைக் காக்கும் பாக்கியமுமில்லாத பாவியாகிய யான் இப்படியான சமயத்தில் யாதாயினும் செய்தற்குரிய திருக்கிறதோ?'' என்று வருந்தி நினைந்தாள்.

### இந்திரன் தன் கற்பை அழியாமல் விடானென்று அகலிகை துணிதல்.

ருச. "பாம்பு தன்வாய்க்குள் அகப்பட்ட தவளையைப்பிழைக்கவிட்டாலும், இயமன் தன்கைக்குட்சிக்கிய உயிரைத்தப்பவிட்டாலும், இவன் என்னைச் சும்மாவிடமாட்டான், கற்பழித்தே விடுவான்'' என்று நினைத்துத் தேற்றமுற்றாள்.

ருரு. அவ்வாறு தேற்றம் உறவே, தன்னைப்பற்றிய நினைவு சற்று நீங்க, இப்படிப்பட்ட அபாயம் மற்றமாதர்களுக்கும் நேரலாமே என்றநினைவுதோன்ற, அவர்களைத் தன் மனோபாவனையில் முன்னிலையாக்கி "கற்புடைய மாதர்களே! யான் இந்தக் கொடியவஞ்சகனால் மோசஞ்

துக்குள்ளானதுபோல நீங்களும் மோசத்துக்குள்ளாகாமல் சாக்கிரதையாக உங்கள் கற்பைக் காத்துக்கொண்டு வாழ்வீர்களாக. நான் நாசமடைந்தேனாலும், என் வரலாறு, நீங்கள் என்னைப்போலக் கெட்டுப்போகாதபடி காக்கும் பிரயோஜனமுள்ளது'' என்று தன்னுள்ளே கூறினாள்.

அவள் சாகவேண்டுமென்று முடிவு செய்தல்.

ருகூ. "தீண்டாத குலத்தான் தொட்ட மட்கலத்தை அவன் தொடுமுன் ஆண்டுகொண்டிருந்த உயர் குலத்தான் அந்தத் தீண்டாதான் தொட்ட பின்பு தொடான் அன்றே. அப்படியே இச்சண்டாளன் தொட்டுக் கெட்ட என்னை என் நாயகர் தொடமாட்டார். அவருக்காகாதபடி தோஷம் அடைந்துவிட்ட இந்த உடலை ஒழித்து நான் இறப்பேன். இதுவே நல்ல வழியாகவிருக்கிறது''

ருஎ. "என் கற்பு அழியும்படி நேர்ந்தது. அது அழியாமல் காத்தற்கு என் உயிரைவிட முடியாமற் போய்விட்டது. அப்படிக் கற்பைக் காத்தற்கு உதவாமற் போன உயிரைத் தங்கவிட்டால், 'இவள் கற்பழிந்தாள்' என்று பிறர் பழிக்கும் பழி என்னைப் பொருந்தித் துன்புறச்செய்யும். ஆதலால் அப்படி என்னைப் பழிசேர்ந்து பாதிப்பதற்கு முன்னே நான் இறந்திடுவேன். இறவா விடிலோ நிந்தனைக் காளாவதன்றி இவ்வளவு நெடுங்காலம் நான் இனிது குடியிருந்த வீட்டிலிருந்து (கற்பிழந்ததனால்) துரத்தப்பட்டு என் நாயகரையும் பிரியக்கடவேனாவேன். அப்படிப்பட்ட நிலையில் நான் உயிர்வாழச் சம்மதிப்பேனோ? சம்மதிக்கவே மாட்டேன். ஆதலால் நான் செத்துவிடுதல் மிகவும் நிச்சயம்.''

ருஅ. "என்னிலும் எனக்கு இனியவரும் எனக்குத் தலைவரும் ஆகிய கௌதமர் என்னைத் தள்ளிவிடுவாரென்

ருல், இனி வேறுயார் என்னைக் காப்பாற்றுவார்கள்? ஒருவரும் காப்பாற்ருர். ஆதலால் யான் இப்பொழுதே செத்துவிடவேண்டும். அப்படிச் சாகத்தடை யாதிருக்கிறது? இந்தச் சண்டாளனே தடையாயிருக்கிருன். இவன் தடையாயிருப்பது முன்னமே தெரிந்ததாயினும் யான் அதி துரிதமாகச் சாகவேண்டுமென்ற விருப்பம் மிகுதலால் திரும்பவும் சாகத்தடை யாதிருக்கிறதென்ற கேள்வி கேட்பேனுயினேன்'' என்று மிகுந்த ஆபத்து அடைந்த அவள் நினைத்தாள்.

### அகலிகை, இன்னுனென்று தான் அறியாத இந்திரனை நோக்கிக் கூறுதல்.

நிகூ. இவ்வாறெல்லாம் தன் மனத்துள் எண்ணிச் சாகத்துணிந்து தைரியமடைந்த அகலிகை, தனக்கு இன்னுனென்று தெரியாத இந்திரனை நோக்கிக் கூறுகின்ருள். "ஜடையும் தாடியும் மரவுரியும் தரித்து என்னுடைய நாயகர் வடிவம்போலத் தோன்றும் மாறு உருவம் கொண்டு என்னை வஞ்சிக்கும்படி வந்தோனே! புலித்தோல் போர்த்துப் புலத்தில் மேய்ந்த எருது அடிபட்டிறந்தது போல நீயும் சாவாய்.''

சூO. "அரசன் இல்லாத சமயத்தில் அவன் சிங்காதனத்தில் இருந்த கிரீடத்தை ஓர் ஏழைகண்டு அதனைத் தன் தலையில் கணநேரம் சூடிப்பார்க்க ஆசைப்பட்டு அதைத் தொடவே, அச்சிங்காதனத்தின் மேலாகச் சுழன்றுகொண்டிருந்த ஆக்கினை சக்கரத்தால் அறுப்புண்டு இறந்தான் என்று கேள்வியுற்றிருக்கிருயன்ருே? அந்த அறிவில்லாத ஏழையைப்போல, நீ கௌதம மகருஷியின் தபோபலம் உன்னை யாது செய்யுமென்றறியாமல் தகாத எண்ணங்கொண்டு அவர்பத்தினியைப் பிடித்தாய். உன்னைப்போல அறிவில்லாதவன் எங்கும் இலன்.''

௯க. "நீ இந்தத் தீயதொழிலைச் செய்யப்புகுந்ததை என் நாயகர் அறிந்தால், யாது ஆகும் என்று தெரிந்தாயில்லை. இப்படிச் செய்யப்புகுந்தவன் இந்திரனேயானாலும் அவருடைய கோபாக்கினிக்குத் தப்பிப் பிழைக்க மாட்டானே! அக்கோபத்தீயால் பொங்கு கடல் சூழ்ந்த பூமி முழுதுமே அக்கடலாகிய பெருஞ் ஜலத்திரளாலும் தப்பமாட்டாமல் அக்கடலோடு பற்றி எரிந்து சாம்பலாய்விடுமே! நீ நன்றாக ஆராய்ந்து பாராமல் இந்தத் துஷ்கிருத்தியத்தைச் செய்தாய். நீ மிகவும் அறிவீனன்" என்று கூறினாள்.

### இந்திரன் மறுமொழி கூறுதல்.

௯௨. "இந்திரனும்" என்று தன்னை உயர்த்திச் சிறப்பித்துக் கூறியதை இந்திரன் கேட்டு மகிழ்ந்து "மஹாலக்ஷ்மியும் ஒப்பாகாத அழகுடையாளே! உன்னாலாகிய காமாக்கினியால் தகிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றேன். அந்த அக்கினிக்குட்பட்ட யான் அதனிலிருந்து தப்பி வெளிப்பட்டாலன்றோ, உன் நாயகரது கோபாக்கினி என்னைத் தொடுதலும் சுடுதலும் கூடும். நீ சிறப்பித்துக் கூறிய தேவராசனே இப்போது இங்கே உன்னோடு இருக்கின்றான். தெரிவாயாக." என்று கூறினான்.

### இந்திரனை இந்திரனென்று அகலிகை தெரிந்தபின் கூறுதல்.

௯௩. "நீ! தேவர்ராசனே! நல்லது, அப்படியானால் வேறு எவனாவது இப்படிப்பட்ட கெட்ட செய்கையைச் செய்வானானால், அவனைக் கோபித்துத் தண்டிக்கும் ஆக்கினையையும் கடமையையும் உடையவனா யிருக்கின்றாய். ஆகையால் இந்தத் தீச்செய்கையை அருவருப்பாயாக. என்னை விட்டுவிடுவாயாக."

சுச. "இந்தத் தகாத செய்கையினால் உன்னுடைய வெற்றிகள் கறைப்பட்டுவிடும். உன் வீரம் பழுதாய்விடும். உன் வயிரவாள் மழுங்கிப்போம். உன்னுடைய பகைவர்கள் உன்னைப் "போர்செய்ய வல்ல சூரன் அல்லன், அயலான் மனைவியின் கற்பைத் திருட்டுத்தனமாகக் கெடுக்குஞ் சோரன்" என்று பழித்து வசைகூறுவர். ஆதலால் வீரனே என்னை விட்டுவிடுவாயாக."

சுரு. "அற்பராயுள்ளோர்க்குப் பழி உண்டானால், அவர் தெரியப்பட்ட இடம் சிறிதாயும் அவரை அறிந்தோர் சிலராயும் அந்தச் சிலரும் அவரைப் பற்றிய எதனையும் நெடும்பொழுது நினையாராயும் இருத்தலால், அந்தப் பழியானது பல இடத்தும் பரவாமல் தோன்றிய பொழுதே மறைந்துபோம். உன்னைப்போன்ற பிரபல சிரேஷ்டருக்குப் பழி உண்டானாலோ, அது, பல இடங்களிலும் பிரஸ்தாபிக்கப்பட்டுச் சுவர்க்க மத்திய பாதலமாகிய மூன்றுலகங்களிலும் வியாபித்து இக்காலத்தவரேயன்றிப் பிற்காலத்தவரும் நினைவுகூரும்படி கவிகளிலும் காவியங்களிலும் சித்திரங்களிலும் சிலைகளிலும் வரையப்பட்டு நீடூழிகாலம் நிலைநிற்பதாகும். உன் தீய எண்ணம் நிறைவேறினால் நீ இப்பொழுது எவ்வளவு உயர்ந்த பதவியிலிருக்கின்றாயோ, அவ்வளவு தாழ்ந்த பதவியை யடைவாய். ஆதலால் என்னை விட்டுவிடுவாயாக."

சுசு. "மரத்தைச் சார்பாகப் பற்றிப் படர்ந்து தழைத்துக்கொண்டிருக்கும் கொடியை அதன் கனிகளில் ஒன்றே பெறும்பொருட்டு வேரோடறுத்து அழித்துவிடுதல் போல, நீ விரும்பிய ஒரே பொழுதின்பம் பெறுதற்காக, என் கற்பை அழித்துவிடலாமோ? என்னை விட்டுவிடுவாயாக."

௬௭. "இந்த ஓரிராத்திரியிலே நடுச்சாமக்கோழி கூவியதுபோல, பல இராத்திரிகளிலும் கூவுமோ ? கூவாது. அப்படிக் கூவினாலும் என் நாயகர் இன்று தவறிப் போனதுபோல இனியும் தவறி வெளியே போவாரோ? போகார். நிகழக்கூடாத இவையெல்லாம் நிகழ்ந்தாலும் யான் கற்பிழந்தபின்பு உயிர்வாழ்வேனோ? வாழேன். இன்றொழிய மறுபடியும் நீ எவ்வாறு இன்பம் அடைவாய்? அடையமாட்டாய். ஆதலால் என்னை விட்டுவிடுவாயாக."

௬௮. "நீ, ஒருவன் மனைவியாக இருப்பதாகவும் அயலானொருவனுடைய வஞ்சனையால் அவன் கைக்குள் அகப்பட்டுக்கொண்டதாகவும் அவன் கற்பழிக்கமுயல்வதாகவும் அதனால் நீ கலங்கிப் பரிதபிப்பதாகவும் பாவிப்பாயாக. அப்படிப் பாவிப்பாயானால் உடனே என்னை விட்டுவிடுவாய். ஆண்பாலான நீ பெண்பாலாகப் பாவிப்பது கஷ்டமாதலால் அப்படிப் பாவிக்க உனக்கு வல்லமை இல்லாமற்போனால் போகுக. நீ என்னைக் கற்பழிக்க முயலல்போல வேறொருவன் உன் மனைவியைக் கற்பழிக்க முயல, அப்போது உன் மனைவியான் இப்போதுள்ள பரிதாப நிலையை அடைய, அதனால் உன் மனம் படும் பாட்டையாவது நினைத்துப் பார்த்து என்னை விட்டுவிடுவாயாக."

௬௯ "இழிவான களவினால், பயத்தின் மத்தியிலே, அயலான் மனைவியினிடத்து அடையும் இன்பம், பெயர் மட்டில் இன்பமேயல்லாமல், உண்மையில் இன்பமாகாது; அது நிலையாமல் நீங்கிவிடும் ; ஒரு கணப்பொழுதுகூட நிலைத்திராது ; பழியை உண்டாக்கும் ; உயிரை அழித்துவிடும் ; இறுதியில் எரிவாய் நரகத்தில் தள்ளிவிடுதலும் செய்யும் : ஆகையால் என்னை விட்டுவிடுவாயாக."

எ௦. "நீ என்னைக் கற்பழித்து விட்டாயானால், அது தெரிந்தவுடனே, அயலான் மனைவியை இழிவாக வஞ்சித்துக் கற்பழித்த கொடிய திருடனே! என் கணவனென்று உன் மனைவியும், சீ! இப்படிப்பட்ட இழிஞனே! எம் தந்தை, இவனுக்கோ நாம் பிறந்தோம், நாம் பிறவாதிருந்தால் நலமாயிருக்குமே என்று உன் புத்திரரும், இத்தகைய கேவலமான செய்கையை உடையவனே! நமது சிநேகன், இவனோடு நாம் சிநேகம் செய்ததே தவறு என்று உன் சிநேகரும், இவ்வளவு வெட்கமான செய்கையைச் செய்தவனையோ! நாம் 'நமது பந்து' 'நமது பந்து' என்று பெருமை பாராட்டினோம் என்று உனது பந்துக்களும், இப்படிப்பட்ட துஷ்டனையோ! எங்கள் அரசனைப்போலச் சிறந்த நீதிமானான அரசனில்லை யென்று நாம் எண்ணி மகிழ்ந்திருந்தோமென்று உன் குடிகளும், இவ்வாறு உன்னைச் சேர்ந்த மற்றைய பலரும் தங்கள் தங்கள் மனத்துள் எண்ணி வெட்கமடைந்து உன்னை நொந்துகொள்ளாமல் என்னை விட்டுவிடுவாயாக."

எக. "பொருளைத் திருடுதல் தீயது. உயிரைக் கவர்தல் அதனினும் அதிகமாகத் தீமையானது. ஸ்த்ரீகளுக்கு அவர்கள் உயிரினும் சிறந்த கற்பை அழித்தல் மிக அதிகமாகக் கொடுமையானது. இப்படிப்பட்ட கொடுந்தொழிலைச் செய்ய நினைத்தல் தகாது" என்று அகலிகை சொன்னாள்.

### அகலிகைக்கு இந்திரன் கூறுதல்

எஉ. "உன் அழகுதான், என்னை ஊண் உறக்கம் இல்லாமல், இனிய உயிரையும் பொருளாகக் கருதாமல், எவ்வளவோ தூரம் நடந்து இங்கு வந்து உன்னைக் கைப்பற்றச்செய்தது. ஆதலால் நீ அவ்வாறு செய்த உன்

அழகை நோவவேண்டியிருக்க அதனை நோவாமல் என்னை ஏன் நோகின்றாயோ தெரியவில்லை.''

எ௩. "முல்லையரும்பு போன்ற அழகிய பற்களையுடைய பெண்ணே! நான் களவாளியென்று என் பகைவர்கள் சொல்வார்களென்று சொன்னாயே. யானோ களவாளி? நீயே களவாளி. ஏழையாகிய எனது முழு இருதயத்தையும் நினைக்குந்தோறும் துன்பம் உறும்படி நீ கொள்ளைகொண்டுவிட்டாயல்லையோ? கூறுவாயாக.''

எ௪. "மிக வெள்ளிய இனிய தந்த வரிசையையுடையாளே! பசியால் செத்துவிடப்போகிறவன் கையில் அகப்பட்ட சாவாமருந்தாகிய தேவாமிர்தத்தைத் தூரத்தே எறிந்துவிடு என்றால், அவன் அதை உண்ணாமல் எறிந்து விடுவானோ? யான் கொண்ட கருத்தை நிறைவேற்றாமல் உன்னை விடுதல் சாத்தியமன்று. இதனை அறிவாயாக.''

எ௫. "என் உயிரினும் சிறந்தவளே! இப்போது நாம் இருவர் மாத்திரம் இருக்கின்ற இந்த ஆச்சிரம மானது ஜனசஞ்சாரமில்லாத காட்டின் நடுவிலே இருக்கிறதென்பது உனக்குத் தெரியாததன்றே இந்தச் சமயத்தில் உன் கணவரோ வெகுதூரம் போயிருக்கிறார். ஆகையால் உனக்குத் துணையாக உதவுவார் ஒருவரும் இலர். யான் பலாத்காரமாக என் கருத்தை நிறைவேற்றுவேனானால், என்னைத் தடுத்தற்கு யார் இருக்கின்றார்கள்? சொல்வாயாக.''

எ௬. மின்போலும் இடையை உடையவளே! என்னுடைய அருமையான உயிரை விட்டாலும் அந்த உயிரினும் இனிமையான உன்னை விடமாட்டேன். நீ நெஞ்சு உவந்து சம்மதித்தலே இந்த நிலைமையில் செய்யத்தக்க

தாக விருக்கின்ற தென்பதைத் தேர்வாயாக." என்று இந்திரன் சொன்னன்.

அகலிகை கூறுதல்.

எஎ. "வலாற்காரம் செய்வேனென்று சொன்னயே. அப்படிச் சொல்லியதற்குக் காரணம் யாது? என்னை உனக்குப் பலத்த பகையாயிருந்த விருத்திராசுரனைவேனும் வலாசுரனைவேனும் சிறகுகள் உள்ள மலையாகவேனும் நினைத்தாயா? உன் பகைவர்களிடத்தில் வன்புடன் செலுத்தற்பாலதாகிய உன் மஹா பலத்தைப் பெண்பாலாகிய என்னிடத்தில் செலுத்த எவ்வாறு எண்ணினாய்?"

எஅ. "பெண்ணென்றால் கொடிய பேயுங்கூட மிகுதியாக இரக்கங்கொள்ளும். நீ என் கண்ணை விரும்பினாலும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். ஏற்றுக் கொள்வாயாக. யான் இப்போது கூறுவது உறுதியானதே. நீ என் இனிய உயிரையே வேண்டினாலும் கொடுப்பேன். தடை சொல்லமாட்டேன். இரக்கமுற்று என் கற்பை மட்டும் நீக்காதிருப்பாயாக.'

எகூ. "தேவதேவனாகிய பரமேசுவரன் மேலும் மற்றெல்லாத் தெய்வங்களின் மேலும், உன்னுடைய செங்கோலின்மேலும், கொடிய பகைவர்களை வென்று விளங்கும் உன் வீரத்தின் மேலும் ஆணை வைத்தேன். என் கற்பை அழியாதிருப்பாயாக."

அ௦. "தங்கத்தினாலும் இரத்தினங்களாலும் செய்யப்பட்ட ஆபரணங்க ளெல்லாவற்றிற்கும் மேலான ஆபரணமாகவும் பிரகாசிக்கும் ஆடைகள் யாவினும் உயர்ந்த ஆடையாகவும் இனிய உயிரினும் சிறந்த உயிராகவுமுள்

ளது கற்பு. மாதர்க்கு அதை இழத்தலால் உண்டாகும் துன்பம்போன்ற துன்பமும் உண்டோ?'

அக. "எந்த ஒரு பொருளிருந்தால் மட்டும், எனக்குள்ள எப்பொருள்களும் உள்ளனவாகப் பயன்படுமோ, எந்த ஒரு பொருளில்லையானல், எனக்கு மற்றெல்லாப் பொருள்களும் இருந்தாலும் இல்லாதனவேபோலப் பிரயோஜன மற்றவைகளாய்விடுமோ, அந்த ஒருபொருள் என்னுடைய கற்பே. அதை நீக்குவதைக் காட்டிலும் நீ எனக்குச் செய்யக்கூடிய துன்பம் யாதிருக்கின்றது?"

அஉ. "யான் என்னுடைய கற்பை இழந்தேனானல், சகலத்தையும் இழந்தவளாவேன். என் கற்பை நீ நீக்கினல், நிலையாத இன்பமும் நிலையான பழியும் தொலையாத நரகமுமல்லாமல் வேறு யாது பெறுவாய்? சொல்வாயாக."

அங. "நீ என்னை உன் உயிரினும் இனியவளென்று சொன்னய். அப்படிப்பட்ட என்னுடைய இனிய உயிரினும் அதிக இனிமையான என்னுடைய கற்பை அழிப்பேன் என்று சொல்லுதற்கு எப்படி உன்நாக்கு எழுந்ததோ தெரியவில்லை. கற்பழிப்பேனென்று எண்ணியதே தகாதது. ஆதலால் கற்பழிப்பேனென்று சொல்வதை ஒழிப்பதே யல்லாமல், அந்த எண்ணத்தையுங்கூட ஒழித்துவிடுவாயாக."

அச. நீ என் கற்பை மட்டும் அழியாது விட்டாயானல், என் உடலைக் கூறுகூறாக வெட்டி, என் உயிரையும் உடலையும் வேறுவேருகும்படி சித்திரவதை செய்து கொல்ல நீ விரும்பினயானலும், அதற்கு விரோதமாக உன்னைத் தடுக்க நினைக்கவுமாட்டேன்."

அரு. "நீ என் கற்பை நீக்காமல் என்னுயிரை நீக்கப் புகுந்தாயானால், அதற்காக நான் உன்னைக் கும்பிடுவேன். உனக்கு நன்றியறி வசனங்கள் வழங்குவேன். 'குறைவு படாத பல்லூழி வாழ்வாயாக' என்று வாழ்த்துவேன். இப்போது கூறியது சத்தியமாகக் கூறியதென் றறிவாயாக" என்று அகலிகை சொன்னாள்.

இந்திரன் கூறுதல்.

அசு. "கணவனொழிய வேறெந்தப் புருஷனுடைய வஸ்திரமாவது அவ்வஸ்திரத்தில் தோய்ந்த நீர்த்துளியாவது அவன் நிழலாவது அவன் மேற்பட்ட காற்றாவது தம்மேற்படாமல் ஸ்த்ரீகள் விலகித் தங்கள் கற்புக்குக் குற்றம் வராமல் காத்துக்கொள்வாராக என்று பெரியோர் கூறுவார்கள். அப்படியிருக்க, நான் உண்மையாக உன்னைத் தொடுதலே செய்துவிட்ட பின்பு உன் கற்புக் கெடாமல் இருக்கிறதாமோ? அது போய்விட்டதன்றோ? சொல்வாயாக."

அஎ. "நான் நெருங்கி உன்னைத் தொட்ட நிமிஷத்திலேயே உன் கற்பு அழிந்துபோய்விட்டது. போன கற்போ இனி ஒருபோதும் திரும்பமாட்டாது. எந்த நல்விரதத்தைக் காத்தற்காகச் சுகத்தை அடையாமல் மறுத்துக்கொண்டிருந்தாயோ, அந்த நல்விரதமாகிய கற்புக் கெட்டபின்பு, அதன்பொருட்டு அடையாதிருந்த சுகத்தை அடைதற்குத் தடையாக உள்ளது யாது? ஒன்றுமே இல்லை. இதனைத் தெளிவாக அறிந்து விரைவாகச் சம்மதிப்பாயாக."

அஅ. "இப்போது தாமதம் செய்யாமல், நீ சம்மதிப்பாயானால், அதை ஒருவரும் அறிய மாட்டார்கள். உன் கணவனுக்கு உன்னைப்பற்றிச் சந்தேகம் உண்டா

காது. செய்யப்படாத குற்றங்களைப்பற்றி யார் பேசுவார்கள்? ஒருவரும் பேசார். அதுபோல, பிறர் அறியாமற் செய்யப்பட்ட குற்றங்களைப்பற்றியும் எவர்களும் பேசமாட்டார்கள். இந்த உண்மையைத் தெரிவாயாக.''

அக. "நீ உடன்பட்டாயானால், அப்படி உடன்பட்டதை, நான் உன் சிநேகனாதலால், ஒருவருக்கும் சொல்லேன்; உனக்கு விரோதமாக நீயும் சொல்லாய்; ஆகவே பிறர் எவ்வாறு அறியக்கூடும். நாம் நம்மனத்தினுள்ளே உள்ள எண்ணத்தை வெளியாகச் சொல்லவில்லையானால், அவ்வெண்ணத்தை யார் தெரிதல்கூடும். அதுபோலவே, உன் சம்மதமும் ஒருவரும் தெரியாதபடி இருக்கும்.''

கூ0. "இந்தா! முத்தம் தருகிறேனென்று நீ தருவாயானால், அதற்குக் கைம்மாறாக, யான் உனக்கு என்னுடைய சிந்தாமணி முதலிய செல்வப்பொருள்களெல்லாவற்றையும் தருதலல்லாமல் தேவாமிர்தத்தையும் தருவேன். அதை நீ உண்டு தேவர்கள்போல என்றென்றும் சாவாமல் வாழ்வாய்'' என்று இந்திரன் கூறினான்.

### அகலிகை கற்புநிலை கலங்கல்.

கூக. இவ்வாறு இந்திரன் கபடமாகச் சொல்லிய காம வசனமாகிய காற்றானது அகலிகையுடைய செவியாகிய வாசல் வழியாக அவள் மனமாகிய வீட்டினுள்ளே சென்று அங்கே அசைவின்றிச் செவ்வனே பிரகாசித்துக்கொண்டிருந்த கற்பாகிய தீபத்தில்மோதி அதைச் சலனமடையச்செய்தது.

கூஉ. அவன் அவளுடைய மேனியைத் தழுவுகையை விடாமல் மோக வசனம் கூறினான். அவனுடைய தேகம் நெருப்பாக, அவன் தழுவுதல் நெருப்பினால்

சூழப்படுதலாக, அவன் மோக வசனம் கூறல் அந்த நெருப்புக்கு உதவியாகக் காற்றடித்தலாக, அவளுடைய பொன்போன்ற மேனி பொற்குடமாக, அவள் நெஞ்சு அக்குடத்தினுள்ளே உள்ள நெய்யாக, அந்த நெய்யிளகுதல்போல அவள் நெஞ்சிளகுதலுற்றாள்.

கூ௩. "என்னை வஞ்சனையினால் உன் கைக்குள் சிக்கிக் கொள்ளச் செய்தாய். தப்பியோட வழியில்லாமல் கட்டிக்கொண்டிருக்கிறாய். நீ செய்யப்புகுந்த தீத்தொழிலினின்றும் உன்னை விலகும்படி தடுத்தேனென்றாலும், அத்தடையால் விலகிப்போகாதவனா யிருக்கிறாய். என்னால் தடுக்க முடியவில்லையாயினும் வேறு யாரையாவது கொண்டு தடுப்பேனென்றாலோ, அப்படித்தடுக்க உதவுவார் ஒருவரு மில்லாத தனியளாயிருக்கின்றேன். நீ கூறிய வார்த்தைகளால் நெஞ்சு திகைப்புற்றுப் பாவத்துக்குள்ளாக்கப்பட்டு விட்டேன். இனி, நீயே உன்னைத் தடுத்துக் கொண்டாலொழிய, யான் தடுப்பதனால் பிரயோஜனமில்லை" என்று அகலிகை சொன்னாள்.

கௌதமர் தம் கிருகத்துக்குத் திரும்புதல்.

கூச. தமது கிருகத்தைவிட்டு வெளியே போன கௌதமர் கங்கையில் ஸ்நானஞ் செய்யப்போம்போது விடியாம லிருக்கக்கண்டு அதன் காரணம் யாதென்று விரைவில் ஆலோசித்துப் பார்த்து ஒரு சோர்வு நிகழ்ந்து விட்டதென்று தெளிந்து ஸ்நானஞ் செய்யாமல் சீக்கிரமாகத் தமது கிருகத்துக்குத் திரும்பினார்.

கூ௫. தேவர்க்குரிய பரிசுத்தமான அவியுணவைத் திருடி உண்ட திருட்டுநாய்போல, இந்திரன் அகலிகையைப் பிரியப்போகும் சமயத்தில், சிங்கம்போலக் கௌதமர் வந்து அவ்விருவரும் செய்த அகிருத்தியத்தின் உண்மையைக் கண்டுகொண்டார்.

௬௬. உடனே, யுகாந்த காலத்திலே உண்டாகும் வடவாமுகாக்கினி போன்ற பெருங்கோபம் உண்டாக, அவர் காலகாலனாகிய உருத்திரமூர்த்தியையே ஒத்துக் கண்சிவந்து தமது உயர்வான இல்வாழ்க்கையின் மாட்சிமையை அழித்த இந்திரன் அகலிகை யிருவரையும் கொல்பவர் போலக் குறித்துப் பார்த்தார்.

௬௭. அப்படிப் பார்க்கவே, அவ்விருவரும் அஞ்சி அடங்கி ஒடுங்கி நடுங்கி வெட்கமுற்று உடம்புமெலிந்து வெளுத்து ஒளிமழுங்கி மனங்கலங்கிக் குலைந்து தளர்ந்து பின்னிட்டுத் தள்ளாடி நின்றார்கள்.

## கௌதமர் இந்திரனைச் சபித்தல்.

௬௮. நன்னெறியினின்று நீங்கிய அவ்விருவரும் செய்த பாவச் செயல்களை அவர் நன்காராய்ந்து இப்படிப்பட்ட அகிருத்தியங்களைச் செய்தவர்கள் திறத்தில் அவரவர்க்குத் தக்க தண்டனை விதிப்பேனாக என்று மனத்தில் எண்ணி, இந்திரனை நோக்கி "மாறுவேடங்கொண்டு வந்தவனே! நீ இச்சித்த அங்கமே உன் உடம்பு முழுதும் உடையவனாவாய்." என்று அதட்டிச் சபித்தார்.

## அகலிகையைச் சபித்தல்.

௬௯. பின்பு அகலிகையை நோக்கி "இல்வாழ்வானுக்குரிய பல பொருள்களுள் மனைவிமட்டும் தன்னைத்தானே காத்துக்கொள்ளும் பொருளாக உள்ளாள். அப்படித் தன்னைத்தான் காக்கும் ஒரே ஒரு பொருளாக நீ இருந்த தன்மையை நீங்கி, தம்மைத்தாம் காக்க மாட்டாத வீடுமாடு முதலிய சடப்பொருள்கள்போல, பற்றினவன் கைவசமானாய். உன்னைப் 'பாவை'யென்றும் 'பாவைபோல்பவள்' என்றும் சொல்வதற்குக் கைவல்ல கம்மியர் வகுத்த பொற்பாவை போல அழகும் ஒளியும்

உடையுவளென்று இதுவரையும் பொருள்கொண்டிருந் தேன். அப்படியில்லாமல், அப்பாவைபோல, உடைய வனேயன்றி, எவன் கைப்பற்றினும் அவன்வசம் ஆகும் தன்மையை உடையவளாதலால், நீ 'பாவை' யென்று சொல்லப்பட்டா யென்று இன்று தெளிவாகத் தெரிந்து கொண்டேன்.

க00. "இவன் என்போல உருமாறி வந்து தன்னை யானென்று நீ மயங்கச் செய்தான். நீ அந்த வஞ்சனைக் குள்ளானு யென்பது மெய்யே. ஆயினும் அவன் வஞ் சனையைத் தெரிந்தபின் நீ மறுக்காமல் உடன்பட்டு ஐம் புல இன்பம் நுகர்ந்தாய். ஆதலால் ஒரு புலனுணர்ச்சியும் இல்லாத கல்லாகிக் காட்டகத்தே கிடப்பாயாக" என்று சபித்தார்.

இந்திரன் தன் சாபம் சாவினும் கொடியதென்று வருந்தல்.

க0க. தனக்குக் கொடுக்கப்பட்ட சாபத்தைக்கேட் ட இந்திரன் "யான் அகலிகையை அடையச் செய்த முயற்சியில் உயிரைக் கொடுக்கும்படி நேரினும் கொடுக் கச் சித்தமாயிருந்தேன். ஆதலால் நான் சாகப்பயப்பட வில்லை. சாகச் சபிப்பதினும் கொடிய சாபம் இராதெ ன்று நினைத்திருந்தேன். இப்போது உண்மையில் சாவி னும் கொடிய சாபமே விதிக்கப்பெற்றேன். கண்டார் சிரித்து இகழும்படியான இந்த உருவத்தோடு தேவர் முதலிய பலரும் கூடிய என்னுடைய சபா மண்டபத்து க்குப் போவதைப்பற்றி நினைக்கவே வேண்டியதில்லை. யா ரொருவரையாவது தனித்துத்தான் நான் எப்படிப்பார்ப் பேன். என்னையே யான் பார்க்க நாணம் உறுவேனே" என்று மனம் நொந்து இந்திரன் எண்ணினான்.

௧0௨. "எல்லாரும் இகழும்படியான உருவத்தை அடையும்படி சபிக்கப்பட்ட இந்த உடலைவிட்டு நீங்கும்படி செத்துவிடுவேனென்றாலோ, நான் அமுதம் சாப்பிட்டுச் சாவாத்தன்மை அடைந்திருத்தலால், சாக முடியாதவனாயிருக்கிறேன். இதுவரையும் சாகும் மனிதர் வாழ்க்கையைக் காட்டிலும் சாவாத தேவர் வாழ்க்கை சிறந்ததென்றெண்ணியிருந்தேன். மனிதர் என்றென்றும் சாவாதிருக்க முடியாதென்றாலும், அவர்கள் வேண்டியபோது உயிரை மாய்த்துக்கொள்ளலாம். ஆகையால் வேண்டுமென்று விரும்பினாலும் சாக முடியாத தேவ வாழ்க்கை, வேண்டுமானால் சாகக்கூடிய மனித வாழ்க்கையினும் மிகவும் கொடியது" என்று துக்கித்தான்.

## இந்திரன் மறைவிடம் தேடி உறைதல்.

௧0௩. இந்திரன், இப்படித் துக்கித்துக்கொண்டிருக்கும்போதே, கௌதமர் கோபித்துச் சபித்த வடிவம் தனக்கு வர ஆரம்பிக்கும் அடையாளம் உண்டாக, பிறர் காணும்படி நிற்பதற்கு நாணி ஒளித்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணி மெல்ல ஒதுங்கிக் கௌதமர் வீட்டைவிட்டு வெளிப்பட்டுத் தேவர் முதலிய யாவரும் சஞ்சரியாத ஒரு மறைவான இடத்தைச் சேர்ந்து அங்கே ஒளித்திருந்து காலந்தள்ளினான்.

## அகலிகை தன்சாபத்தைப்பற்றி நினைதல்.

௧0௪. நான் எதிர்பார்த்துத் தடுக்கமுடியாத விதமாக என்னுடைய தேகம் அந்நியனொருவனுடைய கைக்குள் அகப்பட்டது மெய்யே; ஆனாலும் அப்படி அகப்படாமல் என் சுவாதீனத்திலேயே இருந்த என் மனத்தை ஸ்திரமாகக் கல்லுப்போல நிறுத்தி என் கற்புநிலை கலங்காமற் காத்தேனில்லை. அப்படிக் கல்லாக நிறுத்தாத மன

3719

த்தோடு இந்தத் தேகமும் கல்லாகச் சபிக்கப்பட்டது நன்றே. நான் உயிரோடிருந்து கற்பிழந்தவளென்று உலகம் பழிக்க வாழும் நிலைமையிலும் இந்தக் கல்லாகு நிலைமை இனிமையானதே. ஆனால் என் நாயகரைப் பிரியும்படி நேர்ந்ததுதான் கொடுமையாயிருக்கிறது'' என்று அகலிகை நினைத்தாள். பின்னும் அவள் நினைத்ததாவது.-

கo௪-அ. "(கற்பு விஷயமான) நெஞ்சக் கட்டுப்பாட்டைச் சிறிது தவறி நெகிழவிட்டேன். உடனே தருணத்தை எதிர்நோக்கியிருந்த வஞ்சன் எனது அருமையான கற்பை நீக்கிவிட்டான். இதவசனம்கூறி நஞ்சூட்டுவார் சொல்லுக்கிணங்கி மதிமயங்கி நஞ்சை நஞ்சென்று தெரிந்துகொண்டே உண்டவர்போல இருக்கின்றேன். ஆனால் நஞ்சுண்டவர்க்கு, நஞ்சின் கொடுமையை நீக்கிக் குணப்படுத்தக் கூடிய மருந்து உண்டு. அவர்போலவே வருந்துகின்ற எனக்கோ மருந்தேயில்லை.

கo௪-ஆ. "(நெஞ்சமாகிய ஏரியிலே அறிவாகிய கரையினாலே கட்டுப்பட்டிருந்த) கற்பாகிய நீர்க்கட்டு ஒருசிறிதும் ஒழுகிப்போகாதபடி நெடுங்காலம் நிலையாகக் காத்து நின்றேன். அப்படிக் காத்து நின்ற நிலைமையில், என் தீவினை வசத்தால், சிறிது தளர்வுற்றேன். உடனே அக்கற்பாகிய நீர்க்கட்டு முழுதும் அகன்றோடி யொழிந்துவிட்டது. அந்தோ! எனது அறிவு முற்றும் அற்றுப் போய் விட்டது.''

கo௪-இ. "கற்பாகிய மலையின்மேலேறி அதன் உச்சியிலே சாயாமல் நிமிர்ந்து நெடுங்காலமாக நின்றேன். அப்படி நின்றயான் சற்றே சாய்ந்தேன். உடனே என்னையறியாமல் தன்வசமிழந்து தடுமாறி அதோகதியாகக் கீழே விழுந்துவிட்டேன். தங்கள் தங்கள் நிலையிழந்து

இழிவடைந்த மக்களுள்ளே கீழாகவுள்ளா ரெல்லாரைக் காட்டிலும் நான் கீழாகிவிட்டேன்."

கOச-௪. "(இழிவடைந்த பெண்பாலார், இழிவடைந்த ஆண்பாலாரினும் அதிகமாக இழித்துரைக்கப்படுவார்கள். அப்படி இழித்துரைக்கப்படும் பெண்களுள் என்னைக் கடைப்பட்டவளென்பது போதாது, கொடிய பேயென்றும் கொல்லும் கூற்று என்றும் கூறவேண்டும். ஏனெனில்,) பேணவேண்டிய பொருளைக் காட்டிலும் அதிகமாகப் பேணுதற்குரிய சிறப்புடையது உடம்பு; உடம்பினும் சிறந்தது உயிர்; உயிரினும் சிறந்தது (மாதருக்கு) நாணம்; (அவருக்கு) நாணத்தினும் சிறந்தது கற்பே. அவ்வளவு அத்திபந்தமான சிறப்புடைய கற்பைப் பேணுதவள் எவளாயினும் அவள் பெண்ணல்லள் பேயே ஆவள்."

கOச-உ. "பரமபதியாகிய சிவபிரானிடத்து வைத்த அன்பாகிய பக்தியின் பலத்தினால், மார்க்கண்டேய முனிவர் தாம் பதினாறு வயசானவுடனே இறக்கும்படியிருந்த விதியை வென்று சிரஞ்சீவியாயினர். அவர்போலவே, சாவித்திரியென்னும் பதிவிரதை தனக்குப் பதியாகிய கணவனிடத்து வைத்த அன்பாகிய கற்பின் பலத்தினால் தான் கலியாணமான வருஷங் கழியுமுன் விதந்துவாகும்படி யிருந்த விதியை வென்று தீர்க்க சுமங்கலியாயினள். அவ்வளவு சிறப்புப்பொருந்திய கற்பைக் காவாதவளெவளோ அவளே உண்மையான நமன்: நமனென்று பெயர் பெற்றவன் உண்மையான நமனல்லன்."

கOச-௨௩. "முன்னாளில் அநசூயை தனது கற்பின் மகிமையினால், பிரம விஷ்ணு ருத்திரராகிய திரிமூர்த்திகளைச் செயலற்ற மூன்று சிறு குழந்தைகளாகச் செய்து

உயர்வான கீர்த்தி நிலைக்கப்பெற்ருள். அப்படிப்பட்ட கற்பைக்காவாமல் நீங்கவிடுகின்ற பேதையைப்போலத் துன்பத்துக்குக் காரணம் ஒன்றும் இல்லை, முக்காலும் இல்லை.

கoச-எ. "யாவராயினு மொருவருக்கு, அவருடையபகைவருள் யாருமே, செய்ய அன்று, செய்யும்படி நினைத்தற்குமே கூசும்படியான கொடுஞ்செயல்க ளெல்லாம் கூடித்திரண்டு ஓர் உருவெடுத்தாலும் ஒப்பாகமாட்டாத மிகக் கொடுமையான தீமையை, என்னுடைய தலைவருக்கு, அவருக்கு உரியவர்களெல்லாரினும் அதிக உரிமையாகவுள்ள நானே செய்தே னேன்."

கoச-அ. "அடிமைகளாயுள்ளாருள், தங்கள் ஆண்டவர்களுக்கு விரோதமாகத் தவறுசெய்து பழிக்காளானவர்களும் இருக்கிருர்கள். ஆயினும் அப்படிப்பட்டவர்களுள்ளே என்னைப்போலக்கொடியார் யாரிருக்கிருர்கள்? அவ்வளவு கொடிய என்னை என் தலைவர் சபித்துத் தண்டித்தது நியாயமே. சகிக்கக்கூடாத பெரும் பிழை செய்தவர்களைத் தண்டியாத அவ்வளவு பொறுமையுள்ள பெரியோர் எங்கே யிருக்கின்ருர்கள்?"

கoச-ஐ. "தாய் குழந்தையின் நோயைத் தீர்க்கத் தக்கமருந்தைத் தெரிந்தெடுத்துக் குழந்தைக்குக் கொடுத்தல்போல, இவ்வுலகத்தில் அன்பே ஓர் உருவெடுத்தாற் போன்ற என் தலைவர் ஆராய்ந்தறிந்து என் பாபத்தைத் தீர்க்கத்தக்க சாபத்தை எனக்குக் கொடுத்தார்."

கoரு. "மகா பாவியாகிய என் விஷயத்தில், எம்பெருமானுடைய பெருங்கருணை இருந்தவாறு என்னென்று சொல்வேன். அவர் மிக்க அருள் சுரந்து என் கொடுங்குற்றத்தைப் பொறுத்துக் கொண்டு, நான் உணர்வோ

டிருந்தால், நான் செய்த கொடும் பாவத்தின் பயனை அநுபவிக்கப் போதிய சக்தியில்லாதே னென்று இரக்கமுற்று அப் பாவ பலத்தை யான் துன்பமறியாத கல்லாக இருந்து அடையும்படி ஆஞ்ஞாபித்து என்னைத் தமது அருள் வெள்ளத்தில் முழுகச்செய்தார். (தண்ணீரில் மற்றைய பொருள்களினும் கல்லைமுழுகச்செய்வது சுலபம் என்பது கருதி என்னைக் கல்லாகச் சபித்து அவரது அருள் வெள்ளத்தில் முழுகச்செய்தார்போலும்.)"

அகலிகை கௌதமர் காலில் வீழ்தல்.

௧0௬. "இவ்வளவு இரங்கியவர் இன்னும் அதிகமாகவும் இரங்குவார். அவருடைய அருளுக்கு எல்லையே இல்லை. யான் கற்பிழந்ததனால் உண்டாகிய தோஷத்தை அவர் தபோபலத்தினால் நிவாரணம்செய்து சுத்தமுடையவளாக்கி என்னை முன்போலவே அவருக்குப் பாத பணிவிடை செய்யும்படி கட்டளையிட்டருள்வார்" என்று நினைத்து "காப்பாற்றி அருள்வீராக" என்று சொல்லிக்கொண்டு அகலிகை கௌதமர் காலில் வீழ்ந்தாள்.

௧0௭. அவள் தேகம் மின்போலத்துவள, கூந்தல் கருமேகம்போலக் குலைய, துக்கமிகுதியினால் வாய்விட்டேங்கி யழுதலால் பெருந் தொனி பிறக்க, நெடு மூச்சுப் பெருங் காற்று உண்டாக, கண்ணீர்மழை பெய்துகொண்டு அவருடைய பாதத்தடியிலே கிடந்தாள்.

கௌதமர் தம் காலில் விழுந்துகிடந்த அகலிகையை எழச்செய்து தேற்றல்.

௧0௮. தன்னுடைய உயிரே தன்னுடைய காலில் விழுந்து கிடந்தாற் போலக் கிடந்தவளை எழுந்து நிற்கச்செய்து "பெண்ணே! ஊழ் வலியினாலே நீ அந்நியன் கைக்குள் அகப்பட்டு மதிமயங்கித் தவறித் தாழ்வடைந்

தாய். மூற்றும் உன் குற்றமன்று. மயங்காம லிருப்பாயாக" என்று அவன் தேறுதலடையச் சொன்னார்.

### அகலிகை கூறுதல்.

க09. "பூர்வ ஜென்மத்தில் எவ்வளவோ பெரும் புண்ணியம் செய்ததனுல் உம்மை நாயகராகப் பெற்றேன். அதுபோலவே உம்மை நீங்கும்படியாகவும் மிகப் பெரும்பாவஞ் செய்ததனுல் கொடும் பாவியாகிய யான் இவ்வாறு கற்பழிந்து இழிகதியடைந்தேன். உம்முடைய காலில் வீழ்ந்து கிடத்தற்குமே தகுதியில்லாத அசுத்தையாகிய யான் ஈசுவரனையே ஒத்த உம்முடைய சந்நிதானத்தில் எவ்வாறு நிற்பேன்."

கக0. "உம்முடைய திருவருட் பிரசாதம் பெறுதற்கு அருகள் அல்லளாயினேன். உம்முடைய பரிசுத்த சந்நிதியிலே இவ்வளவு அசுத்தம் அடைந்துள்ள யான் நிற்கத் தகுதியுடையேனோ? உயர்ந்த நல்ல சுவர்க்க லோகத்தின் எதிரிலே தாழ்ந்த தீய நரகமும், பிரகாசமான சூரியன் முன்னே கரிய இருளும் நிற்க முடியுமோ!"

கக்க. "மயிர் நீங்கிய கவரி மானையும் சந்திரன் நீங்கிய வானத்தையும் உயிர் நீங்கிய உடலையும் போலக் கற்பு நீங்கின நான் (யாதாயினும் ஒரு பயனுமின்றிப் பழிக்காளாய்ப்) பூமிக்குப் பாரமாயிருத்தலை யாவரும் தெரிந்து கொள்ளும்படி, கனமான கல்லாகும்படி சபிக்கப்பட்டது பொருத்தமானதே."

ககஉ. "நான் கல்லாகும்படி நேர்ந்ததற்காகக் கவலைப்படுகிறேனோ வென்றால், அதற்காகக் கவலைப்படவில்லை. உம்முடைய மனைவியாயிருந்த நிலைமை நீங்கியதற்காக வருந்துகின்றேனோ வென்றால், அதற்காகவும் வரு

ந்தவில்லை: வேறு எதற்காக விசனிக்கிறேனே வென்ருல், நீர் காலால் இட்ட குற்றேவல்களைத் தலையால் செய்யும் பாக்கியம் நீங்கிவிடுதற்காகவே விசனிக்கிறேன்'' என்று தன் நிலைமையை ஆராய்ந்தறிந்து கூறினுள்.

### கௌதமர் அகலிகையின் சாபம் நீங்க அநுக்கிரகம் செய்து அது நீங்கும் காலத்தைக் கூறுதல்.

கக௩. "நீ சிலகாலம் கல்லாக இருத்தலே நீ செய்த தோஷத்துக்குப் பரிகாரமாகும். நீ மறுபடியும் எனக்கு மனைவியாகப் பெறுவாய். திருமால் கோதண்டபாணியாய் ஸ்ரீ ராமபிரானக அவதரிப்பார். அக்காலத்தில் அவர் வன சஞ்சாரம் செய்யும்போது அவருடைய திருப்பாதம் தோயப்பெற்று அதனல் உன்னுடைய பழைய வடிவத்தைப் பொருந்துவாய்'' என்று மனம் உவந்து கௌதமர் அநுக்கிரகம் செய்தார்.

### அகலிகை தன் சாபத்தை நிவிர்த்தி செய்ததற்கு நன்றிஅறிமொழி கூறுதல்.

ககச இவ்வாறு கௌதமர் கூறிய அருள் மயமான வார்த்தைகளை அகலிகை கேட்ட மாத்திரத்திலே எலும்பும் உருகும்படி உருகி மிகுந்த நன்றியறிஉணர்ச்சி உடையவளாகி "கொலை புரிந்தாற்போலும் தீங்கைச் செய்தவர்களுள் என்னைப் போன்ற பாவியும் அப்படிப் பட்ட தீங்கைப் பொறுத்துக்கொண்டவர்களுள் உம்மையொத்தபுண்ணியசாலியும் எங்கும்எக்காலத்தும் இல்லை.''

### அகலிகை மன அமைதி பெற்றுக் கல்லாகுதல்.

ககரு. "உலக நாயகனன கடவுளுக்கு அவனல் எல்லா நன்மைகளையும் அடைந்துள்ள உலகம் என்ன பிரதிப் பிரயோஜனம் செய்யக்கூடும். அவ்வாறே எனக்கு நாயகரானவருக்கு நான் செய்யக்கூடிய பிரதிப் பிரயோ

ஜனமும் இல்லை'' என்று சொல்லி "யான் மன அமைதி நிறையப்பெற்றேன்'' என்று தான் சொல்லக்கருதியதைச் சொல்லி முடித்தாள். பின்பு கல்லாகிக் காட்டிலே அமர்ந்தாள்.

### தேவர்கள் இந்திரனுக்குச் சாப விமோசனம் செய்யும்படி கௌதமரைப் பிரார்த்தித்தல்.

கககூ. இந்திரன் ஒளித்துக்கொண் டிருந்ததனால் தேவ ராச்சியமானது ஆளும் அரசனில்லாமல் சீர்குலைந்து கலக்கமுற்றது. அதனால் தேவர்கள் தம் அரசனாகிய இந்திரனை எங்கும் தேடிக்காணாமல் தம் குருவாகிய வியாள பகவானிடம் போய், அவன் எங்குள்ளான்? அவனுக்கு யாது நேர்ந்தது? என்று வினவ, அவர் கௌதமர் சாபத்தினால் மறைந்திருக்கிறா னென்று கூற, அவர்கள் கௌதமரிடம் சென்று காலில் வீழ்ந்து நமஸ்கரித்து இந்திரனுக்குச் சாப நிவிர்த்திசெய்யும்படி பிரார்த்திக்க, அவர், அவன் செய்த சுற்றத்துக்குத் தண்டனை யில்லாமற் போகக்கூடா தென்றும், அவனுடைய தண்டனையினால் மற்றவர்கள் வருந்தலாகாதென்றும் கருதி, அவனுக்கு விதித்த தண்டனை தண்டனையாகவே யிருக்கும்படியாகவும் அதனால் நிரபராதிகளான அவனைச் சார்ந்த பலரும் வருந்தாம லிருக்கும்படியாகவும் ஆலோசித்துப் பின்வருமாறு கூறினர்.

### கௌதமர், இந்திரனுக்கிட்ட சாபத்தை நீக்காமல் அதனை ஒருவாறு மாற்றுதல்.

ககஎ. "இந்திரன் இப்போது அடைந்துள்ள உருவம், அவனுடைய குற்றத்தை நினைப்பூட்டி மனவருத்தம் உண்டாக்கிக்கொண்டு, இப்போதுள்ளயடியே அவனுக்கு எப்போதும் தோன்றும். ஆயினும் அந்த உருவம் பிறர் பார்வைக்கு எப்போதும் அழகான உருவமாகத் தோன்

றுவதாகும். ஆதலால் அவன் இனி நாணம் அடையாமல் அவனுடைய அரசை முன்போல ஆள்வானுக."

கக௮. என்று கௌதமர் அநுக்கிரகம் செய்த பின்பு, மற்றவர்கள் கண்டு சந்தோஷிக்கும்படி விளங்கிய இந்திரனுடைய உருவமானது அவனுக்குப் புண்போன்று அவனுடைய குற்றத்தை ஒவ்வொரு கணமும் நினைவுகூரச்செய்து வெட்கப்படுத்தி வருத்தியதுபோல, தேவலோக வாசிகளுக்கெல்லாம் சந்தோஷம் உண்டாகும்படி உயர்வுபொருந்திய அவனுடைய அரசாட்சியும் "வானுயர் தோற்ற மெவன்செய்யும் தன்னெஞ்சந் தானறி குற்றப் படின்" என்றவாறு, அவனுடைய நெஞ்சு உணரும் குற்றம் உண்மையினால், அவனுக்குத் துன்பத்தைச் செய்தது.

## அகலிகை சாபம் நீங்குதல்.

கககூ. ஸ்ரீராமபிரான் அகலிகை கல்லாகக் கிடந்த காட்டுவழியே செல்லும்போது, அந்தக் கல்லின்மேல் அவருடைய பாதம் படவே, அது அகலிகையாக உருமாறியது. உடனே அப்படி உருமாறியவள் யாரென்று அவர் தெரிந்துகொள்ளும்படி அவரோடுகூடச் சென்றுகொண்டிருந்த விசுவாமித்திர முனிவர், அவள் கௌதம முனிவருடைய பத்தினி யென்று கூறி, அப்படிப்பட்ட மகருஷி பத்தினிக்குக் கல்லாகும் கதி எவ்வாறு நேர்ந்தது, எவ்வாறு திரும்பப் பெண்ணானளென்று தெரியும்படி இதற்கு முன்னே கூறப்பட்ட அவளுடைய வரலாறு முழுவதையும் மொழிந்தார்.

## ஸ்ரீ ராமரை நோக்கி விசுவாமித்திரர் அகலிகையின் சாப நிவிர்த்தி விஷயமாகக் கூறுதல்.

க௨0. "தீவினைப் பாம்பினால் விழுங்கப்பட்டு, அதனால் தேசு நீங்கி மறைவுற்றிருந்து பின்பு அப்பாம்பு வா

யினின்றும் மீள உமிழவே வெளிப்பட்டுப் பிரகாசியா நின்ற சந்திரன்போல இவள் விளங்குகின்றாள். ஸ்ரீராமரே! பார்ப்பீராக."

கஉக. "வன்மையான கொலைபுரிந்தோர் முதலிய மஹா பாதகர்களும் உம்முடைய மென்மையான திருவடியை நினைக்கவே எல்லாப் பதவிகளிலும் சிறந்த மோக்ஷ பதவியையே அடைவார்களானால், அப்படிப்பட்ட பாதத்தைத் தொடவே செய்யும் அரிய பேறு பெற்ற இவள் கேவலம் தன்னுடைய பழைய நிலைமையைத் திரும்ப அடைந்தது ஆச்சரியமாமோ?"

கஉஉ. "உமது இனிய பாதம் பொருந்தப் பெற்றதனால் கல்லுருவம் நீங்கி இங்கே நிற்கின்ற இந்த மாது, கற்பிழந்ததற்குப் பின்னும் கல்லாவதற்கு முன்னும் இருந்த அசுத்தமான தேகத்தை அடைந்திருக்கிறாளோ என்றால், இல்லை. கற்பிழக்கு முன்னிருந்த சுத்த தேகத்தை அடைந்திருக்கிறாளோ என்றால் அதுவுமில்லை. வேறு எத்தன்மையான தேகத்தை அடைந்திருக்கின்றாள் என்றால், கற்பிழக்குமுன் இருந்த தேகத்தைத் தோற்றத்தில் ஒத்து உண்மையில் அதனினும் அதி பரிசுத்தமானதும் அது கற்பிழந்து கெட்டதுபோல என்றும் கெடக்கூடாததுமான தேகத்தை அடைந்திருக்கின்றாள்."

கஉஉ-அ. "இவளுடைய பூர்வதேகம் பிரமாவின் கையினால் செய்யப்பட்டது. இவளுடைய பிரகிருததேகமோ, உமது திருப்பாதம் பிரசாதித்தருளப் பெற்றது. அந்தச் செயற்கையான தேகம் கற்பிழந்து கறையுற்றொழிந்ததுபோல, இந்தச் சுயம்புவான தேகம் அசுத்தமாகுதலாவது அழிதலாவது எக்காலத்தும் இல்லாததாம்."

கஉ௩. "உமது திருப்பாதம் தோய்தலால், கல் கனியா நின்றது (அகலிகையாகிய கன்னிகையாக நின்ற தன்மை,) அந்தத் திருப்பாதங்களைத் தியானித்தலால் அடியராவர்களுடைய நெஞ்சக்கல், கனியாநின்ற செயல் காட்டும் (அடியராவாருடைய நெஞ்சக்கல்லானது கனிந்து உருகாநின்ற செயலைக் காட்டுகின்றது). நீர் எய்தலால் (அம்பெய்தலால்) முந்திய காட்டினிடைக் கொடியாள் மாய்ந்தாள் (முந்திய காட்டினிடத்துக் கொடியாளாகிய தாடகை இறந்து மறைந்தாள்). இந்தக் காட்டில் நீர் எய்தலால் (வந்ததனால்) இடைக் கொடியாள் தோன்றினாள் (இடையாகிய கொடியை யுடையாளாகிய அகலிகை பிறந்து தோன்றினாள்).

கஉ௩-அ. "உமது திருப்பாதங்கள் தீண்டுதற்கு முன்பே, அந்தப் பாதங்களிற் படிந்திருந்த தூள்பட்டதனாலேயே வன்மையான கல் மென்மையான பெண்ணாக ஆயினதென்றால், உமது ஸ்ரீ பாத மகத்துவத்தை யார் தாம் வாயாரப் புகழாதிருப்பார்?

கஉ௩-ஆ. "புற்பூண்டுகளுக்கும் உள்ள ஸ்பரிஸ உணர்ச்சியாகிய ஓரறிவுகூட இல்லாமற் கிடந்த கல்லே, உமது திருவடியால் ஆறறிவுடைய ஸ்த்ரீரத்நமாகி விளங்குமானால், அந்த ஆறறிவுகளையும் உடைய மக்களாயுள்ளார் உமது திருப்பாதங்களால் அடையக் கூடாத பேறுகளும் உண்டோ?"

கஉ௪. "நீர் முன்னாளில் தோளால் கடைந்ததனால் கடலிலே மஹாலக்ஷ்மி உதித்தாள். இந்நாளில் தாளால் மிதித்ததனால் கல்லிலே அஹல்யை உற்பவித்தாள். உமது தோளா லுண்டான அவள் உமது தோளை அடையப்

பெற்ருள். உமது தாளால் உண்டான இவள் உமது * தாளேயாகிய கௌதம முனிவரை அடைதல் பொருத்தமானதே."

கஉ௫. "இவள் கற்பிழந்து மேன்மை நீங்கித் தாழ்வடைந்த குறைவு விளங்கும்படி, (இவள் கற்பிழந்து கல்லானதற்கு அறிகுறியாக உள்ள) அம்மியின்மீது பெண்கள் கல்யாண காலத்தில் தம் கால் பொருந்த மிதிப்பார்கள். இவள் உமது திருப்பாதம் தீண்டப்பெற்ற மாட்சிமை விளங்கும்படி பெரியோர் தினந்தோறும் காலையில் தூக்கம் நீங்கி எழும்பொழுது இவளைத் தமது நெஞ்சிலே தியானஞ்செய்துகொண்டு எழுவார்கள். (இவ்வாறு இவள் சிறுபெண்களும் காலால்மிதிக்கவும் ஆன்ற பெரியோரும் நெஞ்சால் மதிக்கவும் பெற்றுக் கற்பிழப்பார் அடையும் இழிகதியையும் உமது திருவடிபற்றுவார் அடையும் உயர் பதவியையும் விளக்கிக் கொண்டிருப்பாள்.)"

கஉ௬. "தீய சிந்தையுள்ள இந்திரன் கையால் தீண்டிய பெண் கல்லாகவும், தூய சிந்தையுள்ள இராமபிரான் காலால் தீண்டிய கல் பெண்ணுகவும் நேர்ந்ததனுல், எப்பொருள்களின் தன்மைகளையும் அறியும்படி சிந்திக்கும் இயல்புடையார், நல்லாரைச் சேர்தலால் நன்மை வருமென்ற உண்மையையும் தீயாரைச் சேர்தலால் தீமை வருமென்ற உண்மையையும் தெரிந்துகொள்வார்கள்."

கஉ௭. "கடவுள் தம் தொண்டர்கள் தவறிப்பாவஞ் செய்து அதனுல் திருவடிக்கு அந்நியராகிப் பின்பு பாவஞ் செய்தது தவறு என்று நினைத்து வருந்துவார்களானுல், அவர்கள் செய்த பாவத்துக்குத் தக்கபடி அவர்களைத்

* அடியாரைத் திருவடி என்னும் வைணவ வழக்கம்பற்றி ஸ்ரீராமபிரானுடைய தாளேயாகும் கௌதமரென்று விசுவாமித்திர முனிவர் கூறினர்.

தண்டித்துத் திரும்பவும் தம் தொண்டராக்குதல்போல, இவள் தன்னிலையினின்றும் வழுவிக் கற்பிழந்து பத்தினித் தன்மை நீங்கிப் பின்பு தான் கற்பிழந்தமையை நினைந்து வருந்த இவள் கற்பிழந்ததற்குத் தக்க தண்டனை அடையச்செய்து திரும்பவும் முன்போலத் தமக்குப்பத்தினியாகும்படி அருளியிருக்கிற கௌதமரை ஒப்பார் ஒருவரும் இலர்."

கஉஅ. "கலப்பற்ற சுத்தத் தங்கம், செம்பு முதலிய வேறு உலோகக் கலப்புற்றுப் பழுதடைந்து பின்பு புடமிடப்பட்டு அதனால் பழைய சுத்தத்தங்கமே ஆதல்போல, ஆதியில் பரிசுத்தமாயிருந்த இவள் இந்திரன் கலப்பினால் அசுத்தமடைந்து சாபமிடப்பட்டு அதனால் பழைய பரிசுத்தமடைந்திருக்கிறாள். அன்றியும் இயல்பாக இனிமையான பால் தீயினால் காய்ச்சப்பட்டு முன்னினும்அதிக இனிமை உறுவதுபோல, இயல்பாகவே இனிய குணமுடைய இவள் சாபத்தினால் வருத்தப்பட்டு முன்னினும் அதிக இனிய குணமுடையவளாயிருக்கிறாள். ஆதலால் இவள் இப்போது கௌதமருக்குச் சிறந்த அன்புடையவளாவாள்" என்று சொன்னார்.

### கௌதமர் அகலிகையை அங்கீகரித்தல்.

கஉகூ. பின்பு விசுவாமித்திர முனிவரும் ஸ்ரீராமரும் அகலிகையுடன் கௌதமரிடம் சென்று அவரிடம் அவளைச் சேர்த்துவிட்டு விடைபெற்றுக்கொண்டு தம்வழியே சென்றார்கள். கௌதமர் அன்போடு அவளைத் தமது பத்தினியாக அங்கீகரித்து இல்வாழ்க்கையை அவளைப் பிரியுமுன்பு நடத்தியதுபோல நடத்துவாராயினர்.

---

3719

## வாழ்த்து.

இல்வாழ்வு வாழ்வதாக. அந்த இல்வாழ்வு நடந்தேறுவதற்குச்சாதனமாக ஈஸ்வரனுடைய திருவருள் மழை பசுக்கள் பெரியோர் அவர்கள் அருளிய நூல்கள் ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியாகிய நமது மன்னர் பெருமானுர் அவருடைய சந்ததியார் எல்லாம் செழிப்புற்று வாழ்க.

அகலிகை வெண்பா வசனம்

முற்றுப்பெற்றது.

3719

## WORKS BY

# V. P. Subramania Mudaliar, G. B. V. C.

*(Dy. Superintendent, Civil Veterinary Dept., Madras.)*

### 1.—A Tamil translation of Paradise Lost, Book 1 in Viruttam Metre.

With a prose rendering of the same, a life of Milton, (prescribed as text book for the Intermediate Examination of 1911), the main story of Paradise Lost, and copious commentaries and notes in Tamil.

[With a metrical introduction in Tamil by Rao Bahadur C. W. Tamotharam Pillai Avergal, B. A., B. L.]

Recommended by the Text Book Committee and approved by the Director of Public Instruction for use in classes V and VI in High Schools.

(Containing more than 200 pages)

In thick board As. 12. In full cloth with gilt letters. Rs. 1-4-0.

*Extract from select opinions.*

Rev. Dr. G. U. Pope—We have no words but of hearty commendation for the way in which the first instalment of the work has been completed ........We feel bound to say, after an exceedingly minute and careful study of the lines, that the translator has succeeded to a very great—indeed a surprising—degree .........the writer's prose Tamil style is remarkably good.

[The Rev. Dr. again appreciatively refers to this work in the introduction to his monumental translation of Tiruvasakam.]

Rev. T. Walker, M. A., C. M. S.—I had heard of its excellence from several sources.........I can recommend your rendering most heartily as being both true poetry and a faithful representation of the original.

Mahamahobhadyaya Mr. V. Swaminathier—(Translated). The style of the poetical as well as the prose section is excellent. The work, though a translation, is so composed that it reads easy and clear like an original work in Tamil. It may be said to be a production worthy of the author's proficiency in grammar and literature of the Tamil language.

II.—Kombi Viruttam.

With an introduction by Mahamahobhadyaya Mr. V. Swaminathier. Price 4 As. Not in stock.

*Extracts from select opinions.*

Rao Bahadur Mr C. W. Tamotharam Piliai, B. A., B. L.—Your Kombi Viruttam was really a mental feast to me.........The style also is very Charming. Your notes adopt the book to be read by all, the learned and the student, with equal interest.

Mr; E. S. M. Senathi Raja, LL. B., Barrister-at-law, M. R. A. S. &c.—I must congratulate you on adding to modern Tamil literature a work not unworthy of classical times.

Mr. K. C. B. Kumarakula Singh Mudaliar, Tamil Interpreter to H. E. the Governor of Ceylon.—It compares favourably, in sweetness and sentiments, with similar works of recognised merit in our extensive

Tamil literature while it bears many marks of originality. The purity of diction has struck me specially as worthy of commendation.

III.—Nellaichchiledaivenba.

[An Original poem in Tamil with notes.]
Price 2 As.

**IV.—A Tamil translation of Col. Mill's Indian Stock Owners' Manual** (not in stock, Price 2 Rs)

**V.—A Tamil translation of "The More Deadly Forms of Cattle Diseases in India."** (Published by Government and may be obtained from Government Press, Madras.)

**VI.—A Tamil translation of Herbert Spencer's Edudation, Part 1,** (Containing the first two chapters) by the same author jointly with Messrs. S. V. Kallapiran Pillay B. A. and C. Appavu Pillai, L. M. & S. Price Re. 1.

**VII.—Life of Jhon Milton in Tamil** (a part of book No. 1 prescribed for Intermediate Examination, 1911) Price 4 as.

**VIII.—Preventive Inoculation and its uses in Tamil** (Price one anna.)

*All the above books except II IV and V can be had of Mr. V. P. Ramalinga Mudaliar, Vellacal, Surandi Post, Tinnevelly District.*

## வெ. ப. சுப்பிரமணிய முதலியார்
## (சென்னைப் பிரஸிடென்ஸி ஸீவில் வெற்றெறிநெறி டிபார்ட்டுமென்று டிப்டி சூப்பிரின்டென்டெண்டு)
## இயற்றிய நூல்கள்.

### 1. சுவர்க்கநீக்கம் முதற்காண்டம்,

"பாரடைஸ் லாஸ்டு" என்னும் இங்கிலிஷ் காவியத்திலிருந்து விருத்தப்பாவில் மொழிபெயர்த்து, மிலிட்டனூர் சரித்திரம் (இச்சரித்திரம் சென்னை யூநிவர்ஸிட்டி 1914-ம் வருஷத்து இன்றர் மீடியேற்றுப் பரீக்ஷா பாடமாக நியமிக்கப்பட்டது) சுவர்க்க நீக்கக்கதை சுவர்க்கநீக்க முதற்காண்ட வசனம் சுவர்க்க நீக்கப் பொது வியாக்கியானங்கள் மேற்படி முதற்காண்டச் சிறப்பு வியாக்கியானங்கள் அரும்பதவிளக்கம் இவைகளுடன் பதிப்பித்தது.

ராயபஹதூர் சி. வி. தாமோதரம் பிள்ளை யவர்களால் சிறப்புப் பாயிரம் அளிக்கப்பெற்றது,

பாடபுஸ்தக கமிட்டியாரால் (Text Book Committee) தெரிந்தெடுத்துச் சிபாரிசு செய்யப்பட்டு வித்தியா இலாகாத் தலைவரால் (Director of Public Instruction) ஹைஸ்கூல்களில் ஐந்தாவது ஆறுவது வகுப்புகளில் உபயோகிக்கத் தக்கதென்று அங்கீகரிக்கப் பெற்றது.

(200-க்கு அதிகமான பக்கங்கள் உள்ளது)

திண்மையான அட்டையுடன் ரூ 0-12-0.

காலிகோ கட்டடம் சுவர்ண எழுத்துக்களுடன் ரூ 1-4-0

---

## சில பண்டித சிரேஷ்டர்களின் அபிப்பிராயசாரம்.

பிரம்மஸ்ரீ, மஹாமஹோபாத்யாயர் வே. சாமிநாதையாவர்கள்:—இதில் உள்ள செய்யுள் நடையும் வசனநடையும் நிரம்ப நன்றாக இருக்கின்றன. இந்நூல் வேறொரு பாஷையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டிருந்தும், படிக்குங்காலத்தில் அவ்வாறு தோன்றாமல் நடை விசேடத்தால் நூதனமாகச் செய்யப்பட்ட மூலநூல்போல விளங்கிப் பொருளை வருத்தமின்றி நன்கு புலப்படுத்துகின்றது.

"கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச், செல்வப் புதல்வனே யீர்ங்கவி" என்று ஆன்றோர் கூறியவண்ணம், இந்நூல் முதலியாரவர்களுடைய இலக்கிய இலக்கணப் பயிற்சிக்குத் தக்கவாறே அமைந்ததென்று சொல்லலாம்.

டாக்டர். ஜி. யூ. போப்பையாவர்கள்:—(இங்கிலிஷிலிருந்து மொழிபெயர்த்தது) இந்நூலின் முதற்பகுதி முற்றப் பெற்றிருக்குந் தன்மையைப்பற்றி மனப்பூர்வமான துதிமொழியன்றி வேறொன்றும் கூறவிடமில்லை. இம்மொழி பெயர்ப்பை அதிநுட்பமாகக் கவனஞ் செலுத்தி ஆராய்ச்சி செய்த யாம், மொழிபெயர்த்தவர் மூலப் பெருங்கிரந்தத்துக்கிணங்க ஞட்டுப்பாடின்றியொழுகும் இனிய தமிழ்க்கவிகளமைத்ததில், மிக அதிகமான—மெய்யாகவே ஆச்சரியகரமான—சித்தியடைந்திருக்கிறாரென்று கூறக்கடவேம்.

[பின்னும் மேற்படியார் தமது திருவாசக ஆங்கிலமொழி பெயர்ப்புப் பெருங்கிரந்தத்தின் முகவுரையில் இந்நூலை நன்கு மதித்துக் கூறியிருக்கின்றனர்.

வாக்கையாவர்கள், M, A, C, M, S.—(இங்கிலீஷிலிருந்து மொழிபெயர்த்தது) இதன் (சுவர்க்கநீக்கத்தின்) சிறப்பைப்பற்றி நான் பலராலும் அறிந்திருக்கிறேன்......... வசனபாகங்களின் நடையழகுக்கே இப்புஸ்தகம் யாவரும்வாங்கி வாசிக்கத்தக்கது .........இம்மொழி பெயர்ப்பு, உண்மைக் கவிக்குரிய லக்ஷணங்களை உடையதாயிருப்பதனோடு மூலநூற்கருத்தை உள்ளபடியே வெளியிடுகிறதனால் ஆதரிக்கத்தக்கதென்று முழுமனத்துடன் கூறுகின்றேன்.

### II. கோம்பிவிருத்தம்.

பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்யாயர் வே. சாமிநாதையாவர்களால் சிறப்புப்பாயிரம் அளிக்கப்பெற்றது. விலை அணு 4.

ம-ா-ா-ஸ்ரீ ராய்பஹதூர் சி. வி. தாமோதரம்பிள்ளையவர்கள்:—(இங்கிலிஷிலிருந்து மொழிபெயர்த்தது) கோம்பிவிருத்

தம் என் மனத்துக்கு விருந்தாகியது......கோம்பி விருத்தத்தின் நடை மிகவும் மனோகரமானது. அதன் உரை அதனைவாசிக்கும் பண்டிதரும் வித்தியார்த்திகளும் ஒரு நிகராக இன்பம் அனுபவிக்கும்படி உதவுகின்றது. (புஸ்தகம் கையிருப்பில்லை)

## III. நெல்லைச்சிலேடை வெண்பா.

இதுவும் ஷை மஹாமஹோபாத்யாயரவர்கள் சிறப்புப்பாயிரம் பெற்றது.

விவேகபானு:—திரிபும் சிலேடையும் செம்பாகமாகவே அமைக்கப்பெற்றிருத்தலால் சிறிது ஊன்றிநோக்கில் பொருள் காண்டல் எளிதே. பொருள் புலப்பட்டவுடன் மனத்து எழும் பெருமகிழ்ச்சிக்கு வரம்பு காண்டலரிதாம். நெல்லை என்னும் சொல்லை அசாகவைத்து நூறு சிலேடை கூறுதல் மிகக் கொண்டாடற்பாற்று: செய்யுளியற்றும் வன்மையுடையார் இதன்றிறங் கண்டு பிரமிப்பது திண்ணம். இதற்கு உரையும் இருக்கின்றது.

இதன விலை 0 2 0

## IV. இந்துதேசத்துக் கால்நடைக்காரர் புஸ்தகம்.

(இங்கிலிஷிலிருந்து மொழிபெயர்த்தது) விலை ரூ. 2 0 0 (புஸ்தகம் கையிருப்பில்லை)

## V. இந்தியாவில் கால்நடைகளுக்குக் காணுகிற அதிக பிராணபாயமான வியாதிகளைப் பற்றிய புஸ்தகம்.

இங்கிலிஷிலிருந்து மொழிபெயர்த்துக் கவர்ன்மென்டாரால் பிரசுரிக்கப்பட்டது, சென்னைக் கவர்ன்மென்று அச்சுக்கூடம் சூப்பிரிண்டெண்டெண்டுக் கெழுதி வாங்கிக்கொள்ளலாம்.

## VI. கல்விவிளக்கம் முதற்பாகம்.

ஷை வெ. ப, சுப்பிரமணிய முதலியார், ஸ்ரீ S. V. கள்ளப்பிரான் பிள்ளையவர்கள் B. A. ஸ்ரீ அப்பாவுப்பிள்ளையவர்கள் L. M & S. என்பவர்கள் சேர்ந்து இங்கிலிஷிலிருந்து மொழி பெயர்த்தது. விலை ரூபா 1 0 0

VII. ஜான் மில்ட்டனார்சரித்திரம். இது மேலேஉள்ள 1-வது புஸ்தகத்தின் ஒருபகுதி. 1911-ம் வருஷத்து இண்டெர் மீடியேட்டு பரீக்ஷாபாட புஸ்தகம். விலை அணு 0 4 0

VIII. கால் நடைகளுக்கு வியாதிவராமல் அம்மைகுத்தலும் அதன் உபயோகங்களும். விலை அணு ஒன்று.

☞ மேற்குறித்த புஸ்தகங்களில் II IV V லக்கமிட்ட புஸ்தகங்கள் தவிர மற்றெல்லாப் புஸ்தகங்களையும் திருநெல்விவேலி ஜில்லா, சுரண்டைப்போஸ்டு, வெள்ளகால் ம-ா-ா-ஸ்ரீ V. P. ராமலிங்க முதலியாரவர்களிடம் வாங்கலாம்.